என்னும்) தண்டனை. இவர்களில் ஒருவர் முஹ்ஸினாகவும், மற்றவர் முஹ்ஸினாக இல்லாமலுமிருந்தால் முஹ்ஸினைக் கல்லாலெறிந்து கொல்ல வேண்டும், முஹ்ஸினாக இல்லாமலிருப்பவருக்கு (ஜில்து என்னும்) கசையடி தண்டனை விதிக்க வேண்டும்.

முஹ்ஸின் என்பது பருவ வயதை யடைந்தவராகவும், புத்தி சுவாதீன முள்ளவராகவும், முஸ்லிமாகவும், அடிமையாக இல்லாமலும் இருந்து நியாயமான முறையில் ஒரு பெண்ணை மணந்து அவளுடன் உடலுறவு கொண்டவருக்குப் பெயர். பெண்ணுக்கும் இதே முறை.

முஹ்ஸினாக இருப்பவர் விபச்சாரம் செய்து விட்டால் அவரைக் கல்லாலெறிந்து கொல்ல வேண்டும் என்ற தண்டனை தவ்ராத் வேதத்தில் விதிக்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த ஆயத்தின் மூலமாக இவ்விதி மாற்றப்பட்டது. பிறகு, இவ்விதி இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்ட ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. ஆயுள் காலம் வரை வீடுகளில் தடுத்து வைத்து பாதுகாப்பு கைதியாக வைக்க வேண்டும் என்ற தண்டனை உபாதத்துப்னுஸ் ஸாமித் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறிய ஹதீஸின் மூலமாக மாற்றப்பட்டது. "கன்னியழியாதவர் கன்னியழியாதவளுடன் விபச்சாரம் செய்தால் நூறு கசையடியும், பொது மக்களைச் சிரிக்க வைத்தலும் தண்டனையாகும். கன்னியழிந்த ஆணும் பெண்ணும் விபச்சாரம் செய்தால் நூறு கசையடியும், கல்லாலெறிந்து கொல்லுதலும் தண்டனை" என்பது அந்த ஹதீஸின் கருத்து. பின்னர் இந்த விதியை **"விபச்சாரம் செய்யும் பெண்ணும் ஆடவரும் இவ்விருவரில் ஒவ்வொருவருக்கும் நூறு கசையடி அடியுங்கள்"** (ஸூரத்துன்னூர் 2) என்ற ஆயத்து மாற்றி விட்டது. ஆகவே, விபச்சாரம் செய்யும் ஆண் பெண்ணுக்குக் கசையடி கொடுப்பது (ஹத்து என்னும்) தண்டனையாக இருந்தது. பின்னர், முஹ்ஸினுக்குக் கல்லாலெறிந்து கொல்ல வேண்டும் என்ற தண்டனை மாகிஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது ஹதீஸின் படி ஏற்பட்டது. முஹ்ஸினல்லாதவர்களுக்கு ஆயத்தில் கண்டபடி கசையடி தண்டனையே ஊர்ஜிதமாயிற்று **(துஃப்ஸீருத்தைஸீர்).**

எனவே, விபச்சாரம் செய்வதை விட்டு தவ்பாச் செய்வதும், மனிதர்களை இத்தொழில் புரிய விடாமற்றடுப்பதும் அவசியமாகும். விபச்சாரத்தொழில் நடைபெறுமிடங்களில் அங்குள்ளவர்களுக்கு தாஊன் என்னும் தொத்து நோயையும் தரித்திரத்தையும் விட்டு அல்லாஹு தஆலா சோதனை செய்வான். (திடீரென வரும் அகால மரணம், பிளேக், பேதி, வைசூரி முதலிய தொத்து நோய்களுக்கு தாஊன் என்று பெயர். முக்கியமாக வைசூரிக்கும் காலராவிற்கும் இந்தப் பதம் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது).

"கியாமத்து நாளில் விபச்சாரம் செய்தவர்களது வெட்கஸ்தலங்களைப் பிடித்திழுத்து அவற்றின் மீது நெருப்புக் கசைகளால் அடிக்கப்படும். அவர்கள் அவ்வடியின் வேதனை பொறுக்க மாட்டாமல் சப்தமிடுவார்கள். அப்போது நரகில் பாவிகளை வேதனை செய்யும் பணியைச் செய்பவர்களான ஜபானியாக்களென்னும் மலக்குகள் அவர்களை நோக்கி 'நீங்கள் அல்லாஹு தஆலாவிற்கு வெட்கிக்காமல் சிரித்து விளையாடிச் சந்தோஷமடைந்த போது இந்தச் சப்தம் எங்கே போய் விட்டது? என்று கேட்பார்கள்' என்று ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அருளப்பட்ட ஜபூர் வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- "லிவாத் என்னும் ஆண் புணர்ச்சி செய்பவர்கள் தவ்பாச் செய்வதற்கு முன்னதாக இறந்து விடுவார்களாயின் அவர்கள் கப்ருகளில் பன்றியின் உருவத்தில் எழுப்பப்படுவார்கள்" என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- "மிருகங்களில் பன்றியையும் கழுதையையும் தவிர வேறு எப்பிராணியும் லிவாத்துச் செய்யாது" என்று இமாம் இப்னுஸீரீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

إِنَّمَا التَّوْبَةُ عَلَى اللَّهِ لِلَّذِينَ يَعْمَلُونَ السُّوءَ بِجَهَالَةٍ

ثُمَّ يَتُوبُونَ مِن قَرِيبٍ فَأُولَٰئِكَ يَتُوبُ اللَّهُ عَلَيْهِمْ ۗ

وَكَانَ اللَّهُ عَلِيمًا حَكِيمًا ۝

17. தவ்பாவை அங்கீகரிப்பது அல்லாஹ்வின் மீது (விதியாக) இருப்பதெல்லாம் அறியாமையால் தீமையைச் செய்து, பிறகு விரைவில் தவ்பாச் செய்கிறார்களே அவர்களுக்குத்தான் – ஆகவே, அவர்கள் – அவர்களுடைய தவ்பாவை அல்லாஹ் அங்கீகரிக்கிறான். மேலும், அல்லாஹ் (தன் சிருஷ்டிகளை) நன்கு அறிபவனாக (இன்னும்) விவேகமுள்ளவனாக இருக்கிறான்.

اَلتَّوْبَةُ **அத்தவ்பத்து** என்பதற்கு மீளுதல் என்பது பொருள். ஆனால், இது அடியார்களுடன் சம்மந்தப்பட்டு வருமாயின் பாவத்தை விட்டு மீளுதல் என்பது கருத்து. அல்லாஹு தஆலாவுடன் சம்மந்தப் படுமாயின் அடியார்கள் கேட்கும் பாவமன்னிப்பை அங்கீகரித்து அவர்களது பாவங்களை மன்னித்தல் என்பது கருத்து. ஆகவே, அல்லாஹு தஆலாவே தன்னிடம் பாவமன்னிப்புக் கேட்பவர்களது பிரார்த்தனையை அங்கீகரித்து அவர்களுக்கு பாவமன்னிப்புச் செய்வதாக வாக்களித்திருப்பதால் அவன் தவ்பாவை அங்கீகரிப்பதைத் தன் மீது கடமைபோல் ஏற்படுத்தியுள்ளான். இப்படி அவன் செய்து கொண்டது அடியார்கள் மீது அவன் கொண்ட அளவற்ற கருணையே யாகும். ஆகவே, அறியாமல் தீமையைச் செய்தவர்கள் தவ்பாச் செய்தால் அதனை அங்கீகரிப்பதாக இந்த ஆயத்தில் வாக்கு அளித்துள்ளான்.

தவிர, அறியாமையால் தீமையைச் செய்தவர்கள் என்ற வசனத்தில் கூறப்பட்ட "அறியாமை" என்ற பதத்திற்குத் "தெரியாமை" என்பதும், தெரிந்து கொண்டே பாவம் செய்தால் அதனை அவன் மன்னிக்க மாட்டான் என்பதும் கருத்தல்ல. பாவம் செய்வதே அறியாமையாக இருக்கிறது. எனவேதான் "எவர் அல்லாஹ்விற்கு மாறு செய்கிறாரோ அவர் அறியாதவர் (ஜாஹில்)" என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், பாவமான தொழிலைச் செய்வதைக்

குறித்து அஜாக்கிரதையாக இருப்பதும், அதனால் விளையும் தீமையைக் குறித்துச் சிந்திக்காமலிருப்பதும் அறியாமையான செய்கைகளைப் போலவே இருக்கின்றன. ثُمَّ يَتُوبُونَ مِن قَرِيبٍ **பின்னர், விரைவில் தவ்பாச் செய்கிறார்களே அவர்கள்** என்ற இவ்வசனமானது அல்லாஹு தஆலா தவ்பாவை அங்கீகரிப்பதற்கு ஏற்படுத்திய ஒரு ஷர்த்தைப் போலிருக்கிறது. எனவே, இவ்வாக்கியத்திற்கு பாவம் செய்த பின்னர் சமீப காலத்திற்குள்ளாக தவ்பாச் செய்ய வேண்டும் என்பது கருத்து. சமீப காலம் என்பதற்குரிய காலவரையறையைக் குறித்து ஹதீஸில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வருமாறு.

ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வஃபாத்தின் சமயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "முஹம்மதே! தங்களுக்கு அல்லாஹு தஆலா ஸலாம் சொல்லி 'எவர் தனது மரணத்திற்கு ஒரு ஜும்ஆவிற்கு முன்னர் தவ்பாச் செய்கிறாரோ அவருடைய தவ்பாவை நான் அங்கீகரித்துக் கொள்வேன்' என்று கூறுகிறான்" என்று அறிவித்தார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஒரு ஜும்ஆ என்பது மிக அதிகம்" என்று கூறினார்கள். அப்பொழுது ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் திரும்பச் சென்று மறுடியும் வந்து நிச்சயமாக அல்லாஹ் தங்களுக்கு ஸலாம் சொல்லி, எவர் தனது மரணத்திற்கு ஒரு நாழிகைக்கு (ஸாஅத்துக்கு 24 நிமிடம்) முன்னதாக தவ்பாச் செய்கிறாரோ அவருடைய தவ்பாவை நான் அங்கீகரிப்பேன் என்று கூறுகிறான்" என்று கூறினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஒரு நாழிகை (ஸாஅத்து) மிக அதிகம்" என்று கூறினார்கள். பிறகு ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மறுபடியும் சென்று திரும்ப வந்து "நிச்சயமாக அல்லாஹ் தங்களுக்கு ஸலாம் சொல்லி, இது அதிகமாக இருந்தால் அவருடைய ஆன்மா தொண்டைக்குழிக்கு வந்து தனது நாவினால் மன்னிப்புக் கேட்க இயலாமலாகி விட்டாலும் அவர் அந்நேரத்தில் தனது செய்கைக்காக பச்சாதாபப்பட்டு, என்னிடம் வெட்கிப்பாராயின் அவரது பாவத்தை நான் மன்னிப்பேன், அதனைப்

பொருட்படுத்த மாட்டேன் என்று கூறுகிறான்'' என்று கூறினார்கள் என்று ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

''நிச்சயமாக அல்லாஹ் தனது அடியாரின் தவ்பாவை அவர் உயிர்விடும் தருவாயில் இல்லாமலிருக்கும் வரை அங்கீகரிப்பான்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். எனவே, இந்த ஹதீஸ்களிலிருந்து இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட ''சமீபகாலம்'' என்ற பதத்திற்கு பாவம் செய்ததிலிருந்து மரணத்திற்குக் கொஞ்சம் முன்னதாகவுள்ள எல்லாக் காலமும் என்பது கருத்து என்று விளங்குகிறது. அறிந்துகொள்! தவ்பாச் செய்வது மூமின்கள் மீது விதிக்கப் பட்டுள்ள கடமையாகும். இதற்கு நான்கு நிபந்தனைகள் இருக்கின்றன. 1. பாவம் செய்ததைக் குறித்து மனதில் கவலைப்படுதல். 2. பாவம் செய்வதை உடனே விட்டு விடல். 3. திரும்பவும் பாவம் செய்வதில்லை என்று உறுதி கொள்ளல். 4. இவ்வாறு பச்சாதாபப்பட்டு வருந்தி நடந்து கொள்வது அல்லாஹு தஆலாவைப் பயந்தும் அவனிடம் வெட்க மடைந்தும் செய்ய வேண்டும்.

ரிவாயத்து:- ''நாம் பிழை பொறுக்கத் தேடுவதைக் குறித்துப் பிழை பொறுக்கத் தேடவேண்டும் என்று இமாம் ஹஸன் பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஹளரத் ஹஸன் பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களது காலத்திலேயே இவ்வித நிலை இருந்ததென்றால், மனிதர்கள் அநியாய அக்கிரமங்களைச் செய்ய முனைந்து நிற்கிற இக்காலத்தின் நிலையைப் பற்றி என்னென்று கூறுவது என்று அல்கர்த்தபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَلَيْسَتِ التَّوْبَةُ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السَّيِّاٰتِ ۚ حَتّٰٓى اِذَا
حَضَرَ اَحَدَهُمُ الْمَوْتُ قَالَ اِنِّىْ تُبْتُ الْـٰٔنَ وَلَا
الَّذِيْنَ يَمُوْتُوْنَ وَهُمْ كُفَّارٌ ؕ اُولٰٓٮِٕكَ اَعْتَدْنَا لَهُمْ

عَذَابًا اَلِيْمًا ۝

18. மேலும், பாவங்களைச் செய்து கொண்டே இருந்த அவர்களில் ஒருவருக்கு மரணம் வந்து விட்ட நேரத்தில் ''நிச்சயமாக நான் (பிரார்த்தனை புரிந்து) மீண்டு விட்டேன் என்று சொல்லுகிறவர் களுக்கும் நிராகரிப்பவராகவே இருக்கும் நிலையில் இறந்தவர் களுக்கும் பாவ மன்னிப்புப் பிரார்த்தனை ஒப்புக் கொள்ளப் படுவதில்லை; அவர்கள்தாம் - அவர்களுக்காக நோவினை தரும் வேதனையைச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம்.

பாவத்தைச் செய்துவிட்டு அந்திய காலம் வரை தவ்பாச் செய்யாமலிருந்து, மரணம் வந்த பிறகு இப்பொழுது நான் தவ்பா செய்கிறேன் என்று கூறுபவர்களுக்கும் காஃபிர்களாக இறப்பவர் களுக்கும் தவ்பா அங்கீகரிக்கப்பட மாட்டாது என்பது இந்த ஆயத்தின் கருத்து.

மரணத்தின் அடையாளங்கள் தோன்றிய சமயத்தில் தவ்பாச் செய்தாலும் அது அங்கீகரிக்கப்படும். ஆனால், உயிரைக் கைப்பற்றுபவரான மலக்குல் மௌத்து வந்த பின்னர், உயிர் நீங்கும் போது தவ்பாச் செய்கிறேன் என்று கூறுவது அங்கீகரிக்கப்பட மாட்டாது. காஃபிர்கள் தங்கள் குஃப்ரான காரியங்களில் ஸ்திரமாக இருந்து மலக்குல் மௌத்து வந்த பின்னர் தவ்பாச் செய்தால் அந்த தவ்பாவும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

قَالَ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ صَاحِبَ الْيَمِيْنِ
اَمِيْنٌ عَلَى صَاحِبِ الشِمَالِ فَاِذَا عَمِلَ الْعَبْدُ حَسَنَةً يَكْتُبُ
لَهُ صَاحِبُ الْيَمِيْنِ عَشْرًا وَاِذَا عَمِلَ سَيِّئَةً وَاَرَادَ صَاحِبُ
الشِّمَالِ اَنْ يَكْتُبَ قَالَ صَاحِبٌ الْيَمِيْنِ اَمْسِكْ فَيُمْسِكُ
سِتَّ سَاعَاتٍ اَوْ سَبْعَ سَاعَاتٍ فَاِنْ اسْتَغْفِرْ فِيْهَا لَمْ يَكْتُبْ

عَلَيْهِ وَاِنْ لَمْ يَسْتَغْفِرْ كَتَبَ سَيِّئَةً وَاحِدَةً

ஹதீஸ்:- "(மனிதர்களது கிரியைகளை எழுதி வைக்கும் மலக்குகளில்) வலப்பக்க மிருப்பவர் இடப்பக்க மிருப்பவருக்கு தலைவராக இருக்கிறார். ஒரு அடியார் ஒரு நன்மை செய்தால் வலப்பக்க மிருப்பவர் அதனைப் பத்தாக எழுதி வைக்கிறார். அடியார் ஒரு தீமையைச் செய்து அதனை இடப்பக்க மிருப்பவர் எழுத ஆரம்பித்தால் வலப்பக்கமிருப்பவர் 'எழுத வேண்டாம் பொறும்' என்று கூறுவார். அதன்படி அவர் எழுதாமல் ஆறு அல்லது ஏழு ஸாஅத்து (24 நிமிடம்) நேரம் பொறுத்திருப்பார். இந்தக் காலத்தில் பாவம் செய்த அவ்வடியார் பாவமன்னிப்புக் கேட்பாராயின் அவரது பாவம் எழுதி வைக்கப்பட மாட்டாது. அவர் பாவமன்னிப்புக் கேட்பாராயின் அவரது பாவம் எழுதி வைக்கப்பட மாட்டாது. அவர் பாவ மன்னிப்புக் கேட்கவில்லையானால் ஒரே ஒரு பாவம் எழுதி வைக்கப்படும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا يَحِلُّ لَكُمْ اَنْ تَرِثُوا
النِّسَآءَ كَرْهًا ؕ وَلَا تَعْضُلُوْهُنَّ لِتَذْهَبُوْا
بِبَعْضِ مَاۤ اٰتَيْتُمُوْهُنَّ اِلَّاۤ اَنْ يَّاْتِيْنَ بِفَاحِشَةٍ
مُّبَيِّنَةٍ ۚ وَعَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ ۚ فَاِنْ
كَرِهْتُمُوْهُنَّ فَعَسٰۤى اَنْ تَكْرَهُوْا شَيْـًٔا وَّيَجْعَلَ
اللّٰهُ فِيْهِ خَيْرًا كَثِيْرًا ﴿۱۹﴾

19. விசுவாசங் கொண்டவர்களே! பெண்களை நிர்ப்பந்தித்து (அவர்களிடமிருந்து) நீங்கள் அனந்தரமாக்கிக் கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப் பட்டதல்ல. அப்பெண்கள் பகிரங்கமான

மானக்கேட்டை செய்தாலன்றி நீங்கள் அவர்களுக்குக் கொடுத்ததில் சிலதை(ப் பற்றிக்) கொண்டு போவதற்காக (வேறு கணவனை மணக்கவிடாமல்) அவர்களை நீங்கள் தடுத்து வைக்காதீர்கள். இன்னும், அவர்களுடன் நேர்மையாய் இணங்கி இருங்கள். எனவே, அப்பெண்களை நீங்கள் வெறுத்தால் (அவர்களை உடனே நீக்கிவிடாமல் கொஞ்சம் பொறுத்திருங்கள். (ஏனெனில்) ஒரு பொருளை நீங்கள் (அறியாமையினால்) வெறுக்கக்கூடும்; ஆனால், அதில் அல்லாஹ் அநேக நன்மையை ஏற்படுத்தியிருக்கவும் கூடும்.

அறிந்து கொள்:- இஸ்லாம் மார்க்கத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் போதிப்பதற்கு முன்னுள்ள காலத்தில் அறபியரில் ஒருவர் இறந்து போனால் அவருக்கு மிகவும் நெருங்கிய உறவினர் அவரது மனைவியின் மீது தனது துண்டைப் போட்டு அவரது சொத்தை நான் அனந்தராங் கொள்வது போல அவர் மனைவியையும் அனந்தரங் கொண்டேன் என்று கூறி விடுவார். இப்படிச் செய்வதால் அந்த பெண்ணுக்கு மற்றவரைப் பார்க்கினும் அவர்தான் அதிக பாத்தியம் உள்ளவராகி விடுவார். பிறகு, அவரிஷ்டப் பட்டால், புதிய மகர் ஒன்றுங் கொடுக்காமல் இறந்து போன மனிதர் கொடுத்த அந்த மகருக்கே அவளை திருமணம் செய்து கொள்ளலாம், அல்லது அவர் விரும்பினால் வேறொருவருக்கு அவளை திருமணம் செய்வித்து, அவளுடைய மகர்த் தொகையை அவர் வசூலித்து விட்டு அத்தொகையிலிருந்து அவளுக்கு ஒன்றுங் கொடுக்காமலிருந்து கொள்ளலாம், அல்லது அவள் தனது கணவனிடமிருந்து அனந்தரமாக அடைந்ததை அவளிடமிருந்து திரும்ப வாங்குவதற்காக அவளைச் சிறையில் வைத்துக் கஷ்டப்படுத்தலாம். ஆனால், கணவன் இறந்தவுடன் அவள் தனது குடும்பத்தாரிடம் சென்ற பின்னர், அவனது நெருங்கிய உறவினர் இவ்விதமாகத் தனது துண்டை அவள் மீது போட சந்தர்ப்பம் வாய்க்க வில்லையானால் அவள் தன்னைப் பற்றிச் சர்வ சுதந்திரமுள்ளவளாகி விடுவாள். இவ்வழக்கத்தை இறைவன் يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا يَحِلُّ لَكُمْ اَنْ تَرِثُوا النِّسَآءَ كَرْهًا **ஈமான் கொண்டவர்களே பெண்களை நிர்ப்பந்தித்து (அவர்களிடம் இருந்து) நீங்கள் அனந்தரமாக்கிக் கொள்வது உங்களுக்கு அனுமதிக் கப்பட்டதல்ல** என்ற வசனத்தின் மூலம் விலக்கி இருக்கிறான்.

அறிந்துகொள்:- ஒருவன் ஒரு பெண்ணை திருமணம் செய்திருக்க அவனுக்கு அவளிடம் வாழ விருப்பமில்லாவிடில் அவளை அவன் சிறைவைத்துக் கொள்வதுடன் நேர்மையாகக் குடித்தனஞ் செய்யாமல், அவள் தன்னிடமுள்ள பொருளைக் கொடுத்து விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காக அவளைக் கஷ்டப்படுத்துவான். இதுவும் அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. இவ்வழக்கம் கூடாதென்பது وَلَا تَعْضُلُوهُنَّ لِتَذْهَبُوا بِبَعْضِ مَا آتَيْتُمُوهُنَّ **இன்னும் அவர்களுக்கு நீங்கள் கொடுத்ததில் சிலவற்றை நீங்கள் (எடுத்துக்) கொண்டு போவதற்காக (வேறு கணவனை மணக்கவிடாமல்) அவர்களை நீங்கள் தடுத்து வைக்காதீர்கள்** என்ற வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அல்ஃபாஹி ஷத்துல் முபய்யனா என்பதற்கு பகிரங்கமான மானக்கேடு என்பது பொருளாக இருந்தாலும் இந்த இடத்தில் விபச்சாரம், கெட்ட குணம், வாயாடித்தனம் முதலியவைகள் என்பது கருத்து. ஆகவே, பெண்ணிடம் கெட்ட குணம், வாயாடித்தனம், விபச்சாரத் தொழில் முதலியவைகள் இல்லாமலிருந்தால் அவர்களைக் கஷ்டப்படுத்தி விலக்கி விடக்கூடாது என்பதும், இவ்விதமான தன்மைகளில்லாமல் மனதிற்குப் பிடித்தமாக இல்லை என்ற காரணத்திற்காக அவளைத் தள்ளி விடக்கூடாது என்பதும் மனிதருக்கு விருப்பமில்லாத ஒன்றில் பல நன்மைகள் இருக்கக்கூடும் என்பதும் இந்த ஆயத்தின் இறுதி வசனங்களின் கருத்து.

وَإِنْ أَرَدْتُمُ اسْتِبْدَالَ زَوْجٍ مَّكَانَ زَوْجٍ وَآتَيْتُمْ إِحْدَاهُنَّ قِنطَارًا فَلَا تَأْخُذُوا مِنْهُ شَيْئًا ۚ أَتَأْخُذُونَهُ بُهْتَانًا وَإِثْمًا مُّبِينًا ۝

20. மேலும், நீங்கள் ஒரு மனைவியுடைய ஸ்தானத்தில் வேறொரு மனைவியை மாற்ற (அதாவது ஒரு மனைவியை விலக்கி விட்டு மற்றொருவளை மணக்க) விரும்பி நீங்கள் அவளுக்குத்

தொகையைக் கொடுத்துமிருந்தால் (நீங்கள் கொடுத்த) அதிலிருந்து எதையும் அக்கிரமமாகத் திரும்ப எடுக்காதீர்கள். அதை நீங்கள் அக்கிரமமாகவும் பகிரங்கப் பாவமாகவும் எடுக்கின்றீர்களா?

ஒரு மனைவியை விவாகரத்துச் செய்து விட்டு அவளுக்குப் பதிலாக வேறு ஒருவளை திருமணம் செய்ய விரும்பினால் விருப்பப்படி செய்து கொள்ளலாம். ஆயினும், அவர்களில் ஒருவளுக்கு எவ்வளவு அதிகமாகப் பொருள் கொடுத்திருந்தாலும் அதிலிருந்து ஒரு பொருளையேனும் திரும்ப எடுப்பது கூடாது. அவ்வாறு எடுப்பது அநீதியும் பாவமுமாகும் என்பது இந்த ஆயத்தில் சொல்லப்பட்டுள்ள விதிகளாகும்.

وَكَيْفَ تَأْخُذُونَهُ وَقَدْ أَفْضَىٰ بَعْضُكُمْ إِلَىٰ بَعْضٍ وَأَخَذْنَ مِنكُم مِّيثَاقًا غَلِيظًا ۝

21. நீங்கள் ஒருவரோடொருவர் கூடி வாழ்ந்துள்ள நிலையில் - இன்னும், உங்களிடத்தில் அவர்கள் பலமான வாக்குறுதி வாங்கியிருக்கிற நிலையில் - அதை நீங்கள் எங்ஙனம் எடுக்க முடியும்?

அறிந்துகொள்:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நுபுவ்வத்து வருவதற்கு முன்னுள்ள (ஜாஹிலிய்யத்தான) அறியாமைக் காலத்தில் ஒருவர் ஒரு பெண்ணை மணந்திருக்கும் போது அவருக்கு வேறொரு பெண்ணின் மீது காதல் ஏற்பட்டால் முந்தின மனைவிக்குக் கொடுத்த மகரைத் திரும்ப வாங்கி, அதனைச் செலவு செய்து இவளை மணஞ் செய்யும் வழக்கமிருந்தது. அவ்வாறு கொடுத்த மஹர்ப் பணத்தைத் திரும்ப வாங்குவதற்காக அவள் மீது அவதூறு கூறுவது வழக்கமாக இருந்தது. இப்படிச் செய்யும் வழக்கம் இந்த ஆயத்தில் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

பெண்களை நேர்மையாக நடத்த வேண்டும். இல்லையேல் நியாயமாக விட்டுவிட வேண்டும் என்று திருக்குர்ஆனிலேயே

இறைவன் கட்டளையிட்டிருக்கிறான். திருமணம் செய்யும் போது மணமகனிடம் இதனைக் குறித்தும் வாக்குறுதி வாங்கப்படுகிறது. ஆகவே, இவ்வாறு செய்திருக்கும் வாக்குறுதிக்குத்தான் مِيثَاقًا غَلِيظًا **மீதாக்கன் கலீலா** அதாவது பலமான வாக்குறுதி என்று கூறப்பட்டது.

وَلَا تَنكِحُوا مَا نَكَحَ آبَاؤُكُم مِّنَ النِّسَاءِ إِلَّا مَا قَدْ
سَلَفَ ۚ إِنَّهُ كَانَ فَاحِشَةً وَمَقْتًا وَسَاءَ سَبِيلًا ﴿٢٢﴾

22. எனவே, பெண்களில் உங்கள் தந்தையர் திருமணம் செய்தவர்களை - ஆனால், இதற்கு முன் நடைபெற்று விட்டதைத் தவிர்த்து - நீங்கள் (இனிமேல்) திருமணம் செய்ய வேண்டாம். ஏனெனில், (இதற்கு முன் உங்களுடைய வழக்கமாக இருந்து வந்த) இது நிச்சயமாக (மிகக்) கெட்ட செயலாகவும் அல்லாஹ்வின் கடுங்கோபத்திற்குக் காரணமாகவும் இருக்கிறது. மேலும், இது மிகக் கெட்ட செயலாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நுபுவ்வத்து வருவதற்கு முன்னுள்ள அறியாமைக் காலத்தில் தங்கள் தந்தையர்களின் மனைவியரை அதாவது மாற்றாந் தாய்மார்களை திருமணம் செய்து கொள்ளும் வழக்கமிருந்து வந்தது. இக்கெட்ட வழக்கம் இந்த ஆயத்தின் மூலம் தடுக்கப்பட்டிருக்கிறது.

தவிர إِلَّا مَا قَدْ سَلَفَ **(ஆனால்) முந்திவிட்டதைத் தவிர** என்ற வசனத்திற்கு இந்தக் கட்டளை வருவதற்கு முன் நிகழ்ந்த திருமணங் களைத் தவிர என்பது கருத்தல்ல. ஏனெனில், இக்கருத்தின்படி ஏற்கனவே நடைபெற்ற திருமணங்களை அனுமதிப்பதாகவும் இனிமேல் அவ்வாறு செய்யக் கூடாது என்றும் ஏற்படுகிறது. இவ்விதமான கருத்து இந்த ஆயத்திற்கு இல்லை. இவ்விதமான திருமணத்தை இனி செய்யக் கூடாது என்பதும், இதற்கு முன் செய்த திருமணத்தை அங்கீகரிக்க வில்லை என்பதும்தான் இந்த ஆயத்தின் கருத்து. ஆகவே, இவ்வசனத்திற்கு "இதற்கு முன் இறந்து விட்ட பெண்களைத் தவிர" என்பது பொருள்.

حُرِّمَتْ عَلَيْكُمْ أُمَّهَاتُكُمْ وَبَنَاتُكُمْ وَأَخَوَاتُكُمْ وَ
عَمَّاتُكُمْ وَخَالَاتُكُمْ وَبَنَاتُ الْأَخِ وَبَنَاتُ الْأُخْتِ وَ
أُمَّهَاتُكُمُ اللَّاتِي أَرْضَعْنَكُمْ وَأَخَوَاتُكُم مِّنَ الرَّضَاعَةِ
وَأُمَّهَاتُ نِسَائِكُمْ وَرَبَائِبُكُمُ اللَّاتِي فِي حُجُورِكُم
مِّن نِّسَائِكُمُ اللَّاتِي دَخَلْتُم بِهِنَّ فَإِن لَّمْ تَكُونُوا
دَخَلْتُم بِهِنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ وَحَلَائِلُ أَبْنَائِكُمُ
الَّذِينَ مِنْ أَصْلَابِكُمْ وَأَن تَجْمَعُوا بَيْنَ الْأُخْتَيْنِ
إِلَّا مَا قَدْ سَلَفَ ۗ إِنَّ اللَّهَ كَانَ غَفُورًا رَّحِيمًا ﴿٢٣﴾

23. உங்கள் தாய்மார்கள், உங்கள் புதல்விகள், உங்கள் சகோதரிகள், உங்கள் (தந்தையுடன் பிறந்த) அத்தைமார்கள், உங்கள் (தாயுடன் பிறந்த சிறிய) பெரிய தாய்மார்கள், சகோதரனின் புதல்விகள், சகோதரியின் புதல்விகள், உங்களுக்குப் பாலூட்டிய உங்கள் தாய்மார்கள், பால்குடியினால் உண்டான உங்கள் சகோதரிகள், உங்கள் மனைவியர்களின் தாய்மார்கள், உங்கள் மனைவியர்களில் எவர்களுடன் உடலுறவு கொண்டிருக்கிறீர்களோ அத்தகைய பெண்களிலிருந்து (வேறு ஆடவருக்குப்) பிறந்து உங்கள் மடிகளில் உங்களால் வளர்க்கப்பட்ட பெண்கள் - ஆனால், அவர்களுடன் நீங்கள் உடலுறவு கொள்ளாமலிருந்தால் அவர்கள் (வேறு கணவனுக்குப்) பெற்ற பெண்களை நீங்கள் திருமணம் செய்து கொள்வது உங்கள் மீது குற்றமில்லை - உங்கள் முதுகெலும்புகளிலிருந்து உண்டான உங்கள் புதல்வர்களின் மனைவிகள், இரு சகோதரிகளை நீங்கள் சேர்த்து மனைவிகளாக வைத்திருப்பது ஆகியவைகள் உங்கள் மீது விலக்கப்

பெற்றிருக்கின்றன. (ஆனால்) இதற்கு முந்தியதைத் தவிர! நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாக பேரன்புடையோனாக இருக்கின்றான்.

حُرِّمَتْ عَلَيْكُمْ أُمَّهَاتُكُمْ **உங்களுடைய தாய்மார்கள்** உங்களுக்கு விலக்கலாக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதற்கு உங்கள் தாய்மார்களை நீங்கள் திருமணம் செய்வது உங்களுக்கு ஹராமாக்கப் பட்டிருக்கிறது என்பது கருத்து.

أُمَّهَاتُكُمْ **உம்மஹாத்துக்கும்** அதாவது உங்கள் தாய்மார்கள் என்ற பதத்திற்குப் பெற்ற தாய்மார்கள் என்பது மட்டும் கருத்தல்ல. பெற்ற தாய்மார்கள், தாயையும் தந்தையையும் பெற்ற பாட்டிகள், அவர்களது தாய் தந்தையைப் பெற்ற முப்பாட்டிகள் இவ்விதமாகவுள்ள எல்லா தாய்மார்களுக்கும் இப்பதம் பொதுவானது.

وَبَنَاتُكُمْ **வபனாத்துக்கும்** அதாவது உங்கள் புதல்விகள் என்ற பதத்திற்கு புதல்விகளும், புத்திர புதல்விகளின் புதல்விகளாகிய பேத்திகளும், இவர்களுடைய புதல்விகளும் இவ்விதமாக வழிவழியே தோன்றும் புதல்விகளும் என்பது கருத்து.

أَخَوَاتُكُمْ **அகவாத்துக்கும்** அதாவது உங்கள் சகோதரிகள் என்ற பதத்திற்கு தாய் தந்தை பெற்ற சகோதரிகள், தந்தைக்கு வேறு பெண்கள் பெற்ற சகோதரிகள், தாய் வேறு கணவனுக்குப் பெற்ற சகோதரிகள் ஆக மூவகைச் சகோதரிகளும் என்பது கருத்து.

عَمَّاتُكُمْ **அம்மாத்துக்கும்** அதாவது உங்கள் மாமிகள் என்ற பதம் உங்கள் பாட்டன் பெற்ற எல்லாப் பெண் மக்களும், அதற்கு மேலிலுள்ள முப்பாட்டன் முதலிய பாட்டனார்கள் பெற்ற பெண் மக்கள் எல்லோரையும் பொதிந்திருக்கிறது.

خَالَاتُكُمْ **காலாத்துக்கும்** அதாவது உங்கள் தாயின் சகோதரிகள் என்ற பதம் தாயைப் பெற்ற கொள்பாட்டி, கொள்பாட்டன், அவர்களைப் பெற்ற தாய், மாற்றாந்தாய் இவ்விதமாகவுள்ள பெண்களது பெண்மக்கள் அனைவரையும் குறிக்கிறது.

بَنَاتُ الْأَخِ وَبَنَاتُ الْأُخْتِ **பனாத்துல் அகி வபனாத்துல் உக்தி** அதாவது சகோதர, சகோதரியின் புதல்விகள் என்ற பதத்தில் மேலே சொல்லப்பட்ட மூன்று வகையாலும் ஏற்படுகிற சகோதரிகளின் புதல்விகள், அவர்களது புதல்விகள் இவ்விதமாக வழிவழியே தோன்றும் எல்லாப் பெண் மக்களும் குறிக்கப்பட்டிருக்கிறார்கள்.

أُمَّهَاتُكُمُ الَّاتِي أَرْضَعْنَكُمْ وَأَخَوَاتُكُم مِّنَ الرَّضَاعَةِ **உங்களுக்கு பாலூட்டிய உங்கள் தாய்மார்களும், பால்குடியினாலேற்பட்ட உங்கள் சகோதரிகளும்** என்றதில் குழந்தைகள் பால்குடிக்கும் காலத்தில் அவர்களுக்குத் தங்கள் முலை கொடுத்து அமுதூட்டிய பெண்களும், அவர்களது புதல்விகளும் என்பன கருத்து.

أُمَّهَاتُ نِسَائِكُمْ **உம்மஹாத்து நிஸாஇக்கும்** அதாவது உங்கள் மனைவியரின் தாய்மார்கள் என்பதற்கு மனைவியருடன் உடலுறவு செய்தாலும் சரி, செய்யாமலிருந்தாலும் சரி எவ்விதமான மனைவியராயினும் அவர்களது தாய்மார்கள் யாவரும் என்பது கருத்து.

ஹுஜூர் என்ற பதம் **ஹஜ்ருன்** என்ற பதத்தின் பன்மைச் சொல். இதனை **ஹிஜ்ருன்** என்றுஞ் சொல்லலாம். இதற்கு மடி என்பது பொருள். மக்களை மடியில் வைத்து வளர்ப்பது வழக்கமாக இருப்பதால் "உங்கள் மடிகளில் வளர்க்கப்பட்டவர்கள்" என்று சொல்லப்பட்டது.

அறிந்துகொள்:- அல்லாஹு தஆலா பதினான்கு வகை பெண்களை திருமணம் செய்யக் கூடாது என்று இந்த ஆயத்தின் மூலமாக விலக்கி இருக்கிறான். இவர்களில் ஏழு வகையினர் வம்சத்தைப் பொருத்து விலக்கப்பட்டவர்கள். அவ்வேழு வகையினரும் இந்த ஆயத்தில் உங்கள் தாய்மார்கள், புதல்விகள், சகோதரிகள், மாமிகள், தாயின் சகோதரிகள், சகோதரரின் புதல்விகள், சகோதரியின் புதல்விகள் என்ற வசனத்தில் கூறப்பட்டிருக்கிறார்கள். பாக்கியுள்ள ஏழு வகையினரும் பால் குடியினாலும் சம்மந்தப் புறத்தினாலும் திருமணம் செய்வதற்கு விலக்கப்பட்டவர்கள். இவர்களைப் பற்றிய விபரம் இதே ஆயத்தின் பிற்பகுதியில் أُمَّهَاتُكُمُ الَّاتِي أَرْضَعْنَكُمْ **உங்களுக்கு பாலூட்டிய உங்கள் தாய்மார்கள்** என்ற வாக்கியத்திலிருந்து சொல்லப்பட்டிருக்கிறது.

குழந்தைகள் பால் அருந்துவதற்கேற்பட்டுள்ள காலத்தில் அவர்களுக்கு பால் கொடுப்பதை அல்லாஹுதஆலா வம்சத்திற்கு சமமாக ஏற்படுத்தியுள்ளான். ஆகவே, ஒரு குழந்தையைப் பெற்றவள் தாயாகவும், அவளுடைய பெற்றோர்கள் பாட்டன் பாட்டியாகவும் இருப்பது போலவே, அக்குழந்தைக்கு முலையூட்டியவள் தாயாகவும், அவளது கணவன் தந்தையாகவும், அவளது பெற்றோர்கள் பாட்டன் பாட்டியாகவும் ஏற்படுகிறார்கள். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் "வம்சத்தினால் விலக்கலாக்குவது பால் குடியினாலும் விலக்கலாகும்" என்று கூறி இருக்கிறார்கள்.

وَحَلَائِلُ أَبْنَائِكُمْ "இன்னும் உங்கள் புதல்வர்களின் **மனைவியர்கள்**" என்ற பதத்தில் புதல்வர்களுக்கு நியாயமான முறையில் திருமணம் செய்யப்பட்டு மனைவியானவர்கள், விபச்சாரத்தால் மனைவியானவர்கள் முதலியவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால், மக்கட்பேறு இல்லாததனாலோ அல்லது வேறு காரணத்தினாலோ பிறருடைய மக்களை தத்தெடுத்து கொண்டு அவர்களைப் புதல்வன் என்றும் புதல்வி என்றும் அழைத்து வருவதை இந்த ஆயத்து கட்டுப்படுத்த வில்லை. இவ்வாறு தத்தெடுக்கப்பட்டவர்களை புதல்வர்கள், புதல்வி என்று இஸ்லாமிய ஷரீஅத்து அங்கீகரிக்கவில்லை.

அறிந்துகொள்:- தாய்மார்களையும், புதல்விகளையும் திருமணம் செய்வது விலக்கலாக்கப்பட்டிருப்பது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலம் முதல் இன்றளவும் இருந்து வருகிறது. இவர்களை திருமணம் செய்வது மத சம்மந்தம் என்று எந்த தெய்வீக மார்க்கத்திலும் கூறப்படவில்லை. ஆனால், மஜூஸித் தூதரான ஜர்தஷ்த் என்பவர் புதல்விகளை மணம் செய்வது கூடும் என்று கூறி இருக்கிறார். ஆதலால், அவர் பொய்யர் என்று பெரும் பான்மையான முஸ்லிம்கள் ஏகோபித்து கருத்து தெரிவித்திருக் கிறார்கள்.

நிற்க சகோதரிகளை திருமணம் செய்வது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் விலக்கலாக இருக்கவில்லை. அதற்குப் பிறகு மக்கள் தொகை பெருகப் பெருக மேற்கண்ட ஆயத்தில்

கூறப்பட்டபடி ஒவ்வொரு வகையினராக விலக்கப்பட்டனர். ஆரம்ப காலத்திலேயே இவர்கள் அனைவரையும் விலக்கலாக்காமல் இருந்ததற்குக் காரணம் மக்கட் தொகை மிகக் குறைவாக இருந்ததே யாகும்.

وَالْمُحْصَنَاتُ مِنَ النِّسَاءِ إِلَّا مَا مَلَكَتْ أَيْمَانُكُمْ
كِتَابَ اللَّهِ عَلَيْكُمْ ۚ وَأُحِلَّ لَكُمْ مَا وَرَاءَ ذَٰلِكُمْ
أَنْ تَبْتَغُوا بِأَمْوَالِكُمْ مُحْصِنِينَ غَيْرَ مُسَافِحِينَ ۚ
فَمَا اسْتَمْتَعْتُمْ بِهِ مِنْهُنَّ فَآتُوهُنَّ أُجُورَهُنَّ
فَرِيضَةً ۚ وَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيمَا تَرَاضَيْتُمْ بِهِ
مِنْ بَعْدِ الْفَرِيضَةِ ۚ إِنَّ اللَّهَ كَانَ عَلِيمًا حَكِيمًا ٢٤

24. மேலும், (யுத்தத்தில் கைதியாகி) உங்கள் வலது கரங்கள் சொந்தப்படுத்திக் கொண்டவர் (களான பெண்)களைத் தவிர, பெண்களில் கணவனுள்ளவர்களை (நீங்கள் திருமணம் செய்து கொள்வது கூடாது). இது உங்கள் மீது (விதிக்கப்பட்ட) அல்லாஹ்வின் கட்டளை. மேலும், (முன்பு விவரிக்கப்பட்டிருக்கும்) இவர்களைத் தவிர உள்ள மற்றவர்களை - நீங்கள் விபச்சார (நோக்க) மில்லாமல் உங்களுடைய பொருள்களைக் கொண்டு (அப்பெண்களுக்கு திருமணக் கட்டணம் கொடுத்துச் சட்டரீதியாய்) திருமணம் செய்து கொள்பவர்களாகத் தேடிக் கொள்வது - உங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களிலிருந்து எவர்களிடத்தில் (நீங்கள் திருமணத்தின் மூலம்) இன்பம் அனுபவித்தீர்களோ அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அவர்களின் மஹர் (திருமணக் கட்டண)த் தொகைகளை நீங்கள் கொடுத்து விடுங்கள்; (உங்களால் திருமணக் கட்டணம்) நிர்ணயிக்கப்பட்ட பின்பு நீங்கள் எதைக் கொண்டு பொருத்தமடைந்தீர்களோ அதில் (கணவன்

மனைவியாகிய) உங்கள் மீது குற்றமில்லை; நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனாக விவேகமுள்ளவனாக இருக்கின்றான்.

கணவனுள்ள பெண்களை திருமணம் செய்வது கூடாது. ஆனால், தாருல் ஹர்பிலிருந்து கைதி செய்யப்பட்டு தாருல் இஸ்லாமில் அடிமையாக்கப்பட்ட பெண்களை சுதந்தரித்துக் கொண்டால், அந்த பெண்களுக்கு தாருல் ஹர்பில் கணவன் இருந்தாலும் ஒரு மாதம் வரை அவர்களது துப்பரவைப் பார்த்துக் கொண்டு அதன் பின்னர் அவர்களுடன் கூடி வாழலாம். இவர்களுக்கு தாருல் ஹர்பில் கணவர்களிருப்பதை மதிக்க வேண்டியதில்லை. இவர்களை அல்லாமல் இதர பெண்களை உங்களது பொருள்களைச் செலவு செய்து நீங்கள் மணந்து கொள்வது உங்களுக்கு ஹலாலாக்கப் பட்டிருக்கிறது. திருமணம் செய்த பின்னர் நீங்கள் இன்பம் நுகர்ந்த பெண்களுக்கு அவர்களுக் கேற்படுத்திய மஹர்த் தொகையைக் கொடுத்துவிட வேண்டும். தம்பதிகளாகிய நீங்களிருவரும் விரும்பி மஹர்த் தொகையை அதிகப் படுத்திக் கொள்ளல் அல்லது குறைத்துக் கொள்ளல் முதலியவைகள் குற்றமில்லை.

وَالْمُحْصَنٰتُ அல்முஹ்ஸனாத்து என்பதற்கு கணவனுள்ள பெண்கள் என்பது கருத்து. மார்க்கத்திற்கு ஆகாத காரியத்தில் ஈடுபடுவதை விட்டு அந்த பெண்களை திருமண பந்தம் அல்லது கணவர்கள் அல்லது அந்த பெண்களின் பாதுகாவலர்கள் கட்டுப்படுத்தி வைத்திருப்பதால் கற்புடைய பெண்கள் யாவருக்கும் இந்தப் பெயர் பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

اُجُوْرَهُنَّ உஜூரஹுன்ன அதாவது அவர்களுடைய கூலிகளை என்பதற்கு அவர்களுடைய மஹர்கள் என்பது கருத்து. ஏனெனில் பெண்களிடத்தில் இன்பம் அடைவதற்குப் பதிலாக இந்தத் தொகை கொடுக்கப்படுவதால் இதற்கு "கூலி" என்ற பெயர் வந்தது. திருமணம் செய்யும் போது நிர்ணயிக்கப்படும் மஹர்த் தொகையை கணவன் அதிகப்படுத்திக் கொடுப்பதும், மனைவி அதனை மன்னித்து விடுவதும், அதனைக் குறைத்துக் கொள்வதும் குற்றமில்லை.

وَمَنْ لَّمْ يَسْتَطِعْ مِنْكُمْ طَوْلًا اَنْ يَّنْكِحَ الْمُحْصَنٰتِ
الْمُؤْمِنٰتِ فَمِنْ مَّا مَلَكَتْ اَيْمَانُكُمْ مِّنْ فَتَيٰتِكُمُ
الْمُؤْمِنٰتِ ؕ وَاللّٰهُ اَعْلَمُ بِاِيْمَانِكُمْ ؕ بَعْضُكُمْ مِّنْ
بَعْضٍ ۚ فَانْكِحُوْهُنَّ بِاِذْنِ اَهْلِهِنَّ وَاٰتُوْهُنَّ
اُجُوْرَهُنَّ بِالْمَعْرُوْفِ مُحْصَنٰتٍ غَيْرَ مُسٰفِحٰتٍ
وَّلَا مُتَّخِذٰتِ اَخْدَانٍ ۚ فَاِذَاۤ اُحْصِنَّ فَاِنْ اَتَيْنَ
بِفَاحِشَةٍ فَعَلَيْهِنَّ نِصْفُ مَا عَلَى الْمُحْصَنٰتِ مِنَ
الْعَذَابِ ؕ ذٰلِكَ لِمَنْ خَشِىَ الْعَنَتَ مِنْكُمْ ؕ وَاَنْ
تَصْبِرُوْا خَيْرٌ لَّكُمْ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ۝٢٥

25. இன்னும், விசுவாசமுடைய கற்புள்ள சுதந்திரமுள்ள பெண்களை மணம்புரிந்து கொள்வதற்கு உங்களில் எவர் இயல்பைப் பெற வில்லையோ (அவர்கள்) விசுவாசியான கன்னிகைகளில் நின்றும் உங்கள் வலக்கரங்கள் சொந்தப்படுத்திக் கொண்டவர் (களாகிய அடிமைப் பெண்) களை (திருமணம் செய்து கொள்ளுங்கள்). மேலும், அல்லாஹ் உங்கள் விசுவாசத்தை மிகவும் அறிந்தவன்; உங்களில் சிலர் சிலரைச் சேர்ந்தவர்களே. கற்புள்ளவர்களாகவும், விபச்சாரியாக இல்லாதவர்களாகவும், கள்ள நட்புக் கொள்ளாதவர் களாகவுமிருக்கும் (அடிமைப்) பெண்களை, அவர்களின் எஜமானர்களின் அனுமதிப்படி திருமணம் செய்து கொள்ளுங்கள்; இன்னும், அவர்களின் மஹர் (திருமணக் கட்டண)த் தொகையை அவர்களுக்கு நியாயப்படி கொடுத்து விடுங்கள்; எனவே, அப்பெண்கள் (உங்களை) திருமணம் செய்து கொண்டு கெட்ட

வேலையை (விபச்சாரத்தைச் செய்தால், (அதற்கேற்பட்ட தண்டனையாகிய) வேதனையில் (திருமணமில்லாத) உரிமையுடைய பெண்களுக்குள்ள தண்டனையில் பாதி அவர்களுக்கு விதிக்கப் பட்டிருக்கிறது. (அடிமைப் பெண்களை திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும்) இதுவானது, உங்களில் (உரிமையுள்ள பெண்களை திருமணம் செய்து கொள்ளச் சக்தி பெறாமல் விபச்சாரம் செய்து அதற்குரிய தண்டனையாகிய) கஷ்டத்தைப் பயந்தவர்களுக்காகவேயாகும். மேலும், நீங்கள் (அடிமைப் பெண்களை மணந்து கொள்ளாமல்) பொறுமையாக இருப்பதானது (அவர்கள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளும் அடிமையாகாமலிருப்பதனால்) உங்களுக்கு (அது) மேலானதே. மேலும், அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன்; மிகக் கிருபையுள்ளவன்.

அடிமையாக இல்லாத மூமினான பெண்ணை திருமணம் செய்வதற்குச் சக்தி பெறாதவர்கள் மூமினான அடிமைப் பெண்களை அவர்களது எஜமான்களது உத்தரவின் பேரில் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால், அவ்வடிமைப் பெண்கள் விபச்சாரிகளாகவோ, கள்ள நட்பு கொள்ளாதவர்களாகவோ இருக்கலாகாது. அடிமைப் பெண்களை திருமணம் செய்த பின்னர் அவர்கள் விபச்சாரம் செய்து விட்டால் அடிமையாக இல்லாத கன்னிப் பெண்கள் விபச்சாரம் செய்தால் அளிக்கப்படும் தண்டனையில் பாதியை அளிக்க வேண்டும். சுதந்திரமாகவுள்ள பெண்ணை திருமணம் செய்யச் சக்தி பெறாதவர்கள் அடிமைப் பெண்ணை திருமணம் செய்து கொள்ளலாம் என்றது திருமணம் செய்யாமலிருந்தால் விபச்சாரத் தொழிலுக்கு ஆளாகி விடுவோம் என்று பயந்தவர்களுக்குத்தான். ஆனால், அடிமைப் பெண்ணை திருமணம் செய்யாமல் பொறுத்திருப்பது உங்களுக்கு நன்மையாகும் என்பன இந்த ஆயத்திற் கூறப்பட்டுள்ள விதிகளாகும்.

ஃபத்தயாத் என்பது **ஃபத்தாத்** என்பதன் பன்மைச் சொல். ஃபத்தாத் என்பதற்கு வாலிபமுள்ளவள், குமரி என்பது கருத்து. என்றாலும், அடிமைகள் வயதில் எவ்வளவு முதிர்ந்தவர்களாக இருந்தாலும் அடிமையாக இல்லாதவர்களுக்குச் செய்யப்படும்

மரியாதையைப் போல் மரியாதை செய்யப்பட மாட்டார்கள். மேலும் சிறுவர்களை நடத்தப்படுவது போல் அவர்கள் நடத்தப்படுவார்கள். ஆதலின் அடிமைகளில் ஆடவருக்கு ஃபத்தா என்றும், பெண்களுக்கு ஃபத்தாத் என்றும் அறபியர் கூறுவது வழக்கம். இதே கருத்தில்தான் இந்த இடத்தில் **ஃபத்தயாத்** என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னர் அறபி நாட்டில் இரண்டு விதமான விபச்சாரங்கள் நடைபெற்று வந்தன. ஒன்று பகிரங்க விபச்சாரம். அதாவது பணம் வாங்கிக் கொண்டு விபச்சாரம் செய்தல். இதனை இந்நாட்டிலுள்ள விலைமாதரின் செய்கைக்கு ஒப்பிடலாம். மற்றொன்று கள்ளக் காதலனை ஏற்படுத்திக் கொள்ளல். அதாவது குறிப்பிட்ட ஒரு மனிதரிடம் கூடா நட்புக் கொண்டு அவனுடன் கூடுதல். இதனை இந்நாட்டிலுள்ள வைப்புபெண்களின் செய்கைக்கு ஒப்பிடலாம். ஆனால், அந்நாட்டில் இந்த கள்ளக் காதலிகள் பிரசவிக்கும் குழந்தைகளை ஹராம் ஜாதா என்று அறபியர் கருதுவதில்லை. ஆகவே, இவ்விருவகை விபச்சாரமும் ஹராம் என்பது مُحْصَنٰتٍ غَيْرَ مُسٰفِحٰتٍ وَّلَا مُتَّخِذٰتِ اَخْدَانٍ **கற்புள்ளவர்களாகவும் (இன்னும்) விபச்சாரிகளாக இல்லாமலும் கள்ளக் காதலனை வைத்துக் கொள்பவர்களாக இல்லாமலும்** என்ற வசனத்திற் கூறப்பட்டிருக்கிறது. விபச்சாரத் தொழில் இந்திரியத்தை வீணாக விட்டு விடப்படுவதால் விபச்சாரத் தொழில் புரிவோருக்கு **அல்முஸாஃபிஹ்** (சிந்துபவர்) என்று சொல்லப்படுகிறது. **அல்அனத்** என்பதற்கு பலவந்தமாக எலும்பை முறித்தல் என்பது அர்த்தம். பிறகு ஒவ்வொரு கஷ்டத்திற்கும் துன்பத்திற்கும் இந்தப் பதம் உபயோகிக்கப்பட்டது. பின்னர், விபச்சாரம் செய்பவர்கள் ரஜ்மு (கல்லால் எறிந்து கொல்வது), ஹத்து (கசையடி என்னும் தண்டனைகளுக்கு உட்படுத்தப் படுவதால் விபச்சாரம் செய்தவர்களுக்கும் இந்தப் பதம் உபயோகிக்கப் படுகிறது.

ذٰلِكَ لِمَنْ خَشِيَ الْعَنَتَ مِنْكُمْ **இது உங்களில் விபச்சாரத்தைப் பயந்தவர்களுக்கு** என்ற வசனத்திலிருந்து மார்க்கச் சட்டத்தை நிர்ணயிப்பதில் ஹனஃபி ஷாஃபிஈ இமாம்களுக்கிடையில் கருத்து

வேறுபாடு இருந்து வருகிறது. அடிமையல்லாத பெண்ணை திருமணம் செய்வதற்குச் சக்தி இருக்கும் போது அடிமைப் பெண்ணை திருமணம் செய்வது கூடாது என்பது ஷாஃபிஈ மதுஹபின் கருத்தாகும். இதற்கு இந்த ஆயத்தின் புறப்பொருளை ஆதாரமாக எடுக்கப்படுகிறது. ஆகவே, அடிமைப் பெண்ணை திருமணம் செய்வதற்கு ஷாஃபிஈ மதுஹபில் மூன்று நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

1. அடிமைப் பெண்ணை திருமணம் செய்பவருக்கு அடிமையாக இல்லாத பெண்ணை திருமணம் செய்ய சக்தி இருக்கக் கூடாது.

2. அவர் திருமணமில்லாமலிருந்தால் விபச்சாரத்தில் ஈடுபடுவோம் என்று பயப்பட வேண்டும்.

3. திருமணம் செய்யப்படுகிற அடிமைப் பெண் மூமினான பெண்ணாக இருக்க வேண்டும்.

ஹனஃபி மதுஹபில் அடிமைப் பெண்ணை திருமணம் செய்வதற்கு இம்மூன்று நிபந்தனைகளில் எதையும் நிபந்தனையாக ஏற்படுத்தவில்லை. ஆனால், அடிமைப் பெண்ணை திருமணம் செய்யும்போது அடிமையல்லாத பெண்ணை மனைவியாகக் கொண்டிருக்கக் கூடாது என்று மட்டும் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில், அறபியரில் ஹஜ்ஜுச் செய்வதற்குத்தக்க வசதிகள் இல்லாதவர் "நான் ஹஜ்ஜுச் செய்வதற்குச் சக்தி பெறவில்லை" என்று கூறுவது வழக்கமாக இருக்கிறது. இது போல, وَمَنْ لَّمْ يَسْتَطِعْ مِنْكُمْ طَوْلًا اَنْ يَّنْكِحَ الْمُحْصَنٰتِ "**மேலும் உங்களில் எவர் விசுவாசமுடைய கற்புள்ள சுதந்திரமான பெண்களை திருமணம் செய்வதற்குச் சக்தியைப் பெற்றிருக்க வில்லையோ**" என்ற ஆயத்திற்கு திருமணம் செய்ய சக்தியற்றவர் என்பது கருத்தல்ல, சுதந்திரமுள்ள (அடிமை யல்லாத) பெண்களை திருமணம் செய்து கொள்ளாதவர் என்பதுதான் கருத்து என்றும் مِّنْ فَتَيٰتِكُمُ الْمُؤْمِنٰتِ "**மூமின்களான உங்களது அடிமைப் பெண்களில் நின்றும்**" என்று கூறப்பட்ட வசனத்தில் "மூமின்களான என்ற அடைமொழியானது

நிபந்தனைக்காகக் கூறப்பட்டதல்ல வென்றும், (கித்தாபியான) வேதக்காரர்களாகிய யூத கிருஸ்துவ பெண்களைப் பார்க்கினும் மூமினான அடிமைப் பெண் மேல், என்பதை அறிவிப்பதற்காகவே அந்த அடைமொழி வந்ததென்றும் ஹனஃபி இமாம்கள் கூறி இருக்கின்றனர்.

தவிரவும், மூமினான அடிமைப் பெண்ணை திருமணம் செய்வது கூடும் என்பதை இந்த ஆயத்து அறிவிக்கிறதேயன்றி வேதக்காரிகளை திருமணம் செய்வது ஹராம் என்பது இதில் இல்லை என்றும் **தஃப்ஸீர் தைஸீரில்** கூறப்பட்டிருப்பதாக **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** எழுதப்பட்டிருக்கிறது.

وَاَنْ تَصْبِرُوْا خَيْرٌ لَّكُمْ "**இன்னும் நீங்கள் பொறுமையாயிருப்பது உங்களுக்கு நல்லது**" என்ற வசனத்திற்கு அடிமைப் பெண்களை திருமணம் செய்யாமல் பொறுமையாயிருப்பது உங்களுக்கு நல்லது என்பது கருத்து. ஏனெனில், அடிமைப் பெண்ணை மணந்தால் அவளது வயிற்றில் பிறக்கும் குழந்தை அடிமையாகவே இருக்கும். அவளது எஜமானுக்கு அவள் மீது ஆதிக்கம் இல்லாமற் போவதில்லை. அவளுடைய எஜமான் உள்ளூரிலிருந்தாலும் வெளியூருக்குச் சென்றாலும் அவளைத் தன்னிடம் வைத்துக் கொண்டு வேலை வாங்க அவனுக்கு உரிமையுண்டு. தனக்கு விரும்பியவருக்கு அவளை விற்பனை செய்துவிடவும் அவனுக்கு அதிகாரமுண்டு. இவற்றைத் தவிர மேலும் பல இடைஞ்சல்களுமிருக்கின்றன. அவளுக்கேற்பட்ட மஹர்த் தொகையை அவள் தனது கணவனுக்கு மன்னித்து விடவோ அல்லது அதில் குறைத்துக் கொள்ளவோ அவளுக்கு அதிகாரமில்லை. ஆகவே, பிறரிடம் அடிமையாக இருக்கும் பெண்ணை திருமணம் செய்வது குடும்ப வாழ்க்கைக்கு மிகவும் இடையூறாகும். எனவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "சுதந்திரமுள்ள பெண் வீட்டிற்கு இணக்கமானவள். அடிமைப் பெண் வீட்டிற்கு நாசம்" என்று கூறி இருக்கிறார்கள்.

அறிந்துகொள்:- திருமணமானது நபிமார்களது சுன்னத்தும் முக்லிஸானவர்களது வழியுமாகும். தவிரவும், இது மனிதர்களது

நிலைக்குத் தக்கவாறு கடமையாகவும் சுன்னத்தாகவும் மக்ரூஹாகவும் இருக்கிறது. அதாவது காம இச்சை அதிகமாக ஏற்பட்டுள்ளவர்களுக்கு திருமணம் செய்து கொள்வது வாஜிபு. நடுத்தரமான எல்லையில் உள்ளவர்களுக்கு விரும்பத்தக்க காரியம். செலவு செய்யவும், குடும்ப வாழ்க்கை நடத்தவும் இயலாதவர்களுக்கு வெறுக்கத்தக்க செய்கையாகும்.

يُرِيدُ اللَّهُ لِيُبَيِّنَ لَكُمْ وَيَهْدِيَكُمْ سُنَنَ الَّذِينَ مِن قَبْلِكُمْ وَيَتُوبَ عَلَيْكُمْ ۗ وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ ﴿٢٦﴾

26. அல்லாஹ் உங்களுக்கு (உங்கள் மார்க்கத்தின் கட்டளைகளை) விவரிப்பதற்கும், உங்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களுடைய பாதைகளில் உங்களுக்கு நேர்வழி காட்டவும், உங்களுக்கு தவ்பாவை அங்கீகரிக்கவும் நாடுகிறான். மேலும், அல்லாஹ் (மிகவும்) அறிந்தவன் விவேகமுள்ளவன்.

مِن قَبْلِكُمْ **உங்களுக்கு முன்னுள்ளவர்கள்** என்பதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னரிருந்த நபிமார்கள் ஸாலிஹான பெரியோர்கள் முதலியவர்கள் என்பது கருத்து.

وَاللَّهُ يُرِيدُ أَن يَتُوبَ عَلَيْكُمْ وَيُرِيدُ الَّذِينَ يَتَّبِعُونَ الشَّهَوَاتِ أَن تَمِيلُوا مَيْلًا عَظِيمًا ﴿٢٧﴾

27. இன்னும், அல்லாஹ் உங்களை (உங்களின் பாவச் செயல்களை விட்டுத்) திருப்ப விரும்புகிறான். இன்னும், (தங்களின் மனோ இச்சைகளைப் பின்பற்றுகிறார்களே அவர்கள் நீங்கள் (நேர்வழியை விட்டும்) முற்றிலுமாகத் (நேர்மையை விட்டு) திரும்பி விடுவதை நாடுகிறார்கள்.

தந்தைக்குப் பிறந்த சகோதரிகள், சகோதரரின் புதல்விகள், சகோதரியின் புதல்விகள் ஆகியவர்களை மஜூஸிகள் திருமணம் செய்து கொண்டிருந்தனர். இவர்களை திருமணம் செய்யக்கூடாது என்று அல்லாஹுதஆலா ஹராமாக்கிவிடவே மஜூஸிகள் முஸ்லிம்களை நோக்கி "உங்களது தாயுடன் பிறந்த பெண்களான சிறிய அன்னை, தந்தையுடன் பிறந்த பெண்களான அத்தை (மாமி) ஆகியவர்கள் உங்களுக்கு மஹ்ரமானவர்கள் அதாவது அவர்களை நீங்கள் திருமணம் செய்யக்கூடாது. ஆனால், அவர்கள் வயிற்றில் பிறந்த பெண்களை நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம். உங்கள் சகோதரர்களும், சகோதரிகளும் அவர்களது புதல்விகளும் இவ்விதமாகத்தான் இருக்கிறார்கள். ஆதலின், அவர்களையும் நீங்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள்" என்று கூறினர். அப்போது அல்லாஹுதஆலா இந்த ஆயத்தை அருளினான் என்று கூறப்படுகிறது.

يُرِيدُ اللَّهُ أَن يُخَفِّفَ عَنكُمْ ۚ وَخُلِقَ الْإِنسَانُ ضَعِيفًا ﴿٢٨﴾

28. (மார்க்கக் கடமைகளை) அல்லாஹ் உங்களுக்குச் சுலபமாக்க நாடுகிறான். ஆனால், மனிதன் பலஹீனனாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான்.

சத்திய சன்மார்க்கத்தில் சுலபமாகச் செய்யக்கூடிய இலேசான கட்டளைகளை அல்லாஹுதஆலா ஏற்படுத்த விரும்புகிறான். எனவேதான், மேலே சொல்லப்பட்ட ஆயத்தில் அவசியமேற்படும்போது அடிமைப் பெண்ணையுங் கூட திருமணம் செய்து கொள்ளலாம் என்று அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மனிதன் பலஹீனனாக சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் பெண் விஷயத்திலும், இச்சைகளைப் பின்பற்றும் விஷயத்திலும் அவன் பொறுமையாயிருக்க முடிவதில்லை என்பது இந்த ஆயத்தின் கருத்து.

ரிவாயத்து:- "நாயனே! நான் விபச்சாரம் செய்வதையும் திருடுவதையும் விட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன்" என்று ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் பிரார்த்தித்தார்கள். அப்பொழுது அவரை நோக்கி "தங்களுக்கு வயது அதிகமாகி

விட்டது. மேலும், தாங்கள் அல்லாஹுதஆலாவுடைய தூதரின் ஸஹாபியாக இருக்கிறீர்கள். அப்படி இருந்தும் விபச்சாரத்தையும் திருட்டையும் குறித்து உமக்கு நீர் பயப்படுகிறீரோ?” என்று வினவப்பட்டது. அதற்கவர் இப்லீஸ் உயிருடனிருக்கும் காலமெல்லாம் நான் எங்ஙனம் அச்சமற்று இருக்க முடியும்? என்று கூறினார்கள் என்று ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- அல்லாஹுதஆலா இந்த உம்மத்திற்கு நான்கு காரியங்களை அன்பளிப்பாக அளித்திருக்கிறான். அந்நான்கு காரியங்களும் 26வது ஆயத்திலிருந்து கூறப்பட்டிருக்கின்றன. 1. விவரித்தல். அதாவது அல்லாஹுதஆலாவின் பால் சேரும்படியான நேரான பாதையை அவர்களுக்கு விவரித்தல், 2. நேர்வழி காட்டல். அதாவது விவரித்துக் கூறிய பின் நேரான பாதையைப் பிரத்தியட்சமாகக் காண்பித்தல், 3. அவர்களது தவ்பாவை அங்கீகரித்தல். அதாவது அல்லாஹ்வின் பாதையைப் பார்க்கினும் அவனது (ஹல்றத்தாகிய) சமூகத்தின்பால் அவர்களைக் கொண்டு அவன் திரும்புவது. 4. அவர்களுக்குச் சுலபமாக்குதல் அதாவது அவர்களைத் தன்னுடைய (ஹல்றத் தென்னும்) சமூகத்தில் தனது உதவியுடன் சேர்ப்பித்தல், அவர்களுக்கு அதில் கஷ்டமில்லாமல் செய்தல் ஆகியவைகளாகும். இந்நான்கு காரியங்களும் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் அவர்களது உம்மத்துகளுக்கும் மட்டும் சொந்தமானது. இதற்கு இரண்டு காரணங்களுண்டு.

அவற்றில் ஒன்று **“நிச்சயமாக நான் எனது றப்பின்பால் செல்கிறேன். எனக்கு அவன் விரைவில் வழிகாண்பிப்பான்”** 37:99 என்று ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதாக திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அல்லாஹு தஆலாவின் ஹல்றத்தில் தமது முயற்சியின் பேரில் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சென்றிருக்கிறார்கள். இப்படிச் செல்வது சிரமமான காரியம். **“இன்னும், மூஸா நாம் குறிப்பிட்ட காலத்தில் (குறிப்பிட்ட இடத்திற்கு) வந்தபோது”** 7:143

என்று ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது வருகையைக் குறித்து இந்த ஆயத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இதுவும் சிரமமான காரியம். ஆனால், நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்து **“தன்னுடைய அடியாரை இரவில் அழைத்துச் சென்றானே அவன் தூயவன்”** 17:01 என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாங்களாகவே இறைவனிடம் செல்லவில்லை என்பதும் அவர்களை இறைவன் அழைத்துச் சென்றிருப்பதாகவும் தெரிகிறது. இது அவனது உதவியாகும். இறைவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்துச் சென்றதன் மூலமாக அவனது சமூகத்தை அடைவதற்கேற்படும் கஷ்டங்கள் இலேசாக்கப்பட்டிருக்கின்றன. இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இலேசாக்கப் பட்டதைக் குறித்து அருளப்பட்ட ஆயத்து. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகளுக்கு இலேசாக்கப் பட்டதைக் குறித்து **“நிச்சயமாக இ(வ்வேதமான)து உண்மையான தென்று தெரிவதற்காக (உலகின்) பல கோணங்களிலும் அவர்களுக்குள்ளேயும் நம்முடைய அத்தாட்சிகளை அவர்களுக்கு நாம் காண்பிப்போம்”** 41:53 இவ்விதமாக இறைவனே தனது அத்தாட்சிகளை நமக்குக் காண்பிப்பதால், அதனைக் காண்பதற்காகச் செல்லும் ஏனையர் அடையும் கஷ்டத்தை நம்மவர் அடைய மாட்டார்கள். ஆகவே, இவ்வாறு அவன் காண்பிப்பது அவனது உதவியேயாகும்.

இரண்டாவது காரணம், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களது உம்மத்துகளும் அல்லாஹு தஆலாவினுடன் சேர்வதைக் கொண்டு (அதாவது வுஸூல், விஸால் ஆகியவற்றைக் கொண்டு) சொந்தப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அல்லாஹு தஆலாவை விட்டுப் பிரிந்திருந்தல், விலகி இருத்தல் ஆகிய கஷ்டங்கள் இவர்களுக்குச் சுலபமாக்கப்பட்டிருக்கின்றன. **காபகவ்ஸைனி அவ்அத்னா** (53:9) எனும் அந்தஸ்தை

அடைந்தார்கள். (வில்லின் இரண்டு நுனியளவிற்கு நெருங்கினார்கள் அல்லது அதனைப் பார்க்கினும் அதிகமாக நெருங்கினார்கள் என்பது இப்பதங்களின் அர்த்தமாகும்). வில்லில் நாணேற்றி மிகவும் வேகமாக இழுத்து எய்யும்போது அவ்வில்லின் இரண்டு நுனிகளும் வளைந்து ஒன்றுடன் ஒன்று பொருந்தும்படி வளைந்து கொடுக்கிறது. இதுபோல நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் நெருங்கினார்கள். இதனைப் பார்க்கினும் அதிகமாக நெருங்கினார்கள் என்பது இதன் கருத்து. (இந்த ஆயத்திற்கு வேறு விதமான விரிவுரைகளும் உண்டு. மிஃராஜைப் பற்றிய விபரம் கூறப்படுமிடத்தில் அவைகள் விவரிக்கப்பட்டிருக்கிறது). இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் விஸாலானதைக் குறித்து "**அவர் பார்த்ததை இருதயம் பொய்யாக்கவில்லை**" 27:11 என்று கூறப்பட்டிருக்கிறது. இதர நபிமார்கள் எல்லோரும் ஏழாவது வானத்திற்கப்புறம் செல்லவில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜுக்குச் சென்றபோது முதலாவது வானத்தில் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், ஏழாவது வானத்தில் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் கண்டார்கள். இதற்கிடையில் வேறு பல நபிமார்களையும் கண்டார்கள். இதற்கப்புறம் நபிமார்களைக் காணவில்லை. இந்த உம்மத்துகள் அல்லாஹு தஆலாவின் சமூகத்தில் நெருங்குவதைக் குறித்து "என்பால் ஒரு சாண் அளவிற்கு எவர் நெருங்குகிறாரோ அவர் பால் ஒரு முழ அளவிற்கு நான் நெருங்குகிறேன்" என்று இறைவன் கூறி இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே, நமது உம்மத்துகள் அல்லாஹு தஆலாவை அடையவேண்டும் என்ற கருத்துடன் மெஞ்ஞான வழியில் ஒரு சாண் அளவிற்கு நெருங்கிச் சென்றால், அவர்களைத் தன்பால் சேர்த்துக் கொள்வதற்காக இறைவன் ஒரு முழம் நெருங்குகிறான் என்பது இதன் கருத்து. இதுதான் அல்லாஹு தஆலாவை அடைதல், சேர்தல் ஆகியவைகளான வுஸூல், விஸால் ஆகியவற்றின் அகமியம் (அகப்பொருள்). என்றாலும், நபிமார்களுக்கும் வலிமார்களுக்கும் இடையில் மிகுந்த வித்தியாசமுண்டு. நபிமார்கள் அல்லாஹுதஆலாவின்பால் செல்லும் விஷயத்திலும் சேரும்

விஷயத்திலும் சுயமானவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவரவர்களது சக்திக்கேற்றவாறு அவர்களது அந்தஸ்திருந்து வரும். வலிமார்கள் சுயமாக அடைய முடியாது, நபிமார்களது பாதையைப் பின்பற்றுவதன் மூலமாகவும், அவர்களைப் பின்றொடருவதன் மூலமாகவும்தான் அல்லாஹுதஆலாவின் பால் வுஸூலாக முடியும். ஆகவே, அடியார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சுன்னத்தைப் பேணி, அவர்களை முஹப்பத்துடன் பின்பற்றுவதன் மூலமாக எல்லா அந்தஸ்துகளையும் படித்தரங்களையும் அடைய வேண்டும். இதனைக் குறித்துத்தான் ஜுனைதுல் பகுதாதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "நம்முடைய இந்த மதுஹபு கித்தாபு சுன்னத்து ஆகிவற்றின் உஸூலைக் கொண்டு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது" என்று கூறி இருக்கிறார்கள்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَأْكُلُوا أَمْوَالَكُمْ بَيْنَكُمْ
بِالْبَاطِلِ إِلَّا أَنْ تَكُونَ تِجَارَةً عَنْ تَرَاضٍ مِنْكُمْ ۚ
وَلَا تَقْتُلُوا أَنْفُسَكُمْ ۚ إِنَّ اللَّهَ كَانَ بِكُمْ رَحِيمًا ﴿٢٩﴾

29. ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் வியாபாரமாக இருந்தாலன்றி, உங்களுக்கிடையில் உங்கள் பொருள்களைத் தவறான முறையில் நீங்கள் உண்ணாதீர்கள். இன்னும் உங்களை நீங்களே கொலை செய்து கொள்ளாதீர்கள், நிச்சயமாக அல்லாஹ் உங்கள் பால் (மிகுந்த) கிருபையுள்ளவன்.

لَا تَأْكُلُوا **நீங்கள் உண்ணாதீர்கள்** என்பதற்கு நீங்கள் எடுக்காதீர்கள் என்பது கருத்து. பொருள்களைச் சேர்ப்பதன் முக்கிய நோக்கம் அவற்றிலிருந்து உண்பதும் அனுபவிப்பதுமாக இருப்பதால் இங்கு புசிப்பதாகிய காரணத்தைக் கூறி பொருளை அபகரிப்பதாகிய காரியம் நாடப்பட்டுள்ளது. ஆகவே, புசிப்பது விலக்கப்பட்டிருப்பது போல அந்தப் பொருள்களைச் செலவு செய்யும் சகல வழிகளும் விலக்கப்பட்டிருக்கின்றன.

الْبَاطِلِ **அல்பாத்தில்** அதாவது 'தவறாக' என்பதற்கு சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத முறை என்பது கருத்து. ஆகவே, இக்கருத்தின் படி அபகரித்தல், பலவந்தமாக எடுத்துக் கொள்ளல், களவாடல், வட்டி வாங்கல், பொய்ச் சத்தியம், பொய்ச் சாட்சி முதலிய வற்றின் மூலம் எடுத்துக் கொள்ளல் ஆகிய எல்லா காரியங்களும் விலக்கப்பட்டிருக்கின்றன.

اِلَّآ اَنْ تَكُوْنَ تِجَارَةً عَنْ تَرَاضٍ مِّنْكُمْ **உங்களுக்கிடையில் ஒருவருக் கொருவர் பொருந்திக் கொள்ளும் வியாபாரமாக இருந்தாலன்றி** என்ற வாக்கியத்திற்கு வியாபாரம் என்பது மட்டும் கருத்தல்ல. வியாபாரம், நன்கொடை, வாரிசுரிமை, ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்ட இதர வழிகள் ஆகியவைகள் மூலமாகக் கிடைக்கும் சகல சம்பாத்தியங்களும் என்பது கருத்து. ஆனால், இவற்றில் வியாபாரம் முதன்மையானதாக இருப்பதால் இவ்வசனத்தில் வியாபாரத்தை மட்டும் குறிப்பிடப் பட்டுள்ளது.

وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ عُدْوَانًا وَّظُلْمًا فَسَوْفَ نُصْلِيْهِ نَارًا ۗ وَكَانَ ذٰلِكَ عَلَى اللّٰهِ يَسِيْرًا ۝

30. இன்னும், எவர் (எல்லையை) மீறியும் அநியாயமாகவும் அதைச் செய்கிறாரோ அவரை (நரக) நெருப்பில் நாம் பின்னர் புகவைப்போம், மேலும், அது அல்லாஹ்வுக்கு சுலபமாக இருக்கிறது.

இதற்கு முன் கூறப்பட்ட ஆயத்தில் பிறருடைய பொருளை ஷரீஅத்தில் அனுமதிக்கப்படாத முறையில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதும், தங்களது உயிர்களை மாய்த்துக் கொள்ளவோ, அபாயத்திற்கான காரியங்களில் உட்படுத்திக் கொள்ளவோ கூடாது என்பதும் கூறப்பட்டன. இந்த ஆயத்தில் அவற்றை மீறிச் செய்வோருக்கு நரக வேதனை இருக்கிறது என்று கூறப்பட்டிருப்பதுடன், மனிதர்களது சக்தி ஒரு வரையறைக்குள்ளிருப்பதால் மனிதர்களுக்கு ஒரு காரியம் சுலபமாகவும், வேறொரு காரியம் கஷ்டமாகவும் இருக்கும். ஆனால்,

அல்லாஹுதஆலா சர்வ வல்லமையுள்ளவனாக இருப்பதால் அவனுக்கு எல்லாக் காரியங்களும் ஒன்றாகத்தானிருக்கின்றன. ஒரு காரியம் கஷ்டமென்பதும் இன்னொரு காரியம் சுலபம் என்பதும் அவனைப் பொறுத்தமட்டில் இல்லை. என்றாலும், இங்கு மனிதர் களுக்கு எச்சரிக்கை செய்யும் முறையில் அது அல்லாஹ்விற்குச் சுலபமானதாக இருக்கிறது என்றுங் கூறப்பட்டிருக்கிறது. அதாவது மனிதர்கள் ஒருவரையொருவர் அச்சுறுத்தும் போது, இன்னகாரியம் மிகச் சுலபமானது, அதனை அவர் செய்து விடுவார் என்று கூறுவதுபோல் இங்கு கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த வசனத்திற்கு "அநியாயமாகவும் (எல்லையை) மீறியும் மேற்கண்ட ஆயத்தில் விலக்கப்பட்டவற்றைச் செய்வோரை அவன் நரகில் நிச்சயமாகப் பிரவேசிக்கச் செய்வான். இதில் சிறிதும் சந்தேகமில்லை" என்பது கருத்து.

اِنْ تَجْتَنِبُوْا كَبَآئِرَ مَا تُنْهَوْنَ عَنْهُ نُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَنُدْخِلْكُمْ مُّدْخَلًا كَرِيْمًا ۝

31. எதை விட்டு நீங்கள் விலக்கப்பட்டீர்களோ அந்த ஒன்றின் பெரும்பாவங்களை நீங்கள் தவிர்த்துக் கொள்வீர்களாயின் உங்கள் குற்றங்களை உங்களை விட்டு நாம் பரிகரித்து விடுவோம். இன்னும் சங்கையான புகும் இடத்தில் நாம் புகச் செய்வோம்.

كَبَآئِرَ கபாயிர் அதாவது பெரும்பாவம் என்பது என்ன என்பதைப் பற்றி இமாம்கள் ஒரு முகமாக விவரிக்கவில்லை. என்றாலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹத்து என்னும் தண்டனையை எந்தக் காரியங்களுக்கு ஏற்படுத்தி இருக்கிறார்களோ அந்தக் காரியங்களையும், திருக்குர்ஆனில் எந்தக் காரியங்களைப் பற்றி அச்சுறுத்தப்பட்டிருக்கிறதோ அந்தக் காரியங்களையும் செய்வதுதான் பெரும்பாவம் என்று விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரிவுரை பெரும்பாவம் என்பதற்குச் சற்றேறக் குறைய சரியான விரிவுரை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

قَالَ اَنَسُ بْنِ مَالِكْ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّكُمْ لَتَعْمَلُوْنَ الْيَوْمَ اَعْمَالًا
هِيَ اَدَقُّ مِنَ الشَّعْرِ كُنَّا نَعُدُّهَا عَلَى عَهْدِ رَسُوْلَ اللهِ صَلَّى
اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مِنَ الْمُوْبِقَاتِ

ரிவாயத்து:- இன்றைய தினம் நீங்கள் பல காரியங்களை செய்கிறீர்கள். அவைகள் உங்களது கண்ணுக்கு மயிரினும் அற்பமாகத் தோன்றுகின்றன. ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் இவற்றை நாங்கள் பெரும் பாவங்களில் ஒன்று என்பதாகச் சேர்த்துக் கருதிக் கொண்டிருந்தோம்'' என்று அனஸுப்னு மாலிக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

مُدْخَلًا كَرِيْمًا **சங்கையான புகுமிடம்** என்பதற்கு சுவர்க்கம் என்பது கருத்து.

وَلَا تَتَمَنَّوْا مَا فَضَّلَ اللّٰهُ بِهٖ بَعْضَكُمْ عَلٰى بَعْضٍ ؕ
لِلرِّجَالِ نَصِيْبٌ مِّمَّا اكْتَسَبُوْا ؕ وَلِلنِّسَآءِ نَصِيْبٌ
مِّمَّا اكْتَسَبْنَ ؕ وَسْـَٔلُوا اللّٰهَ مِنْ فَضْلِهٖ ؕ اِنَّ اللّٰهَ كَانَ بِكُلِّ
شَیْءٍ عَلِيْمًا ۝

32. இன்னும், அல்லாஹ் உங்களிற் சிலரைப் பார்க்கினும் சிலரை எதைக் கொண்டு மேன்மையாக்கி வைத்தானோ அதை நீங்கள் ஆசை கொள்ளாதீர்கள். ஆடவர்களுக்கு அவர்கள் சம்பாதித்ததிலிருந்து பாகமுண்டு; இன்னும் பெண்களுக்கு அவர்கள் சம்பாதித்ததில் பங்கிருக்கிறது; இன்னும் அல்லாஹ்விடத்தில் அவனது அருட்கொடையிலிருந்து கேளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் (மிக) அறிந்தவன்.

பெருமை, கண்ணியம், செல்வம், அரசுரிமை முதலியவைகள் மனிதர்களது தன்மைக்குத்தக்கவாறு அல்லாஹுத் தஆலாவால் அளிக்கப்படுபவைகள். ஆகவே, ஒவ்வொருவரும் தமக்குக் கிடைத்த பாக்கியங்களைத் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டு மற்றவருக்குக் கிடைத்த பாக்கியத்தைக் குறித்துப் பொறாமை கொள்ளவோ அல்லது அந்தப் பாக்கியம் அவருக்கு இல்லாமற் போகவேண்டுமென்று விரும்பவோ கூடாது. அவ்வாறு பொறாமை கொள்வதும், அது நீங்கிவிட வேண்டுமென்று கருதுவதும் அல்லாஹுத் தஆலாவுடைய (கலாகத்றை) ஏற்பாட்டை எதிர்ப்பதற்கு ஒப்பாக இருக்கிறது. இதனைக் குறித்துத்தான் وَلَا تَتَمَنَّوْا مَا فَضَّلَ اللّٰهُ بِهٖ بَعْضَكُمْ عَلٰى بَعْضٍ **இன்னும் அல்லாஹ் சிலரைப் பார்க்கினும் உங்களிற் சிலரை எதைக் கொண்டு மேன்மையாக்கி வைத்தானோ அந்த ஒன்றை நீங்கள் ஆசை கொள்ளாதீர்கள்** என்று இவ்வசனத்திற் கூறப்பட்டிருக்கிறது.

வாரிசுபாத்தியத்தில் ஆடவர்களுக்கு இரண்டு பங்கு என்றும், பெண்களுக்கு ஒரு பங்கு என்றும் அல்லாஹுதஆலா கட்டளையிட்ட போது "நாங்கள்தான் இரண்டு பாகங்களை அடைவதற்கு அதிகம் தேவையுள்ளவர்கள். இன்னும் ஆடவர்களுக்கு ஒரு பங்கு போதுமானது. ஏனெனில், நாங்கள்தான் பலஹீனர்கள். ஆடவர்கள் சம்பாதிப்பதற்கு எங்களைப் பார்க்கினும் அதிகப் பலமுள்ளவர்கள்'' என்று பெண்கள் கூறினர். அதற்கு மறு மொழியாக لِلرِّجَالِ نَصِيْبٌ مِّمَّا اكْتَسَبُوْا ؕ وَلِلنِّسَآءِ نَصِيْبٌ مِّمَّا اكْتَسَبْنَ **"ஆடவர்களுக்கு அவர்கள் சம்பாதித்ததில் பங்கிருக்கிறது. இன்னும் பெண்களுக்கு அவர்கள் சம்பாதித்ததில் பங்கிருக்கிறது**'' என்ற வசனம் அருளப்பட்டது.

தவிர, உம்முல் மூமினீன் ஹளரத் உம்மு ஸல்மா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்கள் "நாங்கள் ஆடவர்களாக இருந்தால் நாங்களும் சன்மார்க்க யுத்தத்திற்குச் செல்வோம் ஆடவர்களுக்குக் கிடைக்கிற நற்கூலி போன்றது எங்களுக்கும் கிடைக்குமே'' என்று கூறினார். அப்போது இந்த வசனம் அருளப்பட்டது என்றுஞ் சொல்லப்படுகிறது.

وَلِكُلٍّ جَعَلْنَا مَوَالِيَ مِمَّا تَرَكَ الْوَالِدٰنِ وَالْاَقْرَبُوْنَ

وَالَّذِينَ عَقَدَتْ أَيْمَانُكُمْ فَآتُوهُمْ نَصِيبَهُمْ ۚ
إِنَّ اللَّهَ كَانَ عَلَىٰ كُلِّ شَيْءٍ شَهِيدًا ﴿٣٣﴾

33. இன்னும் (ஆண் பெண் ஆகிய) ஒவ்வொருவருக்கும் இரு பெற்றோர்களும் உறவினர்களும் விட்டதிலிருந்து அனந்தரக் காரர்களை ஏற்படுத்தி இருக்கிறோம்; இன்னும் நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்டோருக்கு அவர்களுடைய பங்கைக் கொடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் பார்ப்பவனாக இருக்கிறான்.

مَوَالِيَ **மவாலிய** என்ற பதம் **மவ்லா** என்ற பதத்திற்குப் பன்மைச் சொல். மவ்லா என்பதற்கு வாரிசுதாரர் என்பது பொருள். இது ஃபராயிலுக்காரர்கள் (திருக்குர்ஆனில் கூறப்பட்டவாறு பங்குகளை மட்டும் பெறக்கூடியவர்கள்) அஸபத்துக்காரர்கள் (வாரிசுகள்) முதலிய சகல விதமான வாரிசுகளுக்கும் பொதுவான பதம்.

முற்காலத்தில் ஒருவருக் கொருவர் யுத்தம் முதலியவற்றில் உதவிக்குச் செல்வதென்றும், இதற்காக ஒருவருடைய சொத்தில் இன்னொருவர் ஆறிலொரு பாகம் வாரிசு பாத்தியமாக அடைவது என்றும் சத்தியம் செய்து உடன் படிக்கை செய்து கொள்வது வழக்கம். இவ்வுடன்படிக்கைப்படி அவர்களுக்கேற்பட்ட பங்கைக் கொடுத்து விடவேண்டும் என்று இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆயத்திலுள்ள இவ்விதி **இன்னும் (இரத்தக் கலப்புள்ள) உறவினர்கள் சிலரைக் கொண்டு சிலர் மிகவும் பாத்தியமுள்ளவர்கள்** 8:75 என்ற ஆயத்தின் மூலம் மாற்றப்பட்டு விட்டது.

الرِّجَالُ قَوَّامُونَ عَلَى النِّسَاءِ بِمَا فَضَّلَ اللَّهُ بَعْضَهُمْ
عَلَىٰ بَعْضٍ وَبِمَا أَنْفَقُوا مِنْ أَمْوَالِهِمْ ۚ فَالصَّالِحَاتُ
قَانِتَاتٌ حَافِظَاتٌ لِلْغَيْبِ بِمَا حَفِظَ اللَّهُ ۚ وَاللَّاتِي

تَخَافُونَ نُشُوزَهُنَّ فَعِظُوهُنَّ وَاهْجُرُوهُنَّ فِي
الْمَضَاجِعِ وَاضْرِبُوهُنَّ ۖ فَإِنْ أَطَعْنَكُمْ فَلَا تَبْغُوا
عَلَيْهِنَّ سَبِيلًا ۗ إِنَّ اللَّهَ كَانَ عَلِيًّا كَبِيرًا ﴿٣٤﴾

34. அல்லாஹ் சிலரை (அதாவது ஆடவர்களை)ச் சிலரின் மீது (அதாவது பெண்களின் மீது) மேன்மைப்படுத்தி வைத்திருப்பதனாலும், தங்களின் பொருள்களிலிருந்து அவர்கள் (பெண்களுக்காகச்) செலவு செய்வதனாலும் ஆடவர்கள் பெண்களுக்குத் தலைவர்களாக இருக்கின்றனர். ஆகவே, நல்ல பெண்கள் (தங்கள் கணவன்மார்களுக்குக்) கீழ்ப்படிபவர்களாக இருக்கின்றனர். (பெண்களை நேர்மையாக நடத்த வேண்டுமென ஆடவர்களுக்குக் கட்டளையிட்டிருப்பதன் மூலம்) அல்லாஹ் (பெண்களைப்) பாதுகாப்பதால் (பெண்கள் தம் கணவரில்லாத காலத்தில் தங்கள் வெட்கஸ்தலங்களாகிய) மறைவைப் பாதுகாப்பவர்களாக இருக்கின்றனர். இன்னும், அப்பெண்கள் (தங்கள் கணவருக்குக் கீழ்ப்படியாமல்) அவர்களுடைய மீறுகையை நீங்கள் பயந்தால், அவர்களுக்கு (நற்புத்தி) போதியுங்கள். இன்னும், அவர்களைப் படுக்கைகளில் வெறுத்திருங்கள்; இன்னும், (அவர்கள் இணங்கி வராவிடின் இலேசாக) அவர்களை அடியுங்கள்; எனவே, அவர்கள் உங்களுக்குக் கீழ்ப்படிந்து விட்டால், அவர்கள் மீது (குறை கூறுவதற்கான எவ்வித) வழியையும் நீங்கள் தேட வேண்டாம்; நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்ந்தவன்; மிகப் பெரியவன்.

பெண்களைப் பார்க்கினும் ஆடவர்கள் பல காரியங்களில் மேன்மையானவர்கள். கல்வி, அறிவு, பலம், உறுதி முதலியவற்றில் பெண்களைப் பார்க்கினும் ஆடவர்கள் மேன்மையானவர்கள். அன்றியும், பெண்களுக்கு மஹர் கொடுத்தல், அன்னவஸ்திரமளித்தல் முதலிய செலவுகளை எல்லாம் ஆடவர்களே செய்வதால் பெண்களைத் திருத்துவதற்காக ஆடவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, சன்மார்க்கத்திற்கு இணக்கமான பெண்கள் தங்கள் கணவன்மார்

களுக்கும் அல்லாஹுத்தஆலாவிற்கும் கீழ்ப்படிந்து, தங்கள் கணவன்மார்கள் இல்லாத சமயங்களில் வீடுவாசல், பொருள், கற்பு முதலியவற்றைப் பாதுகாப்பார்கள். பெண்களிடத்தில் பிணக்கு இருப்பதை ஆடவர்கள் உணர்ந்தால் அவர்களுக்கு முதலில் நல்ல வார்த்தைகளை கூறி உபதேசங்கள் மூலமாக அதனைத் திருத்த வேண்டும். அதற்கு முடியவில்லையெனில் படுக்கையில் அவர்களை விலக்கி வைக்க வேண்டும். அதற்கும் திருந்தவில்லை யானால் அவர்களை அடிக்க வேண்டும். இவ்விதமூன்று வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலமாக அவர்கள் தங்கள் கணவன்மார் களுக்குக் கீழ்ப்படிந்து விட்டால் அப்புறம் அவர்களை நெருக்கடி செய்வதற்கான வழியை ஆடவர்கள் தேடவே கூடாது என்பன இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விதிகளாகும்.

ரிவாயத்து:- அன்ஸாரிகளிலுள்ள தக்கீப்களில் ஒருவரான ஸஅதுப்னுர் ரபீஃ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது மனைவி ஹபீபா ரலியல்லாஹுதஆலா அன்ஹா என்பவர் பிணங்கிக் கொண்டார். ஆகவே, ஸஅது ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் தமது மனைவியான ஹபீபா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களை முகத்தில் அறைந்தார்கள். ஆதலின் ஹபீபா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களது தந்தையான ஜைதுப்னு அபீஜுஹைர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் தமது புதல்வியை அழைத்துக் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து முறையிட்டார். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “அவரிடம் நாம் பழிவாங்குவோம்” என்று கூறினார்கள். அச்சமயத்தில் இந்த ஆயத்து அருளப்பட்டது. உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதனைக் குறித்து “நாம் ஒரு காரியத்தை நாடினோம். அல்லாஹ் வேறு ஒரு காரியத்தை நாடினான். ஆனால், அல்லாஹ் நாடியதுதான் நல்லது” என்று கூறினார்கள்.

ஹதீஸ்:- “ஒருபெண் ஐந்து நேரங்களின் தொழுகைகளை நிறைவேற்றி, ரமலான் மாதம் நோன்பு நோற்று, அவளது கற்பைப்

பேணி, தனது கணவனுக்கும் கீழ்ப்படிவாளாயின் அவள் சுவர்க்கத்து வாசல்களில் அவள் விரும்பிய வாசல் வழியாக சுவர்க்கத்தில் பிரவேசிப்பாள்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹதீஸ்:- கணவன் அனுமதியின்றி மனைவி வீட்டை விட்டு வெளிப்பட்டால், அவளது கணவன் அநியாயஸ்தனாக இருந்த போதிலும் அவனிடத்தில் அவள் சமாதானப்படுத்திக் கொள்ளும் வரை அல்லது அல்லாஹு தஆலாவிடத்தில் அவள் தவ்பாச் செய்யும் வரை கோபத்துடைய மலக்குகள் அவளை சபித்துக் கொண்டிருப்பார்கள்.

وَإِنْ خِفْتُمْ شِقَاقَ بَيْنِهِمَا فَابْعَثُوا حَكَمًا مِّنْ
أَهْلِهِ وَحَكَمًا مِّنْ أَهْلِهَا ۚ إِن يُرِيدَا إِصْلَاحًا
يُوَفِّقِ اللَّهُ بَيْنَهُمَا ۗ إِنَّ اللَّهَ كَانَ عَلِيمًا خَبِيرًا ﴿٣٥﴾

35. இன்னும், (கணவன் மனைவி ஆகிய) அவ்விருவருக்கு மிடையில் பிரிவினை ஏற்பட்டு விடும் என்று நீங்கள் பயந்தீர்களானால் (கணவனாகிய) அவனைச் சேர்ந்தவரிலிருந்து ஒரு மத்தியஸ்தரையும், (மனைவியாகிய) அவளைச் சேர்ந்தவரிலிருந்து ஒரு மத்தியஸ் தரையும் நீங்கள் அனுப்புங்கள்.(கணவன் மனைவிக் கிடையில்) இணக்கத்தை அவ்விருவரும் கண்டார்களாயின் அவ்விருவருக்கு மிடையில் அல்லாஹ் ஒற்றுமையை ஏற்படுத்தி விடுவான். நிச்சயமாக அல்லாஹ் (மிகவும்) அறிந்தவனாக(வும்) உணர்ந்தவனாக(வம்) இருக்கிறான்.

கணவனுக்கும் மனைவிக்குமிடையில் பிணக்கு ஏற்பட்டால் கணவனைச் சேர்ந்த ஒரு நீதிவானையும், மனைவியைச் சேர்ந்த ஒரு நீதிவானையும் மத்தியஸ்தராக நியமித்து அவ்விருவருக்கு மிடையில் சமாதானம் செய்து வைக்க வழியுண்டாவென்று கவனிக்க வேண்டும். இருவரையும் சேர்த்து வைக்கலாம் என்று அம்மத்தியஸ்தர் கருதும் பட்சத்தில் அல்லாஹுதஆலா அவ்விருவருக்கு மிடையில்

ஒற்றுமையை ஏற்படுத்தி விடுவான் என்பது இந்த ஆயத்தின் கருத்து. மேலும், இந்த ஆயத்தில் பிணங்கிக் கொண்ட தம்பதிகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தி அவர்களைச் சேர்த்து வைக்க வேண்டும் என்ற விபரம் தூண்டப்பட்டுள்ளது.

ஹதீஸ்:- தொழுகை, நோன்பு, சதக்கா ஆகியவற்றைப் பார்க்கினும் சிறந்ததை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். அதற்கு மனிதர்கள் "நல்லது" என்றார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "சமாதானம் செய்து வைத்தல்" என்று கூறினார்கள்.

وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوْا بِهٖ شَيْئًا وَّبِالْوَالِدَيْنِ
اِحْسَانًا وَّبِذِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ
وَالْجَارِ ذِى الْقُرْبٰى وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ
بِالْجَنْۢبِ وَابْنِ السَّبِيْلِ ۙ وَمَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ؕ
اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ مَنْ كَانَ مُخْتَالًا فَخُوْرَا ۙ

36. இன்னும், அல்லாஹ்வை நீங்கள் வணங்குங்கள்; இன்னும் அவனுக்கு எதையும் இணைவைக்காதீர்கள். இன்னும், இரு பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், நெருங்கிய சுற்றத்தார்களுக்கும், விலகிய சுற்றத்தார்களுக்கும் கூட்டாளிகளாக இருப்போருக்கும், பிரயாணிக்கும், உங்கள் வலக்கரங்கள் சொந்தப்படுத்திக் கொண்டவர் (அடிமை) களுக்கும் உபகாரம் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் அகம்பாவம் கொள்பவனாக (இன்னும்) தற்பெருமை கொள்பவனாக இருப்பவனை நேசிக்க மாட்டான்.

சுவர்க்கம் தாய்மார்களது கால்களுக்குக் கீழிலிருக்கிறது என்றும், சுவர்க்கத்துடைய வாடையை ஐனூறு வருடத் தொலைக்கு அப்பாலிருப்பவன் அடைய முடியும்; ஆனால், தாய் தந்தையரை நோவினை செய்தவர்களும், உறவினர்களை ஆதரிக்காமல் இருந்தவர்களும் அவ்வாடையை அடைய மாட்டார்கள் என்றும், ஒருவர் அனாதைக் கிரங்கி, அவனது தலையில் தனது கையை வைத்துத் தடவுவாராயின் அவரது கைபட்ட ஒவ்வொரு முடிக்கும் ஒரு நன்மை எழுதப்படுமென்றும், மிஸ்கீன் குதிரை மீது ஏறி வந்தாலும் கொடுங்கள் என்றும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"வீட்டு வாசலுக்கு வந்த மிஸ்கீனுக்கு ஒரு நாள் ஒன்றும் கொடுக்காமல் அனுப்பினால் அந்த வீட்டிற்குப் படி அளக்கும் மலக்கு அந்த வீட்டை ஏழு நாட்களுக்கு எட்டிப்பார்க்க மாட்டார்" என்று ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"பக்கத்து வீட்டுக்காரர் பசித்திருப்பதை அறிந்துகொண்டு வயிறு நிறம்பப் புசிப்பவர்கள் என்னை உறுதி கொண்டவர்களில்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். இன்னும் ஹளரத் அபூதர்ரு ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அபூதர்ரே! உமது வீட்டில் நீர் இறைச்சி சமையல் செய்தால் அதிகமாகக் குழம்பு வைத்து உன் பக்கத்து வீட்டுக்காரருக்கும் கொடு" என்று கூறினார்கள்.

اَلَّذِيْنَ يَبْخَلُوْنَ وَيَاْمُرُوْنَ النَّاسَ بِالْبُخْلِ
وَيَكْتُمُوْنَ مَاۤ اٰتٰٮهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ؕ وَاَعْتَدْنَا
لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا ۙ

37. கஞ்சத்தனம் செய்து (ஏனைய) மனிதர்களையும், கஞ்சத்தனம் செய்யும்படி ஏவி, தங்களுக்கு அல்லாஹ் தனது

அருளிலிருந்து கொடுத்ததை மறைக்கிறார்களே அவர்கள் (அவர்களுக்குக் கடுமையான வேதனை யுண்டு). இன்னும் காஃபிர்களுக்கு இழிவைத் தரும்படியான வேதனையை நாம் சித்தஞ் செய்து வைத்திருக்கிறோம்.

யூதர்கள் அன்ஸாரிகளை நோக்கி "உங்களது பொருள்களை நீங்கள் செலவு செய்யாதீர்கள். அவ்வாறு செலவு செய்தால் உங்களுக்கு தரித்திரம் வந்துவிடுமென நாங்கள் அஞ்சுகிறோம்" என்று உபதேசம் செய்யும் முறையில் கூறினர். அவர்களது இக்கூற்றைக் கண்டித்து இந்த ஆயத்து அருளப்பட்டது.

தவிரவும், وَاَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا **"இன்னும் காஃபிர் களுக்கு இழிவைத் தரும்படியான வேதனையை நாம் சித்தஞ் செய்து வைத்திருக்கிறோம்"** என்ற இவ்வசனம் தாங்களும் கஞ்சத்தனஞ் செய்து மற்றவர்களையும் கஞ்சத்தனம் செய்யும்படி ஏவுபவர்கள் அல்லாஹு தஆலாவினாலளிக்கப்பட்ட செல்வம், பொருள் முதலிய அருட்கொடைகளை நிராகரிப்பவர்கள் என்பதை அறிவிக்கிறது. ஆகவே, அல்லாஹு தஆலா அளித்துள்ள அருட்கொடைகளைப் பிறருக்கு ஈயாமல் அவற்றை அவர்கள் அவமதித்தால் கஞ்சத்தனஞ் செய்த அவர்களுக்கு அல்லாஹு தஆலா அவமதிப்பான வேதனையை அளிப்பான் என்பது இவ்வசனத்திலிருந்து வெளியாகிறது.

وَالَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ رِئَآءَ النَّاسِ وَلَا
يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَلَا بِالْيَوْمِ الْاٰخِرِ ؕ وَمَنْ يَّكُنِ الشَّيْطٰنُ
لَهٗ قَرِيْنًا فَسَآءَ قَرِيْنًا ۝

38. இன்னும், அல்லாஹ்வையும், கடைசி நாளையும் ஈமான் கொள்ளாமல், மனிதர்களுக்குத் தங்களைக் கொடையாளி என்று காண்பித்துக் கொள்வதற்காகத் தங்களுடைய பொருள்களைச் செலவு செய்கிறார்களே அவர்கள் (அவர்களுக்கும் இழிவைத் தரும் வேதனையுண்டு) இன்னும், எவருக்கு ஷைத்தான் கூட்டாளியாக

இருக்கிறானோ (ஷைத்தானாகிய அவன் அவருக்குக்) கெட்ட கூட்டாளியாவான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விரோதமாகச் செலவு செய்யும் மக்கத்து முஷ்ரிக்குகளைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டது. தவிரவும், இந்த ஆயத்தும் இதற்கு முந்திய ஆயத்தில் கூறப்பட்ட விதியுடன் சேர்ந்தது. அதாவது அல்லாஹு தஆலாவினால் அளிக்கப்பட்ட அருட்கொடைகளை கஞ்சத்தனம் செய்பவர்களும், அதனைச் செலவு செய்ய வேண்டிய இடத்தில் செலவு செய்யாமல் வீணாகவும் பெருமைக்காகவும் செலவு செய்பவர்களும் இறைவனது வேதனைக்கு ஆளாவார்கள் என்பது இந்த ஆயத்துகளின் கருத்து.

وَمَاذَا عَلَيْهِمْ لَوْ اٰمَنُوْا بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ
وَاَنْفَقُوْا مِمَّا رَزَقَهُمُ اللّٰهُ ؕ وَكَانَ اللّٰهُ بِهِمْ عَلِيْمًا ۝

39. இன்னும், அல்லாஹ்வையும் கடைசி நாளையும் அவர்கள் ஈமான் கொண்டு, அவர்களுக்கு அல்லாஹ் அளித்துள்ளதிலிருந்து செலவு செய்திருந்தால் அவர்களுக்கு (நேர்ந்து விடுவது) என்ன? மேலும், அல்லாஹ் அவர்களை (மிகவும்) அறிந்தவனாக இருக்கிறான்.

கஞ்சத்தனம் செய்பவர்களையும், மனிதர்களுக்குக் காண்பிப் பதற்காகச் செலவு செய்பவர்களையும் இந்த ஆயத்து கண்டித்து அவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறது. அல்லாஹு தஆலாவையும் கடைசி நாளையும் ஈமான் கொண்டு, இதய சுத்தியுடன் அவனது அருட்கொடைகளை அவனது சன்மார்க்கத்திற்காகச் செலவு செய்ய வேண்டும் என்பதும் இந்த ஆயத்தின் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது.

ரிவாயத்து:- "அல்லாஹுதஆலா ஒருவரை அழிக்க விரும்புவானாயின் அவரை மூன்று காரியங்களைக் கொண்டு சோதிப்பான். முதலாவது அவருக்குக் கல்வி அறிவை அளிப்பான்.

ஆனால், கற்ற பெரியோர்களது நற்செயல்களைச் செய்ய விடாமல் அவரைத் தடுத்து விடுவான். இரண்டாவது, பெரியோர்களது உறவை அவருக்கு அளிப்பான். ஆனால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை உணர விடாமல் அவரைத் தடுத்து விடுவான். மூன்றாவது அவருக்கு நற்செயல்களைச் செய்வதற்குரிய வாசலைத் திறந்து விடுவான். ஆனால், இக்லாஸ் என்னும் இதய சுத்தியுண்டாகாமல் அவரைத் தடுத்து விடுவான். இவ்விதமான காரியங்கள் உண்டாகுவது அவருடைய எண்ணம் கெட்டதாக இருப்பதாலும், அவரது குணம் தீங்கானதாக இருப்பதாலுமேயாகும். ஏனெனில், (நிய்யத்து) என்னும் எண்ணம் சரியானதாக இருக்குமாயின் அவருக்கு அல்லாஹு தஆலா கல்வியறிவின் பிரயோஜனத்தையும், பெரியோர்களது கடமையை உணரும் தன்மையையும், இதய சுத்தியையும் அளிப்பான்" என்று ஹாமிதுல்லப்பாப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

إِنَّ اللَّهَ لَا يَظْلِمُ مِثْقَالَ ذَرَّةٍ ۖ وَإِن تَكُ حَسَنَةً
يُضَاعِفْهَا وَيُؤْتِ مِن لَّدُنْهُ أَجْرًا عَظِيمًا ۝

40. நிச்சயமாக அல்லாஹ் அணுவளவும் அநியாயஞ் செய்ய மாட்டான். மேலும், (அணுவளவு) அது நன்மையானதாக இருக்குமாயின் அதனை இரட்டிப்பாக்குவான். இன்னும் தன்னிடத்தில் இருந்து மகத்தான (நற்) கூலியைக் கொடுப்பான்.

ذَرَّةٍ **தர்ரத்துன்** என்பது கண்ணால் பார்ப்பதுங் கூடச் சிரமமாக இருக்கிற அளவிற்குச் சிறியதாகவுள்ள சிகப்பு எறும்புக்கும், மண்ணின் இனத்தில் மிகச் சிறியதாகவுள்ளதற்கும், காற்றில் பறக்கும் படியான தூசி முதலியவற்றிலிருந்து ஜன்னல் வழியாக வீட்டிற்குள் விழும் சூரியனின் வெய்யலில் தோன்றும் மிக அற்பமான பொருளுக்கும் பெயர். இதனை அணுவென்றும் சொல்வர்.

தவிரவும் அல்லாஹு தஆலா அநியாயஞ் செய்ய மாட்டான்

என்பதற்கு அடியார்கள் செய்த நற்செயல்களுக்கு நியாயமாக ஏற்பட்டுள்ள நன்மைப் பயனில் ஒரு அணுவளவேனும் குறைக்க மாட்டான் என்பதும், அடியார்கள் செய்த தீமையான காரியத்திற்கு அளிக்க வேண்டிய நியாயமான தண்டனைக்கு மேல் அதிகமாக அணுவளவேனும் தண்டிக்க மாட்டான் என்பதும் கருத்து.

فَكَيْفَ إِذَا جِئْنَا مِن كُلِّ أُمَّةٍ بِشَهِيدٍ وَجِئْنَا بِكَ عَلَىٰ
هَٰؤُلَاءِ شَهِيدًا ۝

41. எனவே, (நபியே) ஒவ்வொரு உம்மத்திலிருந்தும் (அந்தந்த உம்மத்தின் நபிமார்களைசி) சாட்சியாகவும், உம்மை இவர்கள் யாவருக்கும் சாட்சியாகவும் நாம் கொண்டு வரும்போது (நபிமார்களையும், உம்மையும் நிராகரித்தவர்களின் நிலைமை எப்படி இருக்கும்?

مِن كُلِّ أُمَّةٍ بِشَهِيدٍ **ஒவ்வொரு உம்மத்திலிருந்தும் ஒரு சாட்சிக் காரர்** என்றது ஒவ்வொரு வர்க்கத்தாரிடமும் அனுப்பப்பட்ட நபிமார்களைக் குறிக்கும். அந்த நபிமார்கள் கியாமத்து நாளில் தங்கள் உம்மத்துகளது கெட்ட செய்கைகளையும் தவறான கொள்கைகளையும் குறித்து சாட்சியங் கூறுவர்.

هَٰؤُلَاءِ **ஹாவுலாயி** என்பதற்கு அந்தக் கூட்டத்தினர் என்பது பொருள். இந்த இடத்தில் இந்தப் பதம் முற்காலத்தில் தோன்றிய நபிமார்கள் அனைவரையும் குறிக்கும். அல்லது, அந்த நபிமார்களது உம்மத்துகளைக் குறிக்கும். ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நியாயத் தீர்ப்பு நாளில் முற்காலத்து நபிமார்கள் தங்களது உம்மத்துகளைக் குறித்துக் கூறும் சாட்சியத்தில் உண்மையானவர்கள் என்பதை அல்லது, அந்த நபிமார்களது உம்மத்துகள் பாவம் செய்து தங்கள் நபிமார்களுக்குக் கீழ்ப்படியாமல் இருந்ததைக் குறித்து சாட்சி கூறுவார்கள் என்பது கருத்து.

يَوْمَئِذٍ يَوَدُّ الَّذِينَ كَفَرُوا وَعَصَوُا الرَّسُولَ لَوْ تُسَوَّىٰ بِهِمُ

الْأَرْضُ ۖ وَلَا يَكْتُمُونَ اللَّهَ حَدِيثًا

42. அந்நாளில் நிராகரித்து ரசூலுக்கு மாறு செய்தார்களே அவர்கள் தங்களைக் கொண்டு பூமி சரியாக்கப்பட வேண்டுமே என்று விரும்புவார்கள். இன்னும், அல்லாஹ்விடத்தில் எந்தச் செய்தியையும் மறைக்க மாட்டார்கள்.

இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்ட மனிதர்களது அதாவது நபிமார்களால் சாட்சியங் கூறப்பட்ட உம்மத்துகளது நிலையைப் பற்றி இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, ரசூலுக்கு மாறு செய்தவர்களும் காஃபிர்களும் தங்களைப் பூமிக்குள்ளேயே புதைத்து விட வேண்டும் அல்லது தங்களை எழுப்பி இருக்கவே கூடாது அல்லது சிருஷ்டித்திருக்கவே கூடாது என்று கருதுவார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

பறவை, மிருகங்கள் முதலியவைகள் கேள்வி கணக்குக் கேட்கப் பட்டு பதிலுக்கு பதில் கொடுக்கப்பட்டபின் அவற்றை நோக்கி இறைவன் "நீங்கள் மண்ணாகி விடுங்கள்" என்று கூறுவான்; அவைகள் மண்ணாகிவிடும். இதனைப் பார்த்த காஃபிர்கள் நாமும் மண்ணாகிவிட வேண்டுமே என்று விரும்புவார்கள் என்று அபூஹாமிது முஹம்மதுப்னுல் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தம்முடைய **கஷ்ஃபுல் உலூமில் ஆகிரா** என்ற கிரந்தத்தில் எழுதி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- கியாமத்து நாளில் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அழைக்கப்படுவார்கள். உடனே, அவர் 'லப்பைக்க' (அதாவது பணிந்தேன்) என்று கூறுவார்கள். அப்பொழுது அவரை நோக்கி "(உமது உம்மத்துகளிடம் சன்மார்க்கக் கட்டளைகளைச்) சேர்ப்பித்தீரா?" என்று கேட்பான். அதற்கு அவர்கள் "ஆம்" என்று கூறுவார்கள். அப்பொழுது அவரது உம்மத்துகளிடம் "உங்களுக்கு அவர் அறிவித்தாரா?" என்று வினவப்படும். அதற்கு அவர்கள் "அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவர் எவரும் எங்களிடம் வரவில்லை"

என்று கூறுவார்கள். அதற்கு (ஹளரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி) "உமக்கு சாட்சி சொல்பவர் இருக்கிறாரா?" என்று வினவப்படும். அவர்கள் "முஹம்மதும் அவருடைய உம்மத்துகளும் சாட்சி சொல்வார்கள்" என்று கூறுவார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களுடைய உம்மத்துகளும் "அவர் அறிவித்தார்" என்று சாட்சியங் கூறுவார்கள். இவ்விதமாக ஒவ்வொரு நபியும் விசாரிக்கப்படுவார்கள். பிறகு ஒவ்வொரு மனிதரும் அவரவரது பெயரைச் சொல்லித் தனித்தனியே அழைக்கப்பட்டு "அவருடைய கிரியைகள் நல்லதோ கெட்டதோ கொஞ்சமோ அதிகமோ எல்லாம் காண்பிக்கப்படும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَقْرَبُوا الصَّلَاةَ وَأَنتُمْ سُكَارَىٰ
حَتَّىٰ تَعْلَمُوا مَا تَقُولُونَ وَلَا جُنُبًا إِلَّا عَابِرِي سَبِيلٍ
حَتَّىٰ تَغْتَسِلُوا ۚ وَإِن كُنتُم مَّرْضَىٰ أَوْ عَلَىٰ سَفَرٍ أَوْ جَاءَ
أَحَدٌ مِّنكُم مِّنَ الْغَائِطِ أَوْ لَامَسْتُمُ النِّسَاءَ فَلَمْ
تَجِدُوا مَاءً فَتَيَمَّمُوا صَعِيدًا طَيِّبًا فَامْسَحُوا
بِوُجُوهِكُمْ وَأَيْدِيكُمْ ۗ إِنَّ اللَّهَ كَانَ عَفُوًّا غَفُورًا

43. ஈமான் கொண்டவர்களே! நீங்கள் போதையில் இருக்கும் போது, நீங்கள் கூறுவது இன்னது என்று நீங்கள் அறியும் வரையிலும், (நீங்கள்) ஜுனுபாளியாக இருக்கும் போதும் இன்னும் வழிப்போக்கராக இருந்தாலன்றி, நீங்கள் குளிக்கும் வரையிலும் தொழுகைக்கு நெருங்காதீர்கள். ஆனால் நீங்கள் நோயாளிகளாகவோ அல்லது பிரயாணத்திலோ நீங்களிருந்தீர்களானால் அல்லது உங்களிலொருவர் மலம் ஜலம் கழிக்குமிடத்திலிருந்து வந்தால் அல்லது பெண்களை நீங்கள் தீண்டினால், தண்ணீரை

நீங்கள் பெற்றுக் கொள்ளாவிடில் சுத்தமான மண்ணை நீங்கள் தேடி, உங்களது முகங்களையும் உங்களது கைகளையும் தடவிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாக(வும்) பிழை பொறுப்பவனாக(வும்) இருக்கிறான்.

ரிவாயத்து:- ஹளரத் அப்துர் ரஹ்மானிப்னு அவ்ஃப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் பிரபல ஸஹாபிகளுக்கு ஒரு முறை விருந்தளித்தார்கள். அக்காலத்தில் மது விலக்கப்பட்டிருக்க வில்லை. ஆகவே, விருந்துக்கு வந்திருந்தவர்கள் உணவருந்தி விட்டு மதுபானத்தையும் அருந்தினர். அவர்கள் போதையான சமயம் மக்ரிபுத் தொழுகைக்கு நேரமாயிற்று. ஆகவே, அவர்களிலொருவர் தொழுகைக்கு முன் நின்றார். மற்றவர்கள் பின்னாலிருந்து இமாம் ஜமாஅத்தாகத் தொழுதனர். அப்பொழுது இமாமாக நின்றவர் கிரஅத் ஓதும் போது என்று ஸூரத்துல் காஃபிரூனை அதிலுள்ள **லா** என்ற அட்சரங்களை விட்டு ஓதினார். (நபியே நீர் கூறுவீராக, காஃபிர்களே நீங்கள் 'வணங்குவதை நான் வணங்குகிறேன். இன்னும் நான் வணங்குவதை நீங்கள் வணங்குகிறவர்களாக இருக்கிறீர்கள் என்பது இதன் பொருள்) அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது. இதற்குப் பிறகு அவர்கள் தொழுகைக்குரிய நேரங்களில் மதுபானம் அருந்து வதில்லை. இஷாத் தொழுகையை நிறைவேற்றிய பின்னர் மதுவை யருந்துவர். அவர்கள் காலையில் எழுந்திருக்கும் போது மதுபானம் அருந்துவது கூடாது என்ற கண்டிப்பான பொது விதி அருளப்பட்டது.

தவிர இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விலக்கல் போதையாக இருக்கும் போது தொழுகையை நிறைவேற்றக் கூடாது என்று தொழுகையைத் தடை செய்யவில்லை. மதுபானம் அருந்து வதைத்தான் இது தடை செய்கிறது.

மேலும், **அஸ்ஸக்கர்** அதாவது போதை என்பது மனிதனுக்கும் அவனது அறிவுக்கு மிடையில் ஏற்படுகிற தடையான ஒரு நிலைக்குப் பெயர். இது மதுபானம் அருந்துவதாலும், காதலாலும், தூக்கத்தாலும், கோபத்தாலும், பயத்தாலும், இன்னும் பல காரணங்களாலும் உண்டாகும். என்றாலும், மதுபானம் அருந்துவதால்தான் இது

அதிகமாக ஏற்படுவது வழக்கம். ஆதலின், இந்த இடத்தில் "**நீங்கள் பாதையில் இருக்கும் போது**" என்ற பதத்திற்கு "மதுபானம் அருந்தி இருக்கும் போது" என்று கருத்துக் கொள்ளப்படுகிறது.

جُنُبًا **அல்ஜுனுபு** என்பது **ஜனாபத்** என்னும் வினையாலணையும் பெயரிலிருந்து பிறந்தது. ஜனாபத் என்பதற்கு தூரமாகுதல் என்பது இயற்பொருள். குறிப்பிட்ட சில காரணத்திற்காக ஆண், பெண்கள் திருக்குர்ஆன் ஓதுதல், தொழுகையை நிறை வேற்றுதல், தொழும் இடத்திற்குச் செல்லல் முதலிய காரியங்களை விட்டுத் தூரமாக்கப் படுவதால் குளிக்கக் கடமைப்பட்டவர்களுக்கு ஜுனுபாளி என்ற பெயர் வந்தது.

مَرْضَىٰ **மர்லா** என்பது **மரீல்** என்றதின் பன்மைச் சொல். **மரீல்** என்பதற்கு நோயாளி என்பது பொருள். இவர்கள் மூன்று வகைப் படுவர். தண்ணீரை உபயோகித்தால் மரணத்தை விளைவிக்கக் கூடிய நோய்களுள்ளவர்கள் ஒரு வகையினர். தண்ணீரை உபயோகிப்பதால் மரணத்தை விளைவிக்காவிடினும் அதனால் நோய் அதிகப்பட்டு அதிக கஷ்டத்தை யுண்டு பண்ணக்கூடிய வியாதியுள்ளவர்கள் மற்றொரு வகையினர். தண்ணீரை உபயோகிப்பதால் மரணம் சம்பவிக்கும் அல்லது நோய் அதிகமாகும் என்ற பயமில்லாவிடினும் நோய் விரைவில் குணமாகாது. உடம்பில் குறை இருக்கும் என்ற பயம் மட்டும் உள்ள நோயாளிகள் மூன்றாவது வகையினர். இம்மூவகையினரில் முதலில் கூறப்பட்ட இரண்டு வகை நோயாளிகள் தண்ணீரை உபயோகிப்பதற்குப் பதிலாக சுத்தமான மண்ணை உபயோகித்துத் தயம்மம் செய்து கொள்ளலாம். மூன்றாவது வகையைச் சேர்ந்த நோயாளிகள் தயம்மம் செய்யக் கூடாது.

الْغَائِطِ **அல்காயித்** என்பது பள்ளமான இடத்திற்குப் பெயர். மலஜல உபாதைகளுக்குச் செல்வோர் தன்னைப் பிறர் பார்க்காதிருக்கும் பொருட்டு பள்ளமான இடத்திற்குச் செல்வர். ஆகவே, கழிவறைக்குச் சென்று வருவோரை இந்த வாக்கியம் சமிக்ஞை செய்கிறது.

لامستم النساء லாமஸ்து முன்னிஸாஅ அதாவது பெண்களை நீங்கள் தீண்டினீர்களானால் என்பதற்கு பெண்களிடம் உடலுறவு கொண்டால் என்பது கருத்து.

فلم تجدوا ماء "நீங்கள் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளவில்லையானால்" என்ற வசனத்திற்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்பது மட்டும் கருத்தல்ல. தண்ணீர் கிடைக்காததால் அல்லது தூரத்திலிருப்பதால் அல்லது தண்ணீரை எடுப்பதற்குரிய பாத்திரம் இல்லாதிருப்பதால், தண்ணீரைக் கொண்டு வருவதற்கு முடியாமல் பாம்பு, கொடிய மிருகங்கள் முதலிய தடைகள் இருப்பதால் தண்ணீரை உபயோகிப்பதற்குச் சக்தி இல்லாதிருக்க வேண்டும் என்பது கருத்து.

الم تر الى الذين اوتوا نصيبا من الكتب
يشترون الضللة ويريدون ان تضلوا السبيل ۝

44. வேதத்திலிருந்து ஒரு பாகம் கொடுக்கப்பட்டார்களே அவர்களை நீர் பார்க்கவில்லையா? (நேர்வழியைக் கைவிட்டு) வழி கேட்டை அவர்கள் விலைக்கு வாங்கிக் கொண்டு நீங்கள் (யாவரும்) வழி தவறுவதை அவர்கள் விரும்புகின்றனர்.

முனாஃபிக்குகளது தலைவரான அப்துல்லாஹிப்னு உபய்யி என்பவரிடமும், அவரைச் சேர்ந்தவர்களிடமும் யூதர்களிலுள்ள இரண்டு பாதிரிமார்கள் வந்து இஸ்லாம் மார்க்கத்தை விட்டு அவர்கள் விலகி இருப்பதைக் குறித்து அவர்களுக்கு உற்சாக மூட்டுவது வழக்கம். இப்பாதிரிமார்களைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டது.

வேதத்தைக் கொடுக்கப்பட்டவர்களில் ஒரு சாரார் தாங்களும் வழிதவறி இருப்பதுடன் மற்றவர்களையும் வழி தவறச் செய்கிறார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும்.

والله اعلم باعدائكم وكفى بالله وليا وكفى

بالله نصيرا ۝

45. மேலும், அல்லாஹ் உங்களது பகைவர்களை மிக அறிந்தவன். இன்னும் அல்லாஹ் (பகைவர்களை விட்டுக்) காப்பவனாக இருக்கவும் போதுமானவன். இன்னும் அல்லாஹ் உதவி செய்பவனாக இருக்கவும் போதுமானவன்.

والله اعلم باعدائكم **மேலும் அல்லாஹ் உங்கள் பகைவர் களை மிக அறிந்தவன்** என்பதற்கு உங்களுக்குப் பகைவர்கள் யார் என்பதை உங்களைப் பார்க்கினும் அதிகமாக அல்லாஹ் அறிந்திருக் கிறான் என்பது அல்லது உங்கள் பகைவர்களது நிலையையும், அவர்கள் செய்யும் காரியத்தின் பயனையும் அல்லாஹ் மிக அறிந்தவன் என்பது கருத்து.

وكفى بالله وليا **மேலும் அல்லாஹ் உதவி செய்பவனாக இருப்பது போதும்** என்பதற்கு உங்களது சகல காரியங்களுக்கும், உங்களுக்கு நன்மையான காரியங்களுக்கும் அல்லாஹ் போதியவன் அல்லது உங்கள் பால் அல்லாஹ் அபிமான முள்ளவனாக இருப்பது போதும் என்பது கருத்து.

இந்த ஆயத்து முஸ்லிம்களுக்கு உதவி புரிவதாக வாக்களிப்பதாகவும், பகைவர்களைத் தண்டிப்பதாக அவர்களுக்கு எச்சரிக்கை செய்வதாகவும் இருக்கிறது.

من الذين هادوا يحرفون الكلم عن مواضعه
ويقولون سمعنا وعصينا واسمع غير مسمع وراعنا ليا
بالسنتهم وطعنا في الدين ولو انهم قالوا سمعنا
واطعنا واسمع وانظرنا لكان خيرا لهم واقوم

وَلَكِن لَّعَنَهُمُ اللَّهُ بِكُفْرِهِمْ فَلَا يُؤْمِنُونَ إِلَّا قَلِيلًا

46. யூதராகி விட்டார்களே அவர்களிலிருந்து (சிலர்) வார்த்தைகளை அதற்குரிய இடங்களை விட்டு மாற்றுகின்றனர்; இன்னும் (உமது சொற்களை) நாங்கள் கேட்டுக் கொண்டோம் இன்னும் (உமது கட்டளைக்கு) "நாங்கள் மாறு செய்தோம்" என்றும் (நீர் கூறுவது) கேட்பவராக இல்லாத நிலையில் (எங்கள் சொற்களைக்) கேட்பீராக என்றும், தங்களது நாவுகளை வளைத்தும், மார்க்கத்தில் குறையை உண்டாக்கவும் "ராஇனா" என்றும் சொல்கிறார்கள். மேலும், நிச்சயமாக அவர்கள் (ஏதேனும் ஒரு ஏவல் விலக்கலையேனும் செவியேற்கும் போது) "நாங்கள் கேட்டுக் கொண்டோம்; இன்னும் நாங்கள் கட்டுப்பட்டோம் என்றும் (நாங்கள் கூறுவதை) நீர் கேளும், இன்னும் எங்களை நீர் கவனிப்பீராக என்றும் அவர்கள் கூறி இருந்தால் அவர்களுக்கு நல்லதாக அது இருந்திருக்கும். இன்னும் மிக ஒழுங்காகவுமிருக்கும். என்றாலும், அவர்களுடைய நிராகரிப்பின் காரணமாக அவர்களை அல்லாஹ் (தனது கருணையை விட்டுத்) தூரமாக்கி விட்டான். (அவர்களில்) சிலரைத் தவிர (மற்றவர்கள்) உறுதி கொள்ள மாட்டார்கள்.

அத்தஹ்ரீபு என்பது இரண்டு வகைப்படும். ஒரு வாக்கியத்திற்குள்ள இயற்பொருளைக் கூறாமல் அதற்கு வேறு விதமான பொருள் கூறுவது ஒருவகை. நம்முடைய இக்காலத்திலுள்ள அஹ்ல பிதுஅத்துகள் தங்கள் நோக்கத்திற்கு மாறாகவுள்ள குர்ஆன் ஹதீஸ் முதலியவற்றிற்கு இம்மாதிரியான தவறான பொருள் கூறுகின்றனர். யூதர் முதலிய முற்காலத்து வேதக்காரர்கள் தங்கள் வேத வசனங்களுக்கு இம்மாதிரியான விளக்கங் கூறினர். ஒரு வார்த்தையை எடுத்து விட்டு அதற்குப் பதிலாக வேறு வார்த்தையை வைத்து விடுதல் மற்றொரு வகை. யூதர்கள் தவ்ராத் வேதத்தில் இம்மாதிரி மாறுதல் செய்திருக்கிறார்கள். தவ்ராத் வேதத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துச் சொல்லப்பட்ட லட்சணங்களில் "அவர் நெட்டையுமில்லை, குட்டையுமில்லை, நிதானமானவர்" என்றுங் கூறப்பட்டிருந்தது. அதனை அவர்கள் நீக்கிவிட்டு "அவர் நெட்டையர்" என்று எழுதி வைத்து விட்டனர். இதுபோல இன்னும் அநேக இடங்களில் இம்மாதிரி மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள். ஆகவே, يُحَرِّفُونَ الْكَلِمَ عَن مَّوَاضِعِهِ **வார்த்தைகளை அதற்குரிய இடங்களை விட்டு மாற்றுகின்றனர்** என்ற வாக்கியம் இவ்விருவகை மாற்றங்களையும் குறிக்கிறது.

தங்கள் நோக்கத்திற்கு மாறான கட்டளைகள் திருக்குர்ஆனில் வரும்போதெல்லாம் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ள விருப்பமில்லாமல் سَمِعْنَا وَعَصَيْنَا **"நாங்கள் செவியேற்றுக் கொண்டோம் ஆனால் (அதற்கு) நாங்கள் மாறு செய்தோம்"** என்று கூறினார்கள். இப்படிக் கூறியதும் இரண்டு வகைப்படும். அதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னிலையிலும் கூறினர், வெளியிடங்களிலும் கூறினர், வாய் மொழியாகவும் கூறினர், தங்கள் நடத்தையின் மூலமாகவும் கூறினர்.

غَيْرَ مُسْمَعٍ **கைரமுஸ்மஇன்** அதாவது கேட்பவராக இல்லாமல் என்ற வார்த்தைகள் இரண்டு அர்த்தமுள்ளவைகள். அதாவது "வெறுப்புடன் கேட்பவராக இல்லாத நிலையில்" என்றும் ஒரு பொருளுண்டு. "செவிடராகவோ அல்லது இறந்து போய் விடுவதாலோ கேட்பவராக இல்லாமல்" என்றும் ஒரு பொருளுண்டு. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் பேச்சுக்களை வெறுப்புடன் கேட்பவராக இல்லாத நிலையில் செவி சாய்த்துக் கேட்க வேண்டும் என்று யூதர்கள் விரும்புகிறார்கள் என்று கூறுவதாக வெளிக்குப் பாவனை செய்து கொண்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செவிடராகி விடவேண்டும் அல்லது இறந்துவிட வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொள்வர். ஆகவே, இவ்விரண்டாவது வகைக் கருத்தை அவர்கள் மனதில் நினைத்துக் கொண்டிருப்பதை இறைவன் இந்த ஆயத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறான். رَاعِنَا **ராஇனா** என்பதும் இரண்டு அர்த்தம் உள்ளது. இந்தப் பதத்திற்கு அறபிப் பாஷையில் "எங்களைக் கவனியும்" என்பது ஒருபொருள். யூதர்களது பாஷையில்

இப்பதத்திற்கு "மடையரே" என்பது பொருள். முஸ்லிம்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து "ராஇனா" என்று கூறுவர். இவர்களுக்கு யூதர்களது பாஷையில் இதற்குள்ள பொருள் தெரியாது. ஆகையால் இவர்கள் கூறுவதையே யூதர்களும் கூறுகின்றனர் என முஸ்லிம்கள் நினைத்துக் கொள்ளட்டும் என்ற கருத்துடன் யூதர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "ராஇனா" என்று கூறுவர். ஆனால், தங்கள் பாஷையில் இப்பதத்திற்குள்ள "மடையரே" என்ற பொருளைத்தான் இவர்கள் நினைத்துக் கொள்வது வழக்கம். ஆகவே, இவர்களது தீய எண்ணங்கள் இந்த ஆயத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْكِتَٰبَ ءَامِنُوا۟ بِمَا نَزَّلْنَا
مُصَدِّقًا لِّمَا مَعَكُم مِّن قَبْلِ أَن نَّطْمِسَ
وُجُوهًا فَنَرُدَّهَا عَلَىٰٓ أَدْبَارِهَآ أَوْ نَلْعَنَهُمْ كَمَا
لَعَنَّآ أَصْحَٰبَ ٱلسَّبْتِ ۚ وَكَانَ أَمْرُ ٱللَّهِ مَفْعُولًا ﴿٤٧﴾

47. வேதத்தைக் கொடுக்கப்பட்டவர்களே! (உங்கள்) முகங்களை நாம் மாற்றி, அவற்றை அவற்றின் பின்புறங்களில் நாம் திருப்பி விடுவதற்கு முன்னதாக அல்லது சனிக்கிழமைக்காரர்களை நாம் சபித்தது போல அவர்களை நாம் சபிப்பதற்கு முன் உங்களிடமுள்ள (வேதத்)தை உண்மைப்படுத்துகின்ற - நாம் இறக்கிய (வேதத்)தை ஈமான் கொள்ளுங்கள். மேலும், அல்லாஹ்வின் கட்டளை (யாகிய வேதனை) நிகழுவதாக இருந்தது.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْكِتَٰبَ **வேதத்தைக் கொடுக்கப்பட்டவர்களே** என்ற இவ்வாக்கியத்திற் சொல்லப்பட்டுள்ள கட்டளை வேதத்தை அடைந்துள்ள யாவருக்கும் பொதுவாக இருப்பினும் முக்கியமாக யூதர்கள் தாம் இந்தக் கட்டளையில் முன்னோக்கப்பட்டவர்கள். ஆதலின், **அல்கித்தாப்** அதாவது வேதம் என்பது இந்த இடத்தில் தவ்ராத் வேதத்தைக் குறிக்கிறது.

أَن نَّطْمِسَ وُجُوهًا فَنَرُدَّهَا عَلَىٰٓ أَدْبَارِهَآ **முகங்களை நாம் மாற்றி, அவற்றை அவற்றின் பின்புறங்களின் திருப்பி விடுவதற்கு** என்ற வசனமானது முகத்திலுள்ள மூக்கு, கண், வாய் ஆகியவற்றை எல்லாம் ஒன்றுபோல் மழுக்கிப் பிடறியைபோல் ஆக்கிவிடுதல் அல்லது முகமிருந்த விடத்தில் பிடறியையும், பிடறி இருந்த இடத்தில் முகத்தையும் ஏற்படுத்தி விடல் என்பது கருத்து.

أَصْحَٰبَ ٱلسَّبْتِ **அஸ்ஹாபஸ்ஸப்த்** அதாவது சனிக்கிழமைக் காரர்கள் என்பது ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் யூதர்களிலுள்ள ஒரு கூட்டத்தினர் சனிக்கிழமையாகிய ஓய்வு நாளில் அல்லாஹு தஆலாவின் கட்டளையை மீறி மீன்பிடித்துக் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் மாறறப்பட்டதைக் குறிக்கிறது. இதன் முழு விபரம் சூரத்துல் பக்கராவின் 65வது ஆயத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த ஆயத்து அருளப்பட்ட பின் யூதர்களில் சிலர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஈமான் கொண்டு இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தனர். அவ்வாறு ஒருவரும் ஈமான் கொள்ளாதிருந்தால் அல்லாஹு தஆலா சொன்னபடி உருவம் மாற்றப்படும் என்றும், அல்லது கியாமத்து நாள் வருவதற்கு முன் யூதர்கள் இந்த ஆயத்தில் சொல்லப்பட்டபடி செய்யப்படுவார்கள் என்றும் கித்தாபுகளில் கூறப்பட்டிருக்கிறது.

ஃபாயிதா:- உருவத்தை மாற்றுவது இந்த உம்மத்திலும் நடந்திருக்கிறது என்று அல்கமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். அதன் விபரம் வருமாறு.

"ஒரு பெரும் காபிலாவுடன் அதாவது தாவளக்காரருடன் நாங்கள் சென்றோம். அப்பொழுது எங்களுக்கு ஒரு தலைவர் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து ஒருவரை எங்கள் காபிலாவிற்குத் தலைவராக ஏற்படுத்தி அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கொண்டிருந்தோம். இப்படி இருக்கும் போது ஒரு நாளிரவு அந்த மனிதர் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு, ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு ஆகியவர் களைத் திட்டிக் கொண்டிருந்தார். அவரிடம் நாங்கள் சென்று 'நீர் ஏன்

அவ்விருவரையும் திட்டுகிறீர்' என்று விசாரித்தோம். அதற்கவர் ஒரு பதிலும் சொல்லவில்லை. மறுநாள் விடிந்ததும் வாகனங்களைப் பயணத்திற்குத் தக்கவாறு தயார் செய்து கொண்டு அவருடைய உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அவரிடமிருந்து உத்தரவு வரவில்லை. ஆதலின் அவரது நிலை எப்படியாயிற்று என்பதை அறிவதற்காக அவரிடம் சென்ற போது அவர் சம்மணம் கட்டி இருந்தார். அவரது இரண்டு கால்களும் துணியினால் மூடி மறைக்கப்பட்டிருந்தன. நாங்கள் அத்துணியை நீக்கிப் பார்த்த போது அவருடைய இரண்டு கால்களும் பன்றியின் கால்கள் போலிருந்தன. ஆகவே, அவரது வாகனத்தை நாங்கள் தயார் செய்து அதில் அவரைத் தூக்கி உட்கார வைத்தோம். அவர் வாகனத்திலிருந்து குதித்து பன்றியைப் போல் மூன்று முறை சப்தமிட்டுப் பன்றிகளுக்கிடையில் சேர்ந்து பன்றியாகி விட்டார். அப்புறம் அவரை எங்களில் ஒருவரும் அறிய மாட்டார்கள்" என்று **ரவ்லத்துல் உலமா** என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- ஹதீஸ்களை ரிவாயத்துச் செய்யும் ராவிகளில் ஒருவரது தலை கழுதைத் தலையாக மாறியதைப் பற்றி ஒரு ரிவாயத்து கூறப்பட்டிருக்கிறது. ஸஹீஹான ஒரு ஹதீஸில் சொல்லப்பட்ட விஷயத்தை அவர் நிராகரித்துக் கொண்டிருந்தார். அதாவது, "இமாம் ஜமாஅத்தாகத் தொழும் போது இமாமுக்கு முதலில் முக்ததி தலையை உயர்த்தினால் அல்லது சுஜூதில் தலையை வைத்தால் அவரது தலை கழுதைத் தலையாக மாறி விடுவதை அவர் அஞ்சாமல் இருப்பது எப்படி?" என்பது அந்த ஹதீஸின் கருத்து. முக்ததீயுடைய தலை கழுதைத் தலையாக மாறிவிடும் என்பதை அந்த ராவி நிராகரித்துக் கொண்டிருந்தார். ஆகவே, அவரது தலை கழுதைத் தலையாக மாறி விட்டது.

إِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ أَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ
ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ ۚ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدِ افْتَرٰٓى
إِثْمًا عَظِيْمًا ۝

48. நிச்சயமாக அல்லாஹ்: அவனுக்கு இணை வைக்கப்படுவதை மன்னிக்க மாட்டான். இன்னும், அவன் நாடியவருக்கு அதனைத்தவிரவுள்ளதை அவன் மன்னிப்பான். மேலும், எவர் அல்லாஹ்விற்கு இணை வைக்கிறாரோ (மிகப்) பெரிய பாவத்தை நிச்சயமாக அவர் உண்டு பண்ணி விட்டார்.

இஸ்லாமிய ஷரீஅத்தின் நோக்கம் குஃப்ருடைய வாசல்கள் அனைத்தையும் அடைத்து விடுவதாக இருப்பதால் ஈமான் இல்லாதவர்களுக்கும் பாவமன்னிப்புச் செய்வதென்றிருந்தால் அது குஃப்ருடைய வாசலைத் திறந்து விடும். தவிரவும், குஃப்ரு, பாவங்கள் ஆகியவற்றால் ஏற்படுகிற அகவிருள்களை மறைப்பது ஈமான் என்னும் பிரகாசமாக இருக்கிறது. ஆகவே, எவருக்கு ஈமானில்லையோ அவருக்குக் குஃப்ரு, பாவங்கள் ஆகியவை மன்னிக்கப் படமாட்டா. ஆகவே, ஷிர்க்கைத் தவிரவுள்ள இதர பாவங்களை அவைகள் சிறு பாவங்களாக இருந்தாலும் சரி, அல்லது பெரும்பாவங்களாக இருந்தாலும் சரி, எல்லாவற்றையும் தவ்பா இல்லாமல் மன்னித்து விடுவான். ஆனால், தவ்பா இல்லாமல் மன்னிப்பது எல்லாருக்கும் இல்லை. அவன் விரும்பியவருக்கு மட்டும்தான். நிற்க, முஷ்ரிக்குகள் அல்லாஹு தஆலாவிற்கு இணை வைப்பதால் அவர்களது ஏனைய பாவங்களையும் அவன் மன்னிக்க மாட்டான். அவர்கள் செய்துள்ள ஷிர்க்கு மன்னிக்கப்படாதது போல ஷிர்க்கைத் தவிரவுள்ள அவர்களது பாவங்களும் மன்னிக்கப்படுவதில்லை. இதுபோல மூமின்களை அல்லாஹு தஆலா ஷிர்க்கு வைப்பதை விட்டுக் காப்பாற்றியதன் மூலமாக ஷிர்க்குடைய வேதனையை விட்டு காப்பாற்றியதுபோல ஷிர்க்கல்லாத பாவங்களை அவன் மன்னிப்பதன் மூலமாக அவற்றின் வேதனையையும் விட்டு காப்பாற்றிக் கொண்டான் என்று **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** எழுதப்பட்டிருக்கிறது.

أَلَمْ تَرَ إِلَى الَّذِيْنَ يُزَكُّوْنَ أَنْفُسَهُمْ ۚ بَلِ اللّٰهُ يُزَكِّيْ
مَنْ يَّشَآءُ وَلَا يُظْلَمُوْنَ فَتِيْلًا ۝

49. (நபியே) தங்களைத் தாங்களே பரிசுத்தமானவர்கள் என்(று கூறிக்கொள்)பவர்களை நீர் பார்க்கவில்லையா? என்றாலும், அல்லாஹ் அவன் நாடியவரை (பாவத்திலிருந்து) பரிசுத்தம் ஆக்குவான். இன்னும், அணுவளவும் அவர்கள் அநீதி செய்யப்பட மாட்டார்கள்.

فَتِيْلًا ஃபத்தீலன், என்பது பேரீத்தங் கொட்டையிலுள்ள பிளவிற்குள்ளிருக்கும் திரி போன்ற மெல்லிய தொலிக்குப் பெயர். என்றாலும் மிகவும் கொஞ்சமாக இருப்பதை அறிவிப்பதற்கு அறபியர் இந்தப் பதத்தை உபயோகிப்பது வழக்கம்.

யூதர்கள் தங்களைப் பற்றி "நாங்கள் அல்லாஹ்வின் மக்கள், அவனுக்குப் பிரியமானவர்கள்" என்றும் "நாங்கள் சிறு குழந்தை களைப் போலிருக்கிறோம், சிறு குழந்தைகள் செய்யும் காரியங்களுக்கு ஏதேனும் பாவமிருக்கிறதா?" என்றும் கூறிக் கொண்டு தாங்கள் பாவமற்றவர்கள் என்று தாவாச் செய்தனர். ஆனால், உண்மையில் அவர்கள் பாவச் செய்கைகளை விட்டு நீங்கி இருக்கவில்லை. அவர்கள் பெரும் பாவங்களையும், குஃப்ருகளையும் செய்து கொண்டு தங்களைப் பற்றி இவ்வாறு கூறுவது ஆச்சரிய முறையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆச்சரிய வினாவில் இறைவன் உண்மையாகவே ஆச்சரியப்படவுமில்லை. தனக்குத் தெரியாத விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் முறையில் வினவவுமில்லை. அவர்களது கூற்றுகளின் தன்மையைப் பொதுமக்கள் உணருவதற்காக இம்முறையிற் கூறி பாவத்தை விட்டுச் சுத்தமாக்கி வைப்பவன் இறைவன்தான் என்பதையும், அவன் விரும்பியவருக்குத்தான் அதனைச் செய்வான் என்பதையும் அறிவித்து, யூதர்களது இச்செய்கைக்குரிய தண்டனையில் அவர்கள் சிறிதும் அநீதி செய்யப்படாமல் குற்றத்திற்குத் தக்க தண்டனையை அடைவார்கள் என்பதையும் அறிவித்துள்ளான்.

انْظُرْ كَيْفَ يَفْتَرُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ ؕ وَكَفٰى
بِهٖۤ اِثْمًا مُّبِيْنًا ۝

50. அல்லாஹ்வின் மீது பொய்யை எவ்வாறு (யூதர்களாகிய) அவர்கள் இட்டுக் கட்டுகிறார்கள் என்பதை (நபியே) நீர் பாரும். இன்னும், இதுவே தெளிவான பாவமாக இருப்பது போதுமானது.

யூதர்கள் தங்களை அல்லாஹ்வின் மக்கள் என்றும், அவனிடத்தில் அவர்கள் பாவமற்றவர்கள் என்றும் கூறிக் கொண்டிருந்தது அல்லாஹுத்தஆலாவின் மீது தாங்களாகவே பொய்ச் செய்தியைக் கூறுவதாக இருக்கிறது. ஆகவே, எல்லாக் காஃபிர்களைப் பார்க்கினும் அதிகமான கொடும்பாவத்தை அவர்கள் செய்பவர்கள் என்பதற்கு அவர்கள் இப்படிக் கூறிக் கொண்டிருப்பது ஒன்றே போதுமானது என்பது இந்த ஆயத்தின் கருத்து.

"எவர் தன்னில் இல்லாத ஒன்று தன்னிலிருப்பதாக மனிதர்களுக்கு அழகாகக் காண்பிக்கிறாரோ அவர் அல்லாஹு தஆலாவின் பார்வையை விட்டு வீழ்ச்சியடைந்து விடுவார்" என்று ஸிர்ரிய்யி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, மூமின்கள் தங்களைப் பற்றிப் புகழ்ந்து கொள்வதை அதாவது தற்புகழ்ச்சி செய்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்வது அவசியமாகும்.

اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ اُوْتُوْا نَصِيْبًا مِّنَ الْكِتٰبِ
يُؤْمِنُوْنَ بِالْجِبْتِ وَالطَّاغُوْتِ وَيَقُوْلُوْنَ لِلَّذِيْنَ
كَفَرُوْا هٰۤؤُلَاۤءِ اَهْدٰى مِنَ الَّذِيْنَ اٰمَنُوْا سَبِيْلًا ۝

51. (நபியே) வேதத்திலிருந்து பங்கைக் கொடுக்கப்பட்டார்களே அவர்களை நீர் பார்க்கவில்லையா? விக்கிரகத்தையும், பைசாசத்தையும் அவர்கள் உறுதி கொள்கிறார்கள். இன்னும், ஈமான் கொண்டார்களே அவர்களைப் பார்க்கினும் "இவர்கள் பாதையால் அதிகம் நேர்வழி பெற்றவர்கள்" என்று காஃபிரானார்களே அவர்களுக்குக் கூறுகிறார்கள்.

بِالْجِبْتِ **அல்ஜிப்து** என்பது ஒரு விக்கிரகத்தின் பெயர். ஆனால், அல்லாஹுதஆலாவைத் தவிர்த்து வணங்கப்படுகிற ஒவ்வொன்றிற்கும் இந்தப் பெயர் உபயோகிக்கப்படுகிறது.

الطَّاغُوْتِ **அத்தாகூத்** என்பது ஷைத்தான். ஆனால், வணங்கப்படுபவைகள் வணங்கப்படாதவைகள் ஆகிய தவறான ஒவ்வொன்றிற்கும் இப்பெயர் சொல்லப்படுகிறது.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விரோதமாக யுத்தம் செய்யும்படி குறைஷியரைத் தூண்டுவதற்காக ஹுய்யுப்னு அக்தபும், கஅபுப்னுல் அஷ்ரபும் வேறு எழுபது யூதர்களுடன் திருமக்கா சென்றனர். அப்பொழுது குறைஷியர் யூதர்களை நோக்கி "நீங்கள் எங்களைப் பார்க்கினும் முஹம்மதிடம் அதிகம் நெருங்கியவர்கள். உங்களது செய்தியை நாங்கள் நம்ப மாட்டோம். உங்களை நாங்கள் நம்ப வேண்டுமாயின் எங்களது தெய்வங்களுக்கு நீங்கள் சுஜூது செய்ய வேண்டும்" என்று கூறினர். மக்கத்துக் குறைஷியர் தங்களை நம்ப வேண்டும் என்பதற்காக அவர்கள் கூறியபடி இப்லீசுக்கு வழிப்பட்டு அவர்களது விக்கிரகங்களுக்கு சுஜூது செய்தனர். இதனைக் குறித்துத்தான் இந்த ஆயத்தில் يُؤْمِنُوْنَ بِالْجِبْتِ وَالطَّاغُوْتِ **"விக்கிரகத்தையும் பைசாசத்தையும் அவர்கள் உறுதி கொள்கின்றனர்"** என்று கூறப்பட்டிருக்கிறது. பிறகு குறைஷியரின் தலைவரான அபூசுஃப்யான், கஅபுப்னுல் அஷ்ரபை நோக்கி "நீர் வேதத்தை ஓதிய மனிதர், அறிந்தவர், நாங்கள் அறியாத உம்மிகள். எங்களில் எவர் பாதையில் மிகவும் நேரானவர்? நாங்களா அல்லது முஹம்மதா?" என்று வினவினார். அதற்கு கஅபுப்னுல் அஷ்ரப், அபூசுஃப்யானை நோக்கி "முஹம்மது சொல்வது என்ன?" என்று கேட்டார். அதற்கு அவர் "அல்லாஹுதஆலாவை மட்டும் வணங்க வேண்டும் என்று கூறுகிறார். இணைவைப்பதை அவர் விலக்குகிறார்" என்றார். பின்னர் உங்களது மார்க்கம் என்ன? என்று கஅபு கேட்டார். அதற்கு அபூசுஃப்யான் "நாங்கள் கஃபாவின் பாதுகாவலர்கள், ஹாஜிகளுக்கு தண்ணீர் வினியோகிக்கிறோம், விருந்தினரை உபசரிக்கிறோம், சிறையில் அகப்பட்டவரை

விடுவிக்கிறோம்" என்று தங்களது செய்கைகளில் பலவற்றைக் கூறினார். அப்பொழுது கஅபு "நீங்கள்தான் பாதையால் அதிகம் நேர்வழி பெற்றவர்கள்" என்று கூறினார். இதனைத்தான் அல்லாஹு தஆலா وَيَقُوْلُوْنَ لِلَّذِيْنَ كَفَرُوْا هٰٓؤُلَآءِ اَهْدٰى مِنَ الَّذِيْنَ اٰمَنُوْا سَبِيْلًا **"ஈமான் கொண்டார்களே அவர்களைப் பார்க்கினும் இவர்கள் பாதையால் அதிகம் நேர்வழி பெற்றவர்கள் என்று காஃபிரானார்களே அவர்களுக்குக் கூறுகிறார்கள்"** என்ற வசனத்திற் கூறப்பட்டிருக்கிறது.

اُولٰٓئِكَ الَّذِيْنَ لَعَنَهُمُ اللّٰهُ ؕ وَمَنْ يَّلْعَنِ اللّٰهُ فَلَنْ
تَجِدَ لَهٗ نَصِيْرًا ؕ

52. (அவ்வாறு சொன்ன) அவர்களைத்தான் அல்லாஹ் முனிந்திருக்கிறான். மேலும், எவரை அல்லாஹ் முனிகிறானோ அவருக்கு உதவி புரிபவரை நீர் காணவே மாட்டீர்.

"ஈமான் கொண்டவர்களைப் பார்க்கினும் (குறைஷியராகிய) அவர்கள் அதிகம் நேர்வழி பெற்றவர்கள்" என்று கூறியவர்கள் அல்லாஹு தஆலாவால் சபிக்கப்பட்டவர்கள். அல்லாஹு தஆலாவால் சபிக்கப்பட்டவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் உதவி புரிபவர்கள் இல்லை. முஸ்லிம்களுக்கு விரோதமாக யுத்தம் செய்யும்படி குறைஷியரைத் தூண்டிவிட அவர்கள் செய்த முயற்சியில் அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள் என்பது இந்த ஆயத்தில் சமிக்ஞையாகக் கூறப்பட்டிருக்கிறது.

اَمْ لَهُمْ نَصِيْبٌ مِّنَ الْمُلْكِ فَاِذًا لَّا يُؤْتُوْنَ
النَّاسَ نَقِيْرًا ؕ

53. அரசாங்கத்திலிருந்து அவர்களுக்கு (ஏதேனும்) பங்கிருக்கிறதா? (அப்படியிருந்தால்) அப்பொழுது, துரும்பத் தனையையும் மனிதர்களுக்குக் கொடுக்க மாட்டார்கள்.

அன்னக்கீர், என்பது ஈத்தங் கொட்டையின் முதுகின் மீதுள்ள புள்ளிக்குப் பெயர். மிகவும் அற்பமாகவும் குறைவாகவுமுள்ளதற்கு இந்தப் பதத்தை அறபியர் உபயோகிப்பர். ஆகவே, அறபியரின் இவ்வழக்கத்தையொட்டி இந்த ஆயத்தில் இப்பதத்திற்கு "துரும்பத்தனை" என்று பொருள் சொல்லப்பட்டிருக்கிறது.

பிற்காலத்தில் உலகை ஆளும் அரசுரிமை தங்களுக்குத்தான் கிடைக்கும் என்பதாக யூதர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர். அவர்களது இந்த எண்ணம் ஈடேறாது என்ற விபரம் أَمْ لَهُمْ نَصِيبٌ مِّنَ الْمُلْكِ **"அரசாங்கத்தில் இருந்து அவர்களுக்கு (ஏதேனும்) பங்கிருக்கிறதா?"** என்ற வசனத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

فَإِذًا لَّا يُؤْتُونَ النَّاسَ نَقِيرًا **அப்பொழுது மனிதர்களுக்கு துரும்பத்தனையையுங் கொடுக்க மாட்டார்கள்** என்ற வசனத்தில் யூதர்களுடைய கஞ்சத்தனம் விபரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அரசாங்க உரிமை பெற்று ஆளும் வர்க்கமாக அவர்கள் இருந்த போதிலும் மனிதர்களுக்குத் துரும்பத் தனையையுங் கூடக் கொடுக்க மாட்டார்களென்றால், அவர்கள் பிறருக்குப் பிரஜைகளாக இருக்கும் போது ஒன்றும் கொடுக்கவே மாட்டார்கள் என்பது இவ்வசனத்தின் கருத்து.

أَمْ يَحْسُدُونَ النَّاسَ عَلَىٰ مَا آتَاهُمُ اللَّهُ مِن فَضْلِهِ ۖ فَقَدْ آتَيْنَا آلَ إِبْرَاهِيمَ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَآتَيْنَاهُم مُّلْكًا عَظِيمًا ۝

54. மனிதர்களுக்கு, அவர்களுக்கு அல்லாஹ் தனது அருளால் கொடுத்திருப்பதைக் குறித்துப் பொறாமை கொள்கின்றனரா? ஆகவே, இப்ராஹீமுடைய குடும்பத்தாருக்கு வேதத்தையும், நுபுவ்வத்தையும் நிச்சயமாக நாம் கொடுத்தோம். இன்னும், அவர்களுக்கு (மிகப்) பெரிய அரசாங்கத்தைக் கொடுத்தோம்.

النَّاسَ **அன்னாஸ்** அதாவது மனிதர் என்பது இந்த ஆயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டது.

مَا آتَاهُمُ اللَّهُ **அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்தது** என்ற வசனம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நபித்துவமும் வேதமும் கிடைத்ததையும், நாளுக்கு நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் கௌரவமும், ஆதரவும் அதிகரித்துக் கொண்டிருப்பதையும் குறிக்கிறது.

آلَ إِبْرَاهِيمَ **ஆல இப்ராஹீம்,** அதாவது இப்ராஹீமுடைய குடும்பத்தார் என்றது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மூதாதையரையும், அவர்களது சிறிய தந்தைகளின் மக்களையும் குறிக்கிறது.

الْحِكْمَةَ **அல்ஹிக்மத்** என்பது நுபுவ்வத்து, அறிவு, விவேகம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

مُّلْكًا عَظِيمًا **முல்கன் அளீமன்,** அதாவது மிகப்பெரிய அரசாங்கம் என்றது ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சந்ததியினராகிய ஹளரத் யூசுஃப் அலைஹிஸ்ஸலாம், ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம், ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் ஆகிய நபிமார்களுக்கிருந்த அரசாங்கங் களையும், அதிகாரங்களையும் குறிக்கிறது என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நாளுக்கு நாள் செல்வாக்கு அதிகமாகிக் கொண்டிருப்பதைக் குறித்து யூதர்கள் பொறாமை கொண்டு "முஹம்மது நபியாக இருந்தால் இத்தனை பெண்களை திருமணம் செய்திருக்க மாட்டார்?" என்று கூறினர். அவர்களது இக்கூற்று இந்த ஆயத்தில் மறுக்கப் பட்டிருப்பதுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சந்ததியினர்தான்.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சந்ததியினரில் இதற்கு முன்னதாகவே நாம் வேதத்தையும், நுபுவ்வத்தையும், அரசாங்கத்தையும் அளித்திருக்கிறோம். அவ்வாறு இருக்க, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நுபுவ்வத்து வந்திருக்க முடியாது என்று யூதர்கள் கருதுவது தவறு என்று கூறப்பட்டிருக்கிறது. ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபியாக இருந்ததுடன் தொண்ணூற்றொன்பது மனைவியருக்குக் கணவனாக இருந்தார்கள். ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மனைவியரும் அடிமைப் பெண்களுமாக ஆயிரம் பேரிருந்தனர்.

فَمِنْهُمْ مَّنْ اٰمَنَ بِهٖ وَمِنْهُمْ مَّنْ صَدَّ عَنْهُ ؕ
وَكَفٰى بِجَهَنَّمَ سَعِيْرًا ۝

55. ஆகவே, (யூதர்களாகிய) அவர்களிலிருந்து அவரை உறுதி கொண்டவரும் இருக்கிறார்கள். இன்னும், அவர்களிலிருந்து அவரைப் புறக்கணித்தவரும் இருக்கிறார்கள். இன்னும், கொழுந்து விட்டெரியும் நெருப்பாக நரக மிருப்பது போதுமானது.

அறிந்துகொள்:- அல்லாஹு தஆலா இதற்கு முந்திய ஆயத்துகளில் யூதர்களின் அறியாமையைப் பற்றிக் கூறியுள்ளான். அதாவது, விக்கிரக ஆராதனை இறைவனை வணங்குவதைப் பார்க்கினுஞ் சிறந்ததென்று அவர்கள் நம்புகிற விபரம் இந்த சூரத்தின் 51 வது ஆயத்தின் பிற்பகுதியில் هٰٓؤُلَاۤءِ اَهْدٰى مِنَ الَّذِيْنَ اٰمَنُوْا سَبِيْلًا **"ஈமான் கொண்டார்களே அவர்களைப் பார்க்கினும் இவர்கள் பாதையால் நேர்வழி பெற்றவர்கள்"** என்று காஃபிர்களைக் குறித்து யூதர்கள் கூறியதாகக் கூறப்பட்டிருக்கிறது. பின்னர், அவர்கள் உலோபிகளாகவும் பொறாமைக் காரர்களாகவும் இருக்கிற விபரம் 53,54வது ஆயத்துகளிற் கூறப்பட்டிருக்கிறது. இவற்றிற்குக் காரணம் அவர்களிடமுள்ள அறியாமையேயாகும். எனவே, இவைகள் மிகவும் அற்பமானவைகளாகும். ஆதலின், மூமின்களுக்கு இவை இரண்டு மிருக்கக் கூடாது. இன்னும் அவர்கள்

தங்களுக்கு இறைவன் அளித்ததைக் கொண்டு திருப்தி யடைவதுடன், பேராசை கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

அல்முல்க் அதாவது அரசுரிமை என்பது மூன்று வகை. புறத்தில் மட்டுமுள்ள அரசுரிமை ஒருவகை. இதுதான் உலக அரசர்களுக்கிருந்து வருகிற அரசுரிமை. அகத்தில் மட்டுமுள்ள அரசுரிமை மற்றொரு வகை. இது உலமாக்களுக்கு இருந்து வருகிற ஆத்மார்த்தச் செல்வாக்கும் ஆதிக்கமுமாகும். அகத்திலும் புறத்திலுமுள்ள அரசுரிமைதான் நபிமார்களுக்கு இருந்து வரும் அரசுரிமை.

"யூதர்களில் அற்பத் தன்மையுள்ளவர்களிருப்பது போல ஈமானுள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, அற்பத் தன்மை உள்ளவர்களுக்கு இவ்வுலகிலேயே தண்டனை கிடைக்காவிடினும் மறுமையில் அவர்களுக்குத் தண்டனை இருப்பது போதுமானது" என்ற விபரம் இந்த ஆயத்திற் கூறப்பட்டிருக்கிறது.

اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِنَا سَوْفَ نُصْلِيْهِمْ نَارًا ؕ كُلَّمَا
نَضِجَتْ جُلُوْدُهُمْ بَدَّلْنٰهُمْ جُلُوْدًا غَيْرَهَا لِيَذُوْقُوا
الْعَذَابَ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَزِيْزًا حَكِيْمًا ۝

56. நிச்சயமாக நமது ஆயத்துகளை (நம்பாமல்) நிராகரித்து விட்டார்களே அவர்கள்: (கரிக்கும்படியான) நெருப்பில் அவர்களை நாம் அவசியம் புகச் செய்வோம். அவர்களுடைய தோல்கள் கரியும் போதெல்லாம் அவைகளல்லாதனவாகிய தோல்களை - வேதனையை அவர்கள் அனுபவிப்பதற்காக - அவர்களுக்கு நாம் மாற்றுவோம். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாக(வும்) விவேகமுள்ளவனாக(வும்) இருக்கிறான்.

اٰيٰتِنَا ஆயாத்தினா அதாவது நமது ஆயத்துகள் என்பதற்கு திருக்குர்ஆனும், இதர அற்புதச் செய்கைகளும் என்பது கருத்து.

بَدَّلْنٰهُمْ جُلُوْدًا غَيْرَهَا அவைகளல்லாதனவாகிய தோல்களை அவர்களுக்கு நாம் மாற்றுவோம் என்ற வசனத்திலிருந்து நரகவாதிகளது தோல்கள் கரிந்து போன பிறகு அவர்களுக்கு வேறு தோல்களை அல்லாஹுதஆலா மாற்றுகிறான் என்பது கருத்தல்ல. அவர்களது தோல்கள் நரக நெருப்பினால் கரிந்துபோன பிறகு அதே தோல்கள் வேறு விதமான உருவத்தில் அவர்களுக்கு இருந்துவரும். ஆனால், கரிந்து போவதற்கு முன்னிருந்த தோல்களும், கரிந்துபோன பின்னர் இருக்கிற தோல்களும் அந்தரங்கத்தில் ஒன்றாகவே இருந்தாலும் வெளித் தோற்றத்தில் வெவ்வேறாகக் காணப்படுவதால் "அவைகள் அல்லாதனவாகிய தோல்களை அவர்களுக்கு நாம் மாற்றுவோம்" என்று கூறப்பட்டது.

قَالَ الْحَسَنُ تَأْكُلَهُمُ النَّارُ فِيْ كُلِّ يَوْمٍ سَبْعِيْنَ مَرَّةً كُلَّمَا
اَكَلْتُهُمْ قِيْلَ لَهُمْ عُوْدُوْا فَيَعُوْدُوْنَ كَمَا كَانُوْا

ரிவாயத்து:- "ஒவ்வொரு நாளிலும் அவர்களை எழுபது முறை நெருப்புத்தின்னும். அவர்களை அந்நெருப்புத் தின்னுந்தோறெல்லாம் நீங்கள் மீண்டு விடுங்கள்" என்று கூறப்படும். "உடனே அவர்கள் முன்போல் மீண்டு விடுவார்கள்" என்று ஹஸன் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

رُوِيَ مَرْفُوْعًا اَنَّ جِلْدَ الْكَافِرِ اَرْبَعُوْنَ ذِرَاعًا وَضِرْسَهُ مِثْلَ
اُحُدٍ وَشَفَتَهُ الْعُلْيَا تَضْرِبَ سُرَّتَهُ وَبَيْنَ لَحْمِهِ وَجِلْدِهِ دِيْدَانٌ
كَحُمُرِ الْوَحْشِ تَرْكُضُ بَيْنَ جِلْدِهِ وَلَحْمِهِ وَحَيَّاتٌ كَأَعْنَاقِ
الْبُخْتِ وَعَقَارِبُ كَالْبِغَالِ

ரிவாயத்து:- காஃபிருடைய தோல் நாற்பது முழம் (கனமுள்ளதாக) இருக்கும். அவனுடைய சட்டிப்பல் அதாவது கடவாய்ப் பல் உஹது மலையைப் போலிருக்கும். அவனது மேலுதடு உச்சியிலும், அவனுடைய கீழுதடு தொப்புளுக்குக் கீழ் தொங்கிக்

கொண்டுமிருக்கும். அவனது தோலுக்கும் சதைக்கு மிடையில் காட்டுக் கழுதைப் பிரமாணமுள்ள புழுக்களும், காளைமாட்டத்தனை பருமனுள்ள பாம்புகளும், கோவேறு கழுதை போன்ற நட்டுவாக் காலிகளும் ஓடித் திரிந்து கொண்டிருக்கும்.

وَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ سَنُدْخِلُهُمْ جَنّٰتٍ تَجْرِىْ
مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَاۤ اَبَدًا ؕ لَهُمْ فِيْهَاۤ
اَزْوَاجٌ مُّطَهَّرَةٌ ؗ وَّنُدْخِلُهُمْ ظِلًّا ظَلِيْلًا ۝

57. இன்னும், ஈமான் கொண்டு நற்செயல்களைச் செய்தார்களே அவர்கள் (சுவர்க்கத்துச்) சோலைகளில் அவர்களை நாம் புகச் செய்வோம். அவற்றிற்குக் கீழ் அருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் எப்பொழுதும் நிரந்தரமானமானவர் களாக இருப்பார்கள். அவர்களுக்கு அவற்றில் பரிசுத்தமான ஜோடிகளுண்டு. இன்னும் அவர்களை நீடிய நிழலில் புகச் செய்வோம்.

"அல்லாஹு தஆலாவையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், திருக்குர்ஆனையும், எல்லா முஃஜிஸாக் களையும் ஈமான் கொண்டு, அல்லாஹு தஆலா கட்டளையிட்டுள்ள நற்செயல்களைச் செய்தவர்களை அவன் சுவர்க்கத்தில் புகச் செய்வான். அதில் அவர்கள் எந்நாளும் நிரந்தரமாக இருப்பார்கள். அதனை விட்டு அவர்கள் வெளியேற்றப்படவுமாட்டார்கள், இறக்கவும் மாட்டார்கள். இவ்வுலகத்திய பெண்களுக்கு இருக்கிற மாதவிடாய், பேற்றுதிரம், பொறாமை, துவேஷம் முதலியவைகள் இல்லாமல் பரிசுத்தமான மனைவியரும் அவர்களுக்கு உண்டு. தவிரவும் அந்தச் சுவர்க்கத்தில் சூரியனது வெயில் வராத அடர்ந்த நிழலுமிருக்கிறது. அதிலும் அவர்களைப் புகச் செய்வான்" என்பது இந்த ஆயத்தின் கருத்து.

சூரியனது பிரகாசம் இல்லாமல் வெறும் நிழலாக இருக்கக் கூடிய இடங்கள் இவ்வுலகிலும் இருக்கின்றன. அவற்றிலுள்ள

காற்றுகள் மனிதருக்குச் சுகந்தருவனவாக இல்லாமல் வியாதியை உண்டாக்குவனவாக இருக்கின்றன. ஆகவே, ظِلًّا ظَلِيْلًا நீடிய நிழல் என்று இந்த ஆயத்தில் கூறப்பட்டதற்கு சூரியனின் வெயில் வராத அடர்ந்த நிழல் என்பது கருத்தாக இருப்பின் சுவர்க்கவாதிகளுக்கு அது சுகந்தருவதாக இருக்க முடியாது என்று சிலர் சந்தேகங் கொள்ளக் கூடும். ஆனால், சுவர்க்கத்திலுள்ள நிழலிலிருக்கிற ஆகாயம் அங்கு உள்ளவர்களுக்கு நோயை உண்டாக்குவனவாக இல்லை. சுவர்க்கத்து நிழல் என்றதிலிருந்தே அது மனிதருக்குச் சுகந்தருவதென்பதிற் சந்தேகமில்லை. என்றாலும், அறபி நாட்டின் வெயில் மிகக் கடுமையாக இருப்பதால் அங்கு ஒரு சொற்பமான நிழலையும் அங்குள்ளவர்கள் மிகப் பெரும் அருட்கொடையாக மதிப்பர். மனிதருக்குச் சுகந்தரக்கூடியவைகளில் நிழல் மிகப் பிரதான மென்பது அறபியரின் அபிப்பிராம். ஆதலால், சுவர்க்கத்தில் சுகமிருக்கிறது என்பதை இந்தப் பதங்கள் இங்கு சமிக்ஞையாகக் கூறுகின்றன. எனவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

السُّلْطَانُ ظِلُّ اللهِ فِي الأَرْضِ

"அரசன் பூமியில் இறைவனின் நிழல்" என்று கூறி இருக்கிறார்கள். அரசன் யாவருக்கும் வேண்டியதைச் செய்து, ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறாக இருந்து தீங்கு வராமல் பாதுகாப்பதால் அவனுக்கு "பூமியில் அல்லாஹ்வின் நிழல்" என்று கூறப்பட்டது.

ஹதீஸ்:- சுவர்க்கவாசிகள் வாலிபர்களாக இருப்பார்கள். தலை, இரு புருவங்கள், கண்ணிமைகள் தவிர மற்ற இடங்களில் மயிர் இருக்க மாட்டாது. (அதாவது கம்முகட்டிலும், தொப்புளுக்குக் கீழிலும் அவர்களுக்கு மயிர் இருக்க மாட்டாது) ஹளரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களைப்போல் அறுபது முழ நீளமும், ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போல் முப்பத்தி மூன்று வயதுள்ளவர்களாகவும் இருப்பார்கள். நிறத்தில் வெண்மையாகவும், பச்சை உடையுள்ளவர்களாகவும் இருப்பார்கள். அவர்களில் ஒவ்வொருவருக்கும் அவருக்கு முன்னிலையில் உணவுப் பதார்த்த

மிருக்கும். பறவை அவரைப் பார்த்து "அல்லாஹ்வின் வலியே! நான் ஸல்ஸபீல் என்ற ஊற்றில் அருந்தி அர்ஷுக்குக் கீழ் சுவனத்தின் சோலைகளில் மேய்ந்து இன்னின்ன விதமான பழங்களைப் புசித்திருக்கிறேன். ஆதலின், என்னிலிருந்து நீர் புசிப்பாயாக" என்று கூறும். அவர் அதனை உணவாக எடுத்துக் கொள்வார். அப்பொழுது அதனுடைய ஒரு பக்கம் பொரித்ததாகவும், மற்றொரு பக்கம் சுட்டதாகவும் இருக்கும். அவ்விரண்டிலுமிருந்து அல்லாஹ் நாடிய அளவிற்கு அவர் புசிப்பார். அவர் மீது எழுபது ஆடைகளிருக்கும். ஆனால், அவற்றில் ஒன்றின் நிறம் மற்றொன்றின் நிறத்தைப் போலிருக்க மாட்டாது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அல்ஃபக்கீஹ் அபுல்லைதிஸ்ஸமர்கந்தீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இதனைக் குறித்து "ஒருவர் இந்தப் பாக்கியத்தை அடைய விரும்புவாராயின் அவர் ஐந்து காரியங்களை விடாமல் செய்ய வேண்டும். 1. சகல விதமான பாவங்களையும் விட்டுத் தன்னை விலக்கி இருக்க வேண்டும். 2. உலகில் சொற்பமானதைக் கொண்டு திருப்தியடைய வேண்டும். ஏனெனில், சுவர்க்கத்தின் கிரயம் உலகத்தைத் துறப்பதுதான். 3. வணக்கங்களைச் செய்வதில் அவர் பேராசை உள்ளவராக இருக்க வேண்டும். சகல விதமான வணக்கங்களிலும் சம்மந்தப்பட்டுவிட வேண்டும். இந்த வணக்கங்கள் இறைவனது பிழை பொறுக்குகைக்கும் சுவர்க்கத்தில் நுழைவதற்கும் காரணமாக இருக்கப் போதும். 4. ஸாலிஹீன்களாகிய பெரியோர்களையும், அஹ்ல கைகளாகிய நல்லோர்களையும் நேசித்து அவர்களுடன் கூடிக்கலந்து உறவாடி இருக்க வேண்டும். 5. அதிகமாக துஆ கேட்க வேண்டும். அல்லாஹு தஆலாவிடத்தில் தனக்குச் சுவர்க்கத்தைத் தந்தருள வேண்டுமென்றும், தனது முடிவு நல்லவிதமாக முற்றுப் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்" என்று கூறி இருக்கிறார்கள்.

إِنَّ اللَّهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمَانَاتِ إِلَىٰ أَهْلِهَا وَإِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ أَنْ تَحْكُمُوا بِالْعَدْلِ

إِنَّ اللَّهَ نِعِمَّا يَعِظُكُم بِهِ ۗ إِنَّ اللَّهَ كَانَ
سَمِيعًا بَصِيرًا ۝

58. அமானிதங்களை அவற்றிற்குரியவர்களிடம் நீங்கள் ஒப்புவிப்பதையும், மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்பு செய்தீர்களானால் நீதமாகவே நீங்கள் தீர்ப்புச் செய்வதையும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகிறான். நிச்சயமாக அல்லாஹ் எதைக் கொண்டு உங்களுக்கு அவன் உபதேசிக்கிறானோ அது நல்லது. நிச்சயமாக அல்லாஹ் (மிகவும் செவியேற்று) கேட்பவனாக(வும் மிகவும்) பார்ப்பவனாக(வும்) இருக்கிறான்.

இந்த ஆயத்து ஹளரத் உதுமானுப்னு தல்ஹத்தில் ஹஜபீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் சம்மந்தமாக அருளப்பட்டது. இவர் கஅபாவின் திறவுகோலை வைத்திருப்பவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை வென்று மக்கமா நகருக்குள் நுழைந்த போது அவர் கஅபாவின் தலைவாயலைப் பூட்டி அதன் முகட்டின் மீதேறிக் கொண்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஅபாவிற்குட் செல்வதற்காக அதன் திறவுகோலைத் தர வேண்டும் என்று கேட்டபோது அவர் "தாங்கள் அல்லாஹ்வின் தூதர்தான் என்று நான் அறிந்திருந்தால் சாவியைக் கொடுத்திருப்பேன்" என்று சொல்லி அதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கொடுக்க மறுத்து விட்டார். அப்பொழுது, ஹளரத் அலீ கார்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் அவரது கையைத் திருகிச் சாவியை எடுத்துக் கொண்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஅபாவைத் திறந்து அதனுட் சென்று இரண்டு ரக்கஅத்துத் தொழுதார்கள். பிறகு, அதிலிருந்து வெளியில் வந்த போது ஹளரத் அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அச்சாவியைத் தம்மிடம் கொடுக்க வேண்டும் என்றும், ஹாஜிகளுக்கு தண்ணீர் வினியோகஞ் செய்யும் பொறுப்பும், கஅபாவின் சாவியை வைத்திருக்கும் பொறுப்பும்

தம்மிடத்திலேயே இருக்க வேண்டும் என்றும் விரும்பினார்கள். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது. அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உதுமானுப்னு தல்ஹாவிடம் இந்தச் சாவியைத் திரும்பக் கொடுத்து அவரிடம் மன்னிப்புக் கேட்கும்படியும் ஹளரத் அலீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். அதற்கு உதுமானுப்னு தல்ஹா ஹளரத் அலீ ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களை நோக்கி "நீர் நிர்ப்பந்தம் செய்து, என்னை நோவினை செய்தீர்; பின்னர், என்னிடம் நீர் சாந்தமாக வந்தீரா?" என்று கூறினார். அதற்கவர் "உமது விஷயத்தில் அல்லாஹு தஆலா குர்ஆனை இறக்கி இருக்கிறான்" என்று கூறி இந்த ஆயத்தை ஓதிக் காண்பித்தார்கள். உடனே உதுமானுப்னு தல்ஹா ஷஹாதத்துக் கலிமா ஓதி இஸ்லாத்தைத் தழுவினார். அப்பொழுது ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "சாவி வைத்திருக்கும் பொறுப்பு எந்நாளும் உதுமானுப்னு தல்ஹாவின் சந்ததியிலிருந்து வர வேண்டும்" என்று கூறினார்கள். பின்னர், ஹளரத் உதுமானுப்னு தல்ஹா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் தமது புதல்வர் ஷைபாவிடம் சாவியைக் கொடுத்து விட்டு மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து விட்டார். அச்சாவி இன்றைய தினம் வரை அவருடைய சந்ததியிடமிருந்து வருகிறது. இந்த ஆயத்து அருளப்பட்ட சந்தர்ப்பம் எதுவாக இருந்தாலும் இதில் கூறப்பட்டுள்ள விதி எல்லோருக்கும் பொதுவானது என்று இமாம்கள் கூறி இருக்கிறார்கள்.

அல்அமானத்து என்பதற்கு பிறருக்கு நீ கடமைப் பட்டுள்ளதை அவருக்குச் செலுத்துதல் என்பது பொருள். இது மூன்று வகை.

முதலாவது அல்லாஹு தஆலாவிற்கு மனிதன் செய்யக் கடமைப் பட்டுள்ளவைகள். இவை அவன் ஏவிய காரியங்களைச் செய்வதும் அவன் விலக்கியவற்றைச் செய்யாமல் தவிர்த்துக் கொள்வதுமாகும். இவைகள் யாவையென வரையறுத்துக் கூறமுடியாது. இது கரையில்லாக் கடல். ஒலூ, ஜக்காத்து, தொழுகை,

ஜனாபத்து, நோன்பு முதலிய ஒவ்வொரு காரியத்திலும் அமானிதத்தை நிறைவேற்றுவது அவசியமாகும். உதாரணமாக நாவிற்கு அமானிதம் அதனை பொய், கோள், புறம், குஃப்ரு, பிதுஅத்து, தூஷணை முதலியவற்றில் உபயோகிக்காமல் இருத்தலேயாகும். கண்களது அமானிதம் ஹராமானவற்றைப் பார்க்க அவற்றை உபயோகிக்காமல் இருத்தலாகும். செவிப்புலனின் அமானிதம் வீணானவைகள், விலக்கப்பட்டவைகள், பொய், தூஷணை முதலியவற்றில் அவற்றை உபயோகிக்காமலிருத்தலாகும். இவ்விதமாக ஒவ்வொரு அவயவங்களிலும் அமானிதமிருந்து கொண்டிருக்கிறது என்று இப்னு மஸ்ஊது ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

இரண்டாவது வகை ஏனைய சிருஷ்டிப் பொருள்களுக்குச் செய்யக் கடமைப் பட்டுள்ளவைகள். பிறர் கொடுத்து வைத்தவைகளை அவர்களிடம் திரும்பக் கொடுத்தல் முதலியவைகள் இந்த வகையைச் சேர்ந்தவை. நிறுவை அளவை முதலியவற்றில் கூட்டுதல் குறைத்தல் முதலியவற்றைச் செய்யாதிருத்தல், பிறருடைய குறைகளை மறைத்தல், அரசர்கள் நீதி செலுத்துதல், உலமாக்கள் பொது மக்களிடம் அவர்களுக்குரிய மார்க்கக் கொள்கைகளையும், இம்மையிலும் மறுமையிலும் பயனளிக்கத்தக்க கிரியைகள் முதலியவற்றையும் உபதேசித்தல் முதலியவைகளாகும்.

மூன்றாவது வகை தனக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல். அதாவது தன்னுடைய மார்க்கத்திலும், உலக விவகாரங்களிலும் தனக்குப் பயன்படுவதைத் தவிர வேறு எதையும் செய்யாதிருத்தல், மறுமையில் தனக்குத் தீங்கு செய்யக் கூடியவைகளைச் செய்யாதிருத்தல் முதலியவைகளாகும். இதனைக் குறித்துத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

كُلُّكُمْ رَاعٍ وَكُلُّكُمْ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ

"உங்களில் ஒவ்வொருவரும் மேய்ப்பர். இன்னும் உங்களில் ஒவ்வொருவரும் அவருடைய பிரஜையைப் பற்றி வினவப்படுவார்" என்றும்,

قَالَ عَلَيْهِ السَّلَامُ لَا إِيمَانَ لِمَنْ لَا أَمَانَةَ لَهُ وَلَا دِينَ لِمَنْ لَا عَهْدَ لَهُ

"அமானிதம் இல்லாதவருக்கு ஈமான் இல்லை", "வாக்குறுதியை நிறைவேற்றாதவருக்கு மார்க்கம் இல்லை" என்றும் கூறி இருக்கிறார்கள். ஆகவே, மூமினான அடியார்கள் தன்னால் இயன்றவரை அமானிதங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதும், எல்லா காலத்திலும் சத்திய உபதேசங்களைக் கேட்பதும் அவசியமாகும். ஏனெனில், சத்திய உபதேசங்கள் மனிதருக்கு நிச்சயமாகப் பிரயோஜனந் தரத்தக்கவைகளேயாகும்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُولِي الْأَمْرِ مِنْكُمْ ۖ فَإِنْ تَنَازَعْتُمْ فِي شَيْءٍ فَرُدُّوهُ إِلَى اللَّهِ وَالرَّسُولِ إِنْ كُنْتُمْ تُؤْمِنُونَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ ۚ ذَٰلِكَ خَيْرٌ وَأَحْسَنُ تَأْوِيلًا ۝

59. ஈமான் கொண்டவர்களே, அல்லாஹ்விற்கு கீழ்ப்படியுங்கள். இன்னும் (அவனுடைய) இந்த ரசூலுக்கும், உங்களில் உள்ள அதிகாரம் உள்ளவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள். ஆகவே, அல்லாஹ்வையும், கடைசி நாளையும் (உண்மையாகவே) உறுதி கொண்டவர்களாக நீங்களிருப்பின், ஒரு காரியத்தில் நீங்கள் பிணங்கிக் கொண்டீர்களானால் அதனை அல்லாஹ்விடத்திலும் ரசூலிடத்திலும் திருப்பி விடுங்கள். இது நன்மையும், முடிவால் அழகானதாகவும் இருக்கிறது.

திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சுன்னத்துகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதும், முஸ்லிம் அரசர்கள் மார்க்க விஷயத்தில்

மாறாகக் கட்டளை யிடாமலிருக்கும் வரை அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதும், இஸ்லாமிய ஷரீஅத்து சம்மந்தமான காரியங்களில் நீங்கள் உலுல் அம்ருகளான அதிகாரம் உள்ளவர்களிடத்தில் பிணங்கிக் கொண்டால் அதனை குர்ஆன், சுன்னத்து ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளவற்றுடன் சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதும் இந்த ஆயத்தின் கருத்து. மேலும், அரசர்களுக்குக் கீழ்ப்படிவது கடமை. ஆனால், அவ்வரசர்கள் சத்தியத்திற்கு நேராக இருக்க வேண்டும். அதற்கு மாறாக அவர்கள் இருந்தால் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்பது இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

قَالَ عَلَيْهِ السَّلَامُ لَا طَاعَةَ لِمَخْلُوْقٍ فِيْ مَعْصِيَةِ الْخَالِقِ

ஹதீஸ்:- "சிருஷ்டிக் கர்த்தாவிற்கு மாறு செய்யும் விஷயத்தில் சிருஷ்டிப் பொருள்களில் எதற்கும் கீழ்ப்படிய வேண்டியதில்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

أَلَمْ تَرَ إِلَى الَّذِيْنَ يَزْعُمُوْنَ أَنَّهُمْ آمَنُوْا بِمَا
أُنْزِلَ إِلَيْكَ وَمَا أُنْزِلَ مِنْ قَبْلِكَ يُرِيْدُوْنَ أَنْ
يَّتَحَاكَمُوْا إِلَى الطَّاغُوْتِ وَقَدْ أُمِرُوْا أَنْ يَّكْفُرُوْا بِهٖ ؕ
وَيُرِيْدُ الشَّيْطٰنُ أَنْ يُّضِلَّهُمْ ضَلٰلًا بَعِيْدًا ۝

60. (நபியே) உமக்கு இறக்கப்பட்டதையும், உமக்கு முன்னர் இறக்கப்பட்டதையும் நிச்சயமாக அவர்கள் ஈமான் கொண்டிருக் கிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களே அவர்களை நீர் பார்க்கவில்லையா? தாகூத்திடம் - அதற்கு மாறு செய்ய வேண்டும் என்று அவர்கள் ஏவப்பட்டிருக்கையில் - அவர்கள் தீர்ப்புத் தேட

வேண்டுமென்று விரும்புகிறார்கள். மேலும், ஷைத்தான் அவர்களை (மிகவும்) தூரமான வழிகேட்டில் வழிகெடுக்க வேண்டும் என்று நாடுகிறான்.

ரிவாயத்து:- ஒரு முனாஃபிக்கு (அதாவது புறத்தில் தன்னை முஸ்லிம் என்று சொல்லிக் கொண்டு அந்தரங்கத்தில் ஈமான் கொள்ளாமல் இருக்கிற ஒருவன்) ஒரு யூதருடன் சண்டை போட்டுக் கொண்டான். அந்த யூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பஞ்சாயத்துக்குச் செல்ல வேண்டும் என்று கூறினான். மேலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவருக்கும் பாரபட்சமின்றி நியாயம் வழங்குவார்கள் என்பதும், கஅபுப்னுல் அஷ்ரப் என்ற யூதர் லஞ்சம் வாங்கிக் கொண்டு பாரபட்சமாக தீர்ப்புச் செய்வார் என்றும் இருவரும் அறிந்திருந்தனர். தவிரவும், யூதரின் கட்சியில் நியாயமிருந்தது. முனாஃபிக்கின் கட்சியில் நியாய மிருக்கவில்லை. ஆதலின், அந்த யூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம்தான் பஞ்சாயத்திற்குச் செல்ல வேண்டுமென்று கண்டிப்பாய்க் கூறியதால் இருவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் பஞ்சாயத்திற்கு வந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்த பஞ்சாயத்து யூதருக்குச் சாதகமாகவும், முனாஃபிக்குக்குப் பாதகமாகவும் இருந்தது. ஆதலின், அந்த முனாஃபிக்கு அதனை அங்கீகரிக்காமல் ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களிடம் பஞ்சாயத்திற்குச் செல்லலாம் என்று கூறினான். இருவரும் ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களிடம் பஞ்சாயத்திற்குச் சென்று தங்கள் வழக்குகளைக் கூறினர். ஆயினும், அந்த யூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பஞ்சாயத்திற்குச் சென்றதையும், அவர்களது தீர்ப்பை அங்கீகரிக்க முனாஃபிக்கு மறுத்து வந்ததையும் கூறினார். உடனே, ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அந்த முனாஃபிக்கை நோக்கி "உண்மைதானா?" வென்று விசாரித்தார்கள். அதற்கு அவன் "ஆம்" என்று கூறினான். உடனே, ஹளரத் உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "இங்கேயே இருங்கள். இதோ வருகிறேன்"

என்று கூறி வீட்டிற்குட் சென்று தமது வாளாயுதத்தை எடுத்து வந்து முனாஃபிக்கை வெட்டி அல்லாஹ்வினுடைய தீர்ப்பையும் ரசூலுடைய தீர்ப்பையும் எற்றுக் கொள்ளாதவர்களுக்கு இவ்விதமாகத்தான் தீர்ப்பளிப்பேன்'' என்று கூறினார்கள். அந்த முனாஃபிக்கு மாண்டான். உடனே, ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறங்கி "உமர் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தார்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறினார்கள். அன்று முதல் ஹளரத் உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்கு ஃபாரூக் என்ற பெயர் வந்தது.

தாகூத் என்பது ஒரு விக்கிரகத்திற்குப் பெயராக இருந்தாலும் இந்த ஆயத்தில் கஅபுப்னுல் அஷ்ரபைக் குறித்துச் சொல்லப் பட்டிருக்கிறது.

وَإِذَا قِيلَ لَهُمْ تَعَالَوْا إِلَىٰ مَا أَنزَلَ اللَّهُ وَإِلَى
الرَّسُولِ رَأَيْتَ الْمُنَافِقِينَ يَصُدُّونَ عَنكَ صُدُودًا ۝

61. இன்னும், அல்லாஹ் இறக்கிய தளவிலும், ரசூலளவிலும் வாருங்கள் என்று அவர்களுக்குக் கூறப்பட்டால், முனாஃபிக்குகள் உம்மை அவர்கள் முற்றிலும் புறக்கணிக்கிறதை (நபியே) நீர் பார்ப்பீர்.

இந்த ஆயத்து இதற்கு முன்னுள்ள ஆயத்தில் சொல்லப் பட்டுள்ள விஷயத்தைச் சேர்ந்தது.

إِلَىٰ مَا أَنزَلَ اللَّهُ அல்லாஹ் இறக்கியதளவில் என்பதற்கு அல்லாஹு தஆலாவுடைய திருக்குர்ஆனில் கூறப்பட்ட கட்டளையின் பால் என்பதும் إِلَى الرَّسُولِ ரசூலளவில் என்பதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கட்டளையின்பால் என்பதும் கருத்து.

فَكَيْفَ إِذَا أَصَابَتْهُم مُّصِيبَةٌ بِمَا قَدَّمَتْ أَيْدِيهِمْ
ثُمَّ جَاءُوكَ يَحْلِفُونَ بِاللَّهِ إِنْ أَرَدْنَا إِلَّا إِحْسَانًا

وَتَوْفِيقًا ۝

62. ஆதலின், அவர்களது கைகள் முற்படுத்தி வைத்ததன் காரணமாக அவர்களுக்கு ஒரு (முஸீபத்து என்னும்) கஷ்டம் சம்பவிக்கும் போது எப்படி இருக்கும்? பின்னர், '(கட்சிக்காரர்களுக் கிடையில்) சமாதானத்தையும், நல்லுதவியையும் தவிர (வேறு எதையும்) நாங்கள் நாடவில்லை' என்று அல்லாஹ்வின் மீது சத்தியஞ் செய்பவர்களாக உம்மிடம் வருவார்கள்.

முனாஃபிக்குகளது நயவஞ்சகத்தன்மை வெளியாகுவதன் மூலமாக அவர்களுக்கு ஒரு கஷ்டம் ஏற்பட்டு விட்டால் அதனை நிவர்த்தி செய்து கொள்வதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து எங்களுக்கிடையில் பஞ்சாயத்துச் செய்வதற்கு வேறு மனிதரிடம் நாங்கள் சென்றதற்குக் காரணம் அந்த மனிதர் "எங்களுக்கிடையில் சமாதானப்படுத்தி வைப்பார் என்று எண்ணினோம். இதனையல்லாமல் தங்களது தீர்ப்பை அங்கீகரிக்கக் கூடாது என்பதற்காகவோ அல்லது தங்களிடம் விரோத மனப்பான்மை கொண்டதற்காகவோ இல்லை'' என்று அல்லாஹ்வின் மீது சத்தியஞ் செய்து முறையிடுவார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

أُولَٰئِكَ الَّذِينَ يَعْلَمُ اللَّهُ مَا فِي قُلُوبِهِمْ فَأَعْرِضْ عَنْهُمْ
وَعِظْهُمْ وَقُل لَّهُمْ فِي أَنفُسِهِمْ قَوْلًا بَلِيغًا ۝

63. அவர்கள்: அவர்களுடைய இருதயங்களிலுள்ளதை அல்லாஹ் அறிவானே அவர்கள். ஆகவே, அவர்களை (நபியே) நீர் புறக்கணியும். இன்னும் அவர்களுக்கு உபதேசஞ் செய்யும். இன்னும் அவர்களுடைய இதயங்களில் படும்படியான சொல்லை அவர்களுக்குக் கூறும்.

"முனாஃபிக்குகள் தங்களது நயவஞ்சகத் தன்மையை

மறைத்துக் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பொய்ச் சத்தியம் செய்வதையும் அல்லாஹுத் தஆலா அறிவான். ஆகையால்,நீங்கள் மறைத்துக் கொள்வது உங்களுக்குப் பிரயோஜனப்படாது. ஆதலின், உங்களை நீங்கள் சீர்திருத்திக் கொண்டு, உங்களது அகத்தைச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்யாவிடில் பகிரங்கமாக ஷிர்க்கு என்னும் இணை வைத்தலைச் செய்து கொண்டிருப்பவர்களுக்கு வந்த வேதனை உங்களுக்கும் வரும்” என்று அவர்களுக்குக் கண்டிப்பாகக் கூறிவிடும்படி இந்த ஆயத்தில் இறைவன் கூறி இருக்கிறான்.

وَمَا أَرْسَلْنَا مِن رَّسُولٍ إِلَّا لِيُطَاعَ بِإِذْنِ اللَّهِ
وَلَوْ أَنَّهُمْ إِذ ظَّلَمُوا أَنفُسَهُمْ جَاءُوكَ فَاسْتَغْفَرُوا اللَّهَ
وَاسْتَغْفَرَ لَهُمُ الرَّسُولُ لَوَجَدُوا اللَّهَ تَوَّابًا رَّحِيمًا ۝

64. இன்னும், அல்லாஹ்வின் கட்டளைப்படி அவருக்கு கீழ்ப்படியப்பட வேண்டியதற்காகவே தவிர எந்த ரசூலையும் நாம் அனுப்பவில்லை. இன்னும், அவர்கள் தங்களுக்குத் தாங்களே அநியாயஞ் செய்து கொண்ட நேரத்தில் உம்மிடம் அவர்கள் வந்தார்களாயின் அல்லாஹ்விடம் அவர்கள் பிழை பொறுக்கத் தேடி அவர்களுக்காக இந்த ரசூலும் பிழை பொறுக்கத் தேடினார்களாயின் அல்லாஹ்வை, தவ்பாவை அதிகமாக அங்கீகரிப்பவனாக (மூமின்கள் மீது அளவற்ற) கிருபையுள்ளவனாக அவர்கள் காண்பார்கள்.

முனாஃபிக்குகள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பஞ்சாயத்திற்கு வராமல் யூதர்களிடமே பஞ்சாயத்திற்குச் சென்றதால் தங்களுடைய இக்குற்றத்தை மன்னிக்கும்படி இறைவனிடம் அவர்கள் தவ்பாச் செய்ய வேண்டும். அவ்வாறு தவ்பாச் செய்யும் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களுக்காக இறைவனிடம் பிழை பொறுக்கும்படி பிரார்த்திக்க வேண்டும் என்று இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில், நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பஞ்சாயத்திற்கு வராமல் மற்றவர்களிடம் செல்வது அல்லாஹுதஆலாவின் கட்டளைக்கு மாறாக இருப்பதுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தீங்கு செய்வதாகவும், அவர்களது மனதை புண்படுத்துவதாகவும், இருக்கிறது. ஆதலால், அந்த முனாஃபிக்குகள் அல்லாஹு தஆலாவிடம் தவ்பாச் செய்வது மட்டும் போதாது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமும் மன்னிப்புக் கேட்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதனை அங்கீகரித்து, அவர்கள் செய்த பிழையைப் பொறுக்கும்படி இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும் என்றேற்பட்டது.

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ
بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا فِي أَنفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ
وَيُسَلِّمُوا تَسْلِيمًا ۝

65. (முனாஃபிக்குகள் கருதுவதுபோல் விஷயம்) அவ்வாறல்ல, (நபியே) உமது றப்பின் மீது சத்தியமாக, தங்களுக்குள் (உள்ள) சச்சரவில் உம்மை அவர்கள் நீதிபதியாக்கிப் பின்னர் நீர் தீர்ப்புச் செய்ததில் தங்களது இருதயங்களில் (எவ்வித) மனத்தாங்கலையுங் காணாமல், (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாதவரை அவர்கள் (உண்மையாக) ஈமான் கொள்ள மாட்டார்கள்.

அல்லாஹுதஆலாவுடைய கட்டளைகளை அல்லது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கட்டளைகளை நிராகரிப்பவர் இஸ்லாம் மார்க்கத்தை விட்டுப் புறம்பாகி விடுவார் என்பதற்கு இந்த ஆயத்து ஆதாரமாக இருக்கிறது. எனவேதான், ஜக்காத்துக் கொடுக்க மறுத்தவர்கள் முர்த்தத்துகளாகி அதாவது இஸ்லாம் மார்க்கத்திற்குப் புறம்பாகி விட்டார்கள் என்று ஸஹாபிகள் கூறி ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு

அவர்கள் கலீஃபாவாக இருந்த போது ஜிஹாது செய்தனர். ஃபர்லு ஐனாகவுள்ள காரியங்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றுவது ஃபர்லு ஐன்; ஃபர்லு கிஃபாயாகவுள்ள காரியங்களில் பின்பற்றுவது ஃபர்லு கிஃபாயா; சுன்னத்தான காரியங்களில் பின் பற்றுவது சுன்னத்து என்று ஏற்பட்டிருக்கிறது.

قَالَ عَلَيْهِ السَّلَامُ مَنْ ضَيَّعَ سُنَّتِى حُرِّمَتْ عَلَيْهِ شَفَاعَتِى

ஹதீஸ்:- என்னுடைய சுன்னத்தைப் பின்பற்றாமலிருந்து அதனை)த் தவற விட்டவருக்கு எனது ஷஃபாஅத்து ஹராமாகி விட்டது என்றும்,

مَنْ حَفِظَ سُنَّتِى اَكْرَمَهُ اللهُ تَعَالَى بِاَرْبَعِ خِصَالٍ اَلْمُحَبَّةُ
فِىْ قُلُوْبِ الْبَرَرَةِ وَالْهَيْبَةُ فِيْ قُلُوْبِ الْفَجَرَةِ وَالسَّعَةُ فِيْ
الرِّزْقِ وَالثِّقَةُ فِيْ الدِّيْنِ

என்னுடைய சுன்னத்தைப் பேணியவருக்கு அல்லாஹு தஆலா நான்கு காரியங்களைக் கொடுத்துக் கண்ணியப்படுத்துகிறான். 1. நல்லோர்கள் இருதயங்களில் அவர்பால் அன்புண்டாகும், 2. பாவிகளது இருதயங்களில் அவரைப் பற்றி பயமுண்டாகும் 3. தரித்திரமில்லாத வாழ்வு ஏற்படும், 4. மார்க்கத்தில் உறுதி நம்பிக்கையுண்டாகும் என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَلَوْ اَنَّا كَتَبْنَا عَلَيْهِمْ اَنِ اقْتُلُوْٓا اَنْفُسَكُمْ اَوِ اخْرُجُوْا
مِنْ دِيَارِكُمْ مَّا فَعَلُوْهُ اِلَّا قَلِيْلٌ مِّنْهُمْ ۭ وَلَوْ اَنَّهُمْ
فَعَلُوْا مَا يُوْعَظُوْنَ بِهٖ لَكَانَ خَيْرًا لَّهُمْ وَاَشَدَّ تَثْبِيْتًا ۝

66. இன்னும், "உங்களை நீங்கள் வெட்டிக் கொள்ளுங்கள், அல்லது உங்கள் இல்லங்களை விட்டு வெளியேறி விடுங்கள்" என்று அவர்களுக்கு நிச்சயமாக நாம் விதித்திருப்போமாயின்,

அவர்களிலிருந்து மிகச் சிலரைத் தவிர (மற்றவர்கள்) அதனைச் செய்ய மாட்டார்கள். இன்னும், எதைக் கொண்டு அவர்கள் உபதேசிக்கப்படுகிறார்களோ அதனை நிச்சயமாக அவர்கள் செய்வார்களாயின், அவர்களுக்கு நல்லதாகவும், (ஈமானை) உறுதிப்படுத்தி வைப்பதில் மிகப் பலமாகவும் இருந்திருக்கும்.

"பனூ இஸ்ராயீல்கள் காளைக்கன்றை வணங்கியதற்காக இறைவனிடம் தவ்பாச் செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்பியபோது தங்களை வெட்டிக் கொள்வதுதான் அவர்களுக்குரிய தவ்பா என்று அல்லாஹு தஆலா ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கட்டளையிட்டான். இக்கட்டளைக்கேற்ப அவர்கள் தங்களை வெட்டிக் கொண்டனர். இதன் விபரம் "ஸூரத்துல் பகரா" 54 வது ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பனூ இஸ்ராயீல்களுக்கு விதித்தது போல் முனாஃபிக்குகளாகிய இவர்களுக்கும் இவர்களது குற்றத்திற்குத் தவ்பாவாக இதனை ஏற்படுத்தி இருந்தால் அல்லது வீட்டை விட்டு வெளியேறி விடவேண்டுமென்று கட்டளையிட்டிருந்தால் இவர்களில் மிகச் சிலர்தான் அவ்வாறு செய்வர். மற்றவர்கள் அதனைச் செய்ய மாட்டார்கள். மேலும், முனாஃபிக்குகளாகிய அவர்கள் தங்களுக்கு ஏவப்படும் ஏவல்களைக் கடைப்பிடித்தும், விலக்கல் களின்படி விலகியும் நடப்பார்களாயின் அது அவர்களுக்கு மிக நன்மையாக இருந்திருக்கும். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யாமல் தங்களது நலனை இழந்து விட்டனர்" என்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَاِذًا لَّاٰتَيْنٰهُمْ مِّنْ لَّدُنَّآ اَجْرًا عَظِيْمًا ۝

67. இன்னும் (ஈமானின் மீது அவர்கள் உறுதியாக இருந்தால்) அப்பொழுது அவர்களுக்கு நம்மிடத்திலிருந்து மிகப்பெரிய (நற்) கூலியை நாம் அளித்திருப்போம்.

இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விபரமும் இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்ட விபரத்துடன் சேர்ந்தது.

وَلَهَدَيْنٰهُمْ صِرَاطًا مُّسْتَقِيْمًا ۝

68. இன்னும், அவர்களுக்கு நேரான பாதையை நாம் காட்டியிருப்போம்.

நேரான பாதை என்பதற்கு பரிசுத்த உலகிற் சேர்ப்பிக்கும்படியான பாதை என்பது கருத்து.

ஹதீஸ்:- எவர் அறிந்ததன்படி அமல் செய்கிறாரோ அவருக்கு அவர் அறியாததை அல்லாஹு தஆலா அனந்தரமாக்கி வைக்கிறான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ ۚ وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا ۝

69. இன்னும், எவர்கள் அல்லாஹ்விற்கும், இந்த ரசூலுக்கும் கீழ்ப்படிகிறாரோ அவர்கள் (கியாமத்து நாளில்) எவர்களுக்கு அல்லாஹ் (பரிபூரணமாக) பாக்கியமளித்தானோ அவர்களாகிய நபிமார்களுடனும், ஸித்தீக்குகளுடனும், ஷஹீதுகளுடனும், (சன்மார்க்கத்திற்கு) இணக்கமானவர்களுடனும் இருப்பார்கள். இன்னும் அவர்கள் தோழர்களில் நல்லவர்களாவர்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மவ்லா (அதாவது அடிமையாக இருந்து விடுதலை செய்யப்பட்டவர்) தவ்பான் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் ஒருநாள் மிகவும் கவலையடைந்தவராக வாடிய முகத்துடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார்கள். அவரது முக வாட்டத்தையும், வேறுபாட்டையும் பார்த்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரிடம், அவருடைய நிலையைக் குறித்து விசாரித்தார்கள். அதற்கவர் "எனக்கொரு வருத்தமுமில்லை. என்றாலும், தங்களை நான் ஒரு நேரமேனும் பார்க்காமலிருந்தால் தங்களைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை மேலிட்டு அதே கவலையாக இருக்கிறேன். இனி மறு உலகைப் பற்றி நினைத்தால் மிகக் கவலை ஏற்படுகிறது. ஏனெனில், தாங்கள் நபிமார்களுடன் சுவர்க்கத்தில் மேல் மாளிகையிலிருப்பீர்கள். நான் சுவர்க்கத்தில் வந்தாலும் தங்களுக்குக் கீழ் ஒரு கீழ்த்தலத்திலிருப்பேன். ஆகவே, அங்கும் நான் தங்களைக் காணமுடியாது. சுவர்க்கத்தில் பிரவேசிக்காவிடில் ஒருநாளும் நான் தங்களைப் பார்க்கவே முடியாது. இதனைப் பற்றித்தான் பயப்படுகிறேன்" என்று கூறினார். அதுசமயம் இந்த ஆயத்து அருளப்பட்டது. அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

قَالَ عَلَيْهِ السَّلَامُ وَالَّذِيْ نَفْسِي بِيَدِه لَا يُؤْمِنُ عَبْدٌ حَتَّى اَكُوْنَ اَحَبَّ اِلَيْهِ مِنْ نَفْسِه وَاَبَوَيْهِ وَاَهْلِه وَوَلَدِه وَالنَّاسِ اَجْمَعِيْنَ

"எனது ஆத்மா எவன் கையில் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாகக் கூறுகிறேன். தனது உயிரையும், இரு பெற்றோர் களையும், குடும்பத்தாரையும், பிள்ளையையும், மற்றெல்லா மனிதர் களையும் பார்க்கினும் என்னை அதிகப் பிரியமாக எந்த அடியார் கருதுகிறாரோ அவர்தான் (உண்மை) விசுவாசி" என்று கூறினார்கள்.

ذٰلِكَ الْفَضْلُ مِنَ اللّٰهِ ۚ وَكَفٰى بِاللّٰهِ عَلِيْمًا ۝

70. பாக்கியமாகிய இது அல்லாஹ்விடமிருந்து உள்ளதாகும். இன்னும் அல்லாஹ் (மிகவும்) அறிந்தவனாக இருப்பது போதுமானது.

இந்த ஆயத்தும், இதற்கு முன்னுள்ள ஆயத்தும் இறங்கியதற்கு குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பமும் காரணமுமிருந்தாலும், இவற்றில் சொல்லப்பட்ட விஷயம் பொதுவானதாகவே இருப்பதால் இந்த ஆயத்துகள் எல்லோருக்கும் பொதுவானவைகளாகவே

இருக்கின்றன. எனவே, எவர் அல்லாஹு தஆலாவிற்கு கீழ்ப்படிந்து, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் கீழ்ப்படிகிறாரோ அவர் அல்லாஹு தஆலாவிடத்தில் பல உயர்ந்த அந்தஸ்துகளை அடைவார். ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றுவதும், அல்லாஹ்வின் ஒலிமார்களைப் பின்பற்றுவதும் அவசியமாகும். நபிமார்களுக்கு அல்லாஹு தஆலாவின் வஹி வருகிறது. ஒலிமார்களுக்கு அவனது இல்ஹாம் வருகிறது. ஒலிமார்களைப் பின்பற்றுவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றுவதாகவே இருக்கிறது. "மனிதன் யாரை நேசிக்கிறானோ அவருடனிருப்பான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, நபிமார்களையும், ஸித்தீக்குகளையும், ஷஹீதுகளையும், ஸாலிஹான பெரியார்களையும் நேசிப்பவர் சுவர்க்கத்தில் அவர்களுடனிருப்பார். தவிரவும் ஸாலிஹான பெரியார்களது அந்தஸ்தை அடைவதுடன் மட்டும் திருப்தியடைந்து விடாமல் அதனைப் பரிபூரணமாக அடைந்து அதற்கப்புறமுள்ள ஷஹாதத்து, ஸித்தீக்கிய்யத்து ஆகிய அந்தஸ்து களையும் அடைய ஒவ்வொருவரும் முயல வேண்டும் என்பது இந்த ஆயத்தின் மூலம் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا خُذُوا حِذْرَكُمْ فَانفِرُوا ثُبَاتٍ
أَوِ انفِرُوا جَمِيعًا ۝

71. ஈமான் கொண்டவர்களே, நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். அப்பால், தொகுதி தொகுதியாகச் செல்லுங்கள் அல்லது எல்லோரும் சேர்ந்து செல்லுங்கள்.

"பகைவர்களுக்கு இடங்கொடுக்காமல், உங்களது தற்காப்பிற்கு உரிய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு பல கூட்டங்களாகப் பிரிந்து யுத்தத்திற்குச் செல்லுங்கள் அல்லது எல்லோரும் ஒன்று சேர்ந்து செல்லுங்கள்" என்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَإِنَّ مِنكُمْ لَمَن لَّيُبَطِّئَنَّ فَإِنْ أَصَابَتْكُم مُّصِيبَةٌ
قَالَ قَدْ أَنْعَمَ اللَّهُ عَلَيَّ إِذْ لَمْ أَكُن مَّعَهُمْ شَهِيدًا ۝

72. இன்னும், நிச்சயமாக உங்களில் (யுத்தத்திற்கு வராமல்) பிந்துகிறவனும் இருக்கின்றான்; பின்னர் (யுத்தத்தில்) உங்களுக்கு ஒரு கஷ்டம் சம்பவித்தால் "அல்லாஹ் என் மீது அருள் புரிந்தான். ஏனெனில், அவர்களுடன் நான் (யுத்த களத்தில்) கலந்து கொள்ளாமல் இருந்ததினால்" என்று கூறுகிறான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது போர் வீரர்களான மூமின்கள் முனாஃபிக்குகள் எல்லோரையும் முன்னோக்கி "உங்களில்" என்று கூறப்பட்டிருக்கிறது. யுத்தத்திற்குச் செல்லாமல் இருந்து கொள்பவர்கள் முனாஃபிக்குகள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மக்கத்து முஷ்ரிக்குகளுக்கும் உஹத் என்ற இடத்தில் போர் நிகழ்ந்த போது அப்துல்லாஹிப்னு உபய்யி என்ற முனாஃபிக்கும், அவனது நண்பர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் சேர்ந்து பகைவர்களை எதிர்த்து யுத்தஞ் செய்யாமல் விலகிக் கொண்டார்கள்.

وَلَئِنْ أَصَابَكُمْ فَضْلٌ مِّنَ اللَّهِ لَيَقُولَنَّ كَأَن لَّمْ
تَكُن بَيْنَكُمْ وَبَيْنَهُ مَوَدَّةٌ يَا لَيْتَنِي كُنتُ مَعَهُمْ
فَأَفُوزَ فَوْزًا عَظِيمًا ۝

73. இன்னும், உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஒரு பாக்கியம் கிடைத்தால் உங்களுக்கிடையிலும் அவனுக்கிடையிலும் எவ்வித பழக்கமும் இல்லாதது போல "அவர்களுடன் நானும் இருந்தேனா? அவ்வாறு இருந்தால் மிகப்பெரிய பங்கை நானும் அடைவேனே" என்று நிச்சயமாகக் கூறுவான்.

முனாஃபிக்குகளது நயவஞ்சகத் தன்மையும் பொருளாசையும் இவ்விரு ஆயத்துகளிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

فَلْيُقَاتِلْ فِي سَبِيلِ اللَّهِ الَّذِينَ يَشْرُونَ الْحَيَوٰةَ
الدُّنْيَا بِالْآخِرَةِ ۚ وَمَنْ يُقَاتِلْ فِي سَبِيلِ اللَّهِ فَيُقْتَلْ
أَوْ يَغْلِبْ فَسَوْفَ نُؤْتِيهِ أَجْرًا عَظِيمًا ۝

74. ஆகவே, இவ்வற்ப (உலக) வாழ்வை மறுமைக்குப் பதிலாக விற்று விடுகிறார்களே அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் யுத்தஞ் செய்யட்டும், இன்னும், அல்லாஹ்வின் பாதையில் எவர் யுத்தஞ் செய்கிறாரோ அவர் கொல்லப்பட்டும் அல்லது வெற்றியடையட்டும். அவருக்கு மிகப் பெரிய கூலியை நாம் அளிப்போம்.

"மார்க்க யுத்தஞ் செய்யச் செல்பவர்கள் ஷஹீதாகுவதன் மூலம் தனக்குக் கண்ணியத்தை உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும் அல்லது வெற்றியடைவதன் மூலம் சன்மார்க்கத்திற்கு கண்ணியத்தை உண்டாக்க வேண்டும். இவ்விரண்டைத் தவிர வேறு எதையும் நாடக் கூடாது" என்பது இந்த ஆயத்தின் மூலம் எச்சரிக்கை செய்யப் பட்டிருக்கிறது.

وَمَا لَكُمْ لَا تُقَاتِلُونَ فِي سَبِيلِ اللَّهِ وَالْمُسْتَضْعَفِينَ
مِنَ الرِّجَالِ وَالنِّسَاءِ وَالْوِلْدَانِ الَّذِينَ يَقُولُونَ رَبَّنَا
أَخْرِجْنَا مِنْ هَٰذِهِ الْقَرْيَةِ الظَّالِمِ أَهْلُهَا وَاجْعَلْ
لَنَا مِنْ لَدُنْكَ وَلِيًّا وَاجْعَلْ لَنَا مِنْ لَدُنْكَ نَصِيرًا ۝

75. மேலும், ஆண்கள், பெண்கள் குழந்தைகளில் பலஹீனமானவர்களுக்காக அல்லாஹ்வின் பாதையில் யுத்தஞ் செய்யாமலிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? "எங்களின் ரட்சகனே! அக்கிரமக்காரர்கள் வசிக்கும் இந்நகரத்தை விட்டு எங்களை வெளியேற்றுவாயாக" இன்னும், எங்களுக்கு உன்னிடமிருந்து ஒரு பாதுகாவலரை ஏற்படுத்துவாயாக; இன்னும், உன்னிடமிருந்து ஒரு உதவியாளரை எங்களுக்கு உண்டாக்குவாயாக" என்று (பலஹீனர்களான) அவர்கள் கூறுகிறார்கள்.

الْمُسْتَضْعَفِينَ **அல்முஸ்தல்அஃபீன** அதாவது பலஹீனர்கள் என்று கூறி இருப்பது மக்கமா நகரில் குடி இருந்து கொண்டிருந்த முஸ்லிம்களைக் குறிக்கிறது. இவர்கள் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தார்கள். ஆயினும், இவர்களை ஹிஜ்ரத்துச் செய்து மதீனமா நகருக்குச் செல்லவிட மாட்டோம் என்று மக்கத்து முஷ்ரிக்குகள் தடுத்து வைத்திருந்ததுடன், அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்ததற்காக அவர்களைப் பலவிதமாகக் கஷ்டப் படுத்திக் கொண்டும் இருந்தார்கள். هَٰذِهِ الْقَرْيَةِ **ஹாதிஹில் கர்யத்தி** அதாவது இந்த ஊர் என்றது மக்கமா நகரம். الظَّالِمِ أَهْلُهَا **அல்லாலிமி அஹ்லுஹா**, அதாவது அதிலுள்ளவர் அக்கிரமக்காரர் என்பது அங்குள்ள முஷ்ரிக்குகளைக் குறிக்கிறது. அவர்கள் இணை வைப்பது அல்லாஹுதஆலாவிற்கு அநீதி செய்வதாகவும், மூமின்களைத் தொந்தரவு செய்வது அக்கிரமஞ் செய்வதாகவும் இருப்பதால் அவர்களை அக்கிரமக்காரர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹிஜ்ரத்துச் செய்ய முடியாமல் முஷ்ரிக்குகளால் நெருக்கடி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிற மூமின்கள் கேட்ட இந்த துஆவை அல்லாஹுதஆலா ஒப்புக் கொண்டு விட்டான். எனவே, திருமக்கமா நகரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கைப்பற்றுவதற்கு முன்னதாகவே அங்குள்ள சிலருக்கு ஹிஜ்ரத்துச் செய்ய அனுமதி கிடைத்தது. அப்புறம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கமா நகரைக் கைப்பற்றி அவர்களுக்கு பாதுகாப்பாகவும் உதவியாளராகவும் ஏற்பட்டு விட்டார்கள்.

الَّذِينَ آمَنُوا يُقَاتِلُونَ فِي سَبِيلِ اللَّهِ ۖ وَالَّذِينَ كَفَرُوا
يُقَاتِلُونَ فِي سَبِيلِ الطَّاغُوتِ فَقَاتِلُوا أَوْلِيَاءَ
الشَّيْطَانِ ۖ إِنَّ كَيْدَ الشَّيْطَانِ كَانَ ضَعِيفًا

76. விசுவாசங் கொண்டவர்கள் அல்லாஹ்வின் பாதையில் யுத்தஞ் செய்கிறார்கள்; இன்னும், நிராகரிப்பவர்களோ (விக்கிரகமாகிய) தாகூத்தின் பாதையில் யுத்தம் புரிகின்றார்கள். ஆகவே, ஷைத்தானுடைய காரிய கர்த்தர் (நிராகரிப்பவர்)களுடன் (நீங்கள்) யுத்தம் புரிவீர்களாக. நிச்சயமாக ஷைத்தானுடைய சூழ்ச்சி பலஹீனமானதாகும். (ஆகையால் அவர்கள் கடைசியில் வெற்றியடையவே மாட்டார்கள்).

சன்மார்க்கத்திற்கு வெற்றி யளிப்பதற்காக அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிபவருக்கு அல்லாஹு தஆலா உதவி புரிகிறான். ஷைத்தானுடைய பாதையில் யுத்தம் செய்பவருக்கு ஷைத்தான் உதவி புரிகின்றான். அல்லாஹு தஆலாவின் உதவியின் முன் ஷைத்தானின் உதவி மிகப் பலஹீனமானது.

அறிந்துகொள் :- "நானும் எனது தாயாரும் மேற்கண்ட ஆயத்தில் இறைவன் கூறியுள்ள பலஹீனர்களைச் சேர்ந்திருந்தோம். இந்த ஆயத்தில் கண்ட துஆவை அவன் அங்கீகரித்து சிலருக்கு மக்கமா நகரை விட்டு வெளியேறிச் செல்வதற்கு வசதியை அளித்தான். சிலர் மக்கமா நகரம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் வெற்றி கொள்ளப்படும் வரை அங்கேயே இருந்தார்கள். மக்கமா நகரை வென்ற பிறகு உத்தாபுப்னு அஸ்ஸயத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நியமித்து அநியாயம் செய்தவர்களிடம் பகரம் வாங்கி அநியாயம் செய்யப்பட்டவர்களுக்கு அளிக்கும்படி செய்தார்கள். ஆதலின், மக்கமா நகரிலேயே இருந்தவர்களும் தங்களுக்குத் தக்கதைப் பெற்றுக் கொண்டார்கள்" என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ قِيلَ لَهُمْ كُفُّوا أَيْدِيَكُمْ وَأَقِيمُوا
الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ فَلَمَّا كُتِبَ عَلَيْهِمُ
الْقِتَالُ إِذَا فَرِيقٌ مِّنْهُمْ يَخْشَوْنَ النَّاسَ كَخَشْيَةِ
اللَّهِ أَوْ أَشَدَّ خَشْيَةً ۚ وَقَالُوا رَبَّنَا لِمَ كَتَبْتَ
عَلَيْنَا الْقِتَالَ لَوْلَا أَخَّرْتَنَا إِلَىٰ أَجَلٍ قَرِيبٍ ۗ قُلْ
مَتَاعُ الدُّنْيَا قَلِيلٌ وَالْآخِرَةُ خَيْرٌ لِّمَنِ اتَّقَىٰ
وَلَا تُظْلَمُونَ فَتِيلًا

77. உங்களுடைய கைகளை (யுத்தம் செய்வதை விட்டுத்) தடுத்துக் கொள்ளுங்கள்; இன்னும், தொழுகையை நிறைவேற்றி, ஜக்காத்தை (மார்க்க வரியை)யும் கொடுத்து வாருங்கள் என்று எவர்களுக்குச் சொல்லப்பட்டதோ அவர்களை நீர் பார்க்கவில்லையா? பின்னர் அவர்களின் மீது யுத்தம் ஏற்படுத்தப்பட்டபோது, அவர்களில் ஒரு கூட்டத்தினர் அல்லாஹ்வுக்குப் பயப்படுவது போல, அல்லது, (அதைவிட) மிகக் கடுமையான பயமாக (எதிரிகளாகிய) மனிதர்களுக்குப் பயப்படுகின்றனர். இன்னும் "எங்கள் றப்பே! யுத்தம் புரிவதை எங்களின் மீது ஏன் கடமையாக்குகின்றாய்? சிறிது காலம் எங்களுக்கு பிற்படுத்தியிருக்கக் கூடாதா?" என்று கூறுகின்றனர். (ஆதலின் நபியே) "உலக இன்பம் அற்பமானது, இன்னும், அல்லாஹ்வைப் பயந்தவர்களுக்கு மறுமை (இன்பம்) மேலானது; இன்னும், (யுத்தம் உங்களின் மீது விதிக்கப் பெற்றதால்) ஒரு அணுவளவும் நீங்கள் அநீதி செய்யப்பட மாட்டீர்கள்" என்று கூறுவீராக.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமக்காவில் வசித்துக் கொண்டிருந்தபோது சில முஸ்லிம்கள் தங்களுக்கு முஷ்ரிக்குகள் செய்யும் இடையூறுகளைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் முறையிட்டு "இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவுவதற்கு முன் நாங்கள் கௌரவமாக இருந்தோம். இப்பொழுது சிறுமையடைந்திருக்கிறோம். தாங்கள் அனுமதித்தால் இந்த முஷ்ரிக்குகளை அவர்களது படுக்கையிலேயே நாங்கள் வெட்டி நாசமாக்கி விடுவோம்" என்று கூறினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "யுத்தம் செய்வதைத் தடுத்து, நீங்கள் ஏவப்பட்ட காரியங்களைச் செய்யுங்கள், யுத்தம் செய்யும்படி நான் கட்டளையிடப்படவில்லை" என்று கூறினார்கள். பின்னர், இவ்வித நிலையிலேயே மக்காவில் வசித்துக் கொண்டிருந்து மதீனா முனவ்வராவிற்கு ஹிஜ்ரத்துச் சென்றார்கள். பிறகு, பத்ருப் போர் ஏற்படுஞ் சமயத்தில் யுத்தம் செய்யும்படி அல்லாஹு தஆலா கட்டளையிட்டான். அப்பொழுது, அவர்களிற் சிலர் யுத்தம் செய்வதை வெறுத்தார்கள். யுத்தம் செய்வது அவர்களுக்குச் சிரமமாகத் தோன்றிற்று. ஆனால், அவர்கள் இவ்வாறு பின்வாங்கியது சன்மார்க்கமாகிய இஸ்லாம் மார்க்கத்தில் சந்தேகங் கொண்டதனாலோ, அதனைப் புறக்கணித்ததனாலோ இல்லை. மரணத்தைப் பயந்து பின்வாங்கினார்கள். அவர்களது இச்செய்கையைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டது.

أَيْنَ مَا تَكُونُوا يُدْرِككُّمُ الْمَوْتُ وَلَوْ كُنتُمْ فِي بُرُوجٍ
مُّشَيَّدَةٍ ۗ وَإِن تُصِبْهُمْ حَسَنَةٌ يَقُولُوا هَٰذِهِ مِنْ عِندِ
اللَّهِ ۖ وَإِن تُصِبْهُمْ سَيِّئَةٌ يَقُولُوا هَٰذِهِ مِنْ عِندِكَ ۚ
قُلْ كُلٌّ مِّنْ عِندِ اللَّهِ ۖ فَمَالِ هَٰؤُلَاءِ الْقَوْمِ لَا يَكَادُونَ
يَفْقَهُونَ حَدِيثًا ﴿٧٨﴾

78. (யுத்தத்திற்குப் பயந்து) பலமான கோட்டைகளுக்குள் நீங்கள் இருந்தாலுஞ் சரியே, நீங்கள் எங்கிருந்தாலும் உங்களை மரணம் அடைந்தே தீரும். இன்னும், அவர்களுக்கு ஒரு நன்மை சம்பவிக்குமாயின் "இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது" என்று அவர்கள் கூறுகின்றனர்; ஆனால், அவர்களுக்கு ஒரு தீமை சம்பவிக்குமாயின் 'இது உம்மால் வந்தது' என்று கூறுகிறார்கள்; (ஆதலின், நீர் அவர்களுக்கு) எல்லாம் அல்லாஹ்விடமிருந்தே (உண்டாகின்றன) என்று கூறுவீராக! எனவே, இக்கூட்டத்தினருக்குக் கிடைப்பது எதுவோ? (இவர்கள்) எவ்விஷயத்தையும் (சரிவர) உணர்ந்து கொள்ள நெருங்கின்றனரல்லர்.

ஃபாயிதா:- முற்காலத்தில் ஒரு பெண்ணும் அவளுக்கொரு வேலைக்காரனுமிருந்தான். அந்த பெண் ஒரு குழந்தையைப் பிரசவித்தாள். அப்போது விளக்கேற்றிக் கொண்டு வரும்படி தனது வேலைக்காரனிடம் அவள் கூறினாள். அவன் விளக்கேற்றுவதற்காக வெளியில் வந்த போது வாசலில் ஒரு வேற்று மனிதர் நின்று கொண்டு "என்ன குழந்தை பிறந்தது?" என்று விசாரித்தார். பெண் குழந்தை பிறந்ததாக அவ்வேலைக்காரன் கூறவே "இக்குழந்தை நூறு பேருடன் விபச்சாரம் செய்து, அப்புறம் தனது வேலைக்காரனை மணந்து கொள்வாள்; இறுதியாகச் சிலந்திப் பூச்சியினால் அவள் மரணமடைவாள்" என்று கூறிப் போய்விட்டார். அவ்வேலைக்காரன் இவள் நூறு பேருடன் விபச்சாரம் செய்த பிறகு நாம் தானே இவளை திருமணம் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று நினைத்து ஒரு கத்தியை எடுத்து வந்து அக்குழந்தையின் வயிற்றைப் பிளந்து விட்டு கடற்கரைக்குச் சென்று வெளிநாட்டிற்குப் போய் விட்டான். பின்னர், அக்குழந்தைக்கு வயிற்றிலிருந்த காயம் குணமடைந்து வாலிபப் பருவத்தையும் அடைந்து கடற்கரையோரமாக வந்திருந்து கொண்டு விபச்சாரத் தொழில் செய்தாள். இவ்வித நிலையில் அவ்வேலைக்காரன் வேண்டிய செல்வத்தைச் சம்பாதித்துக் கொண்டு அங்கு திரும்ப வந்து சேர்ந்து, அங்குள்ள ஒரு வயோதிக பெண்ணிடம் சென்று தனக்கு திருமணம் செய்து கொள்வதற்கு அழகிய ஒரு பெண் வேண்டுமென்று கூறினான். அதற்கந்தக் கிழவி "அழகான ஒரு பெண் இருக்கிறாள்.

ஆனால், அவள் விபச்சாரி" என்று கூறினாள். அதற்கு அவன் அப்பெண்ணை அழைத்து வரும்படி சொல்லவே, அக்கிழவி அவளிடம் சென்று "பணக்காரன் ஒருவன் வந்திருக்கிறான். அவனிடம் வா", என்று அவளை அழைத்த போது அவள், "நான் விபச்சாரத் தொழிலை விட்டு விட்டேன், என்னை திருமணம் செய்து கொள்வதாக இருந்தால் வருவேன்" என்று கூறினாள். அக்கிழவி இச்செய்தியை அவனிடம் தெரிவித்த போது அவன் அதற்குச் சம்மதித்தான். ஆகவே, இருவரும் திருமணம் செய்து கொண்டு சதிபதிகளாக வாழ்ந்தனர். பிறகு ஒருநாள் அவன் தனது பழைய நிலையைப் பற்றிக் கூறினான். அப்பொழுது அந்த பெண் நான்தான் அந்தக் குழந்தை, நூறு பேருடனோ அதற்கதிகமாகவோ அல்லது குறைவாகவோ நான் விபச்சாரம் செய்திருப்பேன் என்று கூறி தனது வயிற்றிலிருந்த காயத்தின் தழும்பையும் காண்பித்தாள். பிறகு, இவள் சிலந்திப் பூச்சியினால் மரணமடைவாள் என்று அவ்வேற்று மனிதர் கூறியதைக் கூறி இவளுக்குக் காட்டிலொரு மாளிகையை மிகவும் பலமாகக் கட்டி முடித்து அதில் அவளைக் குடியேற்றி இருந்தான். அவ்வாறு இருக்கும் போது ஒருநாள் அம்மாளிகையில் ஒரு சிலந்தி இருப்பதைக் கண்டு, இது தானே நம்மைக் கொல்லும் பிராணி; இதனை நாம் கொன்று விட வேண்டும் என்று அதனைத் தட்டினாள். அது கீழே விழுந்தது. அதனைக் கால் பெருவிரலால் மிதித்து நசுக்கி விட்டாள். என்றாலும் அதிலுள்ள நச்சுத் தண்ணீரின் விஷம் விரலின் நகக்கால் வழியாக அவளுடலிற் சேர்ந்து அவளது கால் கரு நிறமடைந்தது. அந்நோயால் அவள் மரணமடைந்தாள். இவ்விபரத்தை இந்த ஆயத்தின் மூலம் இறைவன் இங்கு கூறி "மரணம் எங்கிருந்தாலும் வந்து விடும்" என்பதை அறிவுறுத்தியுள்ளான் என்று முஜாஹிது ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

بُرُوْجٍ مُّشَيَّدَةٍ **புரூஜன் முஷய்யதா**, என்பதற்கு நீருங் காரையும் சேர்த்து மிகக் கெட்டியாகவும் வானளாவும்படி உயரமாகவும் கட்டப்பட்டுள்ள மாளிகை அல்லது மண்டபம் என்பது பொருள்.

مَآ اَصَابَكَ مِنْ حَسَنَةٍ فَمِنَ اللّٰهِ ۚ وَمَآ اَصَابَكَ

مِنْ سَيِّئَةٍ فَمِنْ نَّفْسِكَ ۚ وَاَرْسَلْنٰكَ لِلنَّاسِ رَسُوْلًا ۚ وَكَفٰى بِاللّٰهِ شَهِيْدًا ۝

79.(மானிடனே) நன்மையிலிருந்து ஏதேனும் உனக்கு வந்தால் (அது) அல்லாஹ்விலிருந்(து வந்)ததாகும். ஆனால், தீமையிலிருந்து ஏதேனும் உனக்கு ஏற்பட்டால் அது உன்னாலேயே (வந்ததாகும்). மேலும், (நபியே) உம்மை மனிதர்களுக்குத் தூதராக அனுப்பியிருக்கின்றோம். மேலும், (நீர் அவனுடைய தூதர் என்பதற்கு) அல்லாஹ் சாட்சியாயிருப்பது போதுமானது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து மதீனமா நகரம் சென்ற பிறகு யூதர்களும் முனாஃபிக்குகளும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்து "இவர் வந்த நாள் முதல் நமக்குப் பஞ்சமாக இருக்கிறது" என்று கூறினார்கள். அதனை மறுத்து இந்த ஆயத்து அருளப்பட்டது.

அறிந்துகொள்:- கிரியைகளுக்கு நான்கு அந்தஸ்துகள் இருக்கின்றன. அவற்றில் இரண்டு அல்லாஹு தஆலாவிற்குச் சம்மந்தப் பட்டவை. அவற்றில் அடியார்களுக்கு எவ்விதச் சம்மந்தமும் இல்லை. அவை தக்தீர், சிருஷ்டித்தல் ஆகியவைகளாகும். மற்ற இரண்டு அந்தஸ்துகளும் அடியார்களுக்குச் சம்மந்தப்பட்டவை. அவை முயற்சி, செய்கை ஆகியவைகளாகும். இவ்விரு காரியங்களையும் விட்டு அல்லாஹுதஆலா தூயவன். என்றாலும், அடியார்களும் அவர்களுடைய முயற்சிகளும் சிருஷ்டிக்கப் பட்டவை களாகும். இதனைக் குறித்துத்தான் இறைவன் قُلْ كُلٌّ مِّنْ عِنْدِ اللّٰهِ **மேலும், அல்லாஹ் உங்களையும் நீங்கள் செய்வதையும் சிருஷ்டித்திருக்கிறான்** என்று கூறியுள்ளான். எனவேதான் இதற்கு முந்திய ஆயத்தில் **எல்லாம் அல்லாஹ்விடமிருந்தே (உண்டாகின்றன) என்று நீர் கூறிவிடும்** என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்கு தக்தீர், சிருஷ்டித்தல் ஆகியவற்றின்படி எல்லாம் அல்லாஹ்விடமிருந்தே ஏற்படுகின்றன என்பது கருத்து.

مَنْ يُطِعِ الرَّسُولَ فَقَدْ أَطَاعَ اللَّهَ ۖ وَمَنْ تَوَلَّىٰ فَمَا أَرْسَلْنَاكَ عَلَيْهِمْ حَفِيظًا

80. எவர் (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்ப்படிந்தாரோ அவர் நிச்சயமாய் அல்லாஹ்வுக்கே கீழ்ப்படிந்து விட்டார்; இன்னும், எவர் (கீழ்ப்படிய) பின் வாங்கினாரோ அவர் மீது (நபியே) உம்மை நாம் காவற்காரராக அனுப்பவில்லை.

"என்னை நேசிப்பவர் அல்லாஹு தஆலாவை நேசிக்கிறார். இன்னும் எனக்குக் கீழ்ப்படிபவர் அல்லாஹு தஆலாவிற்குக் கீழ்ப்படிந்தவராகிறார்". என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அதற்கு முனாஃபிக்குகள் "முஹம்மது இணைவைக்க வேண்டாமென்று கூறி இணை வைக்கிறார். கிறிஸ்துவர்கள் ஈஸாவை நாயனாக ஏற்படுத்திக் கொண்டதுபோல, தம்மை நாயனாக்கிக் கொள்ள வேண்டும் என்று அவர் நம்மை ஏவுகிறார்" என்று கூறினர். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது.

மனிதர்கள் செய்யும் கிரியைகளைப் பாதுகாத்து, அவர்களை அவ்வாறு செய்ய விடாமல் தடுப்பதற்காக உம்மை அனுப்பவில்லை, மனிதர்களிடம் விஷயத்தை அறிவித்து விடுவதுதான் உமது வேலை; அவர்கள் செய்த காரியங்களைக் குறித்து அவர்களை நான் விசாரித்துக் கொள்வேன் என்பது فَمَا أَرْسَلْنَاكَ عَلَيْهِمْ حَفِيظًا "மேலும், உம்மை அவர்கள் மீது காவற்காரராக நாம் அனுப்ப வில்லை" என்ற வசனத்தின் கருத்து.

وَيَقُولُونَ طَاعَةٌ فَإِذَا بَرَزُوا مِنْ عِنْدِكَ بَيَّتَ طَائِفَةٌ مِنْهُمْ غَيْرَ الَّذِي تَقُولُ ۖ وَاللَّهُ يَكْتُبُ مَا يُبَيِّتُونَ ۖ فَأَعْرِضْ عَنْهُمْ وَتَوَكَّلْ عَلَى اللَّهِ ۚ وَكَفَىٰ بِاللَّهِ وَكِيلًا

81. மேலும், கீழ்ப்படிதல் (தான் தங்கள் வேலை) என்று (நயவஞ்சகர்கள்) கூறுகிறார்கள். எனவே, (நபியே) உம்மிடத்திலிருந்து அவர்கள் வெளியேறினால், அவர்களிலிருந்து ஒரு கூட்டம் (உம்மிடம்) கூறியது அல்லாததை (அவர்களின் இருதயத்தில்) மறைத்து வைக்கின்றனர். ஆனால், அல்லாஹ் அவர்கள் மறைத்துக் கொண்டதை எழுதிக் கொள்கின்றான்; ஆதலின், நீர் அவர்(களின் பேச்சுக்)களைப் புறக்கணித்து விட்டு, அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டுவீராக; மேலும், அல்லாஹ் வக்கீலாக (பொறுப்பேற்றுக் கொள்பவனாக) இருப்பது (உமக்குப்) போதுமானது.

இந்த ஆயத்தில் முனாஃபிக்குகளது நயவஞ்சகமான தன்மையை அதாவது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தன்மையையும், இந்த முனாஃபிக்குகளால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கோ இஸ்லாம் மார்க்கத்திற்கோ யாதொரு தீங்கும் நேர்ந்துவிட முடியாது என்ற விபரமும் கூறப்பட்டிருக்கின்றன.

أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْآنَ ۚ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللَّهِ لَوَجَدُوا فِيهِ اخْتِلَافًا كَثِيرًا

82. குர்ஆனை அவர்கள் சிந்தித்துப் பார்க்கக் கூடாதா? மேலும், அது அல்லாஹ் அல்லாதவனிடத்திலிருந்து இது இருந்தால் அதில் ஏராளமான பேதத்தைக் கண்டிருப்பார்கள்.

திருக்குர்ஆனின் பொருள்களையும், கருத்துக்களையும், வாக்கிய அமைப்பையும் ஆராய்ச்சி செய்து பார்த்தால், அது அல்லாஹுதஆலாவுடைய வாக்கியம் என்பது வெளியாகும். அல்லாஹுதஆலாவைத் தவிரவுள்ள மனிதர் முதலிய சிருஷ்டிப்

பொருள்களால் அது இயற்றப் பட்டிருக்குமாயின் அதன் பொருள்களும் கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டும் வித்தியாசப்பட்டும் இருக்கும் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَإِذَا جَآءَهُمْ أَمْرٌ مِّنَ الْأَمْنِ أَوِ الْخَوْفِ أَذَاعُوا بِهِ ۖ وَلَوْ رَدُّوهُ إِلَى الرَّسُولِ وَإِلَىٰٓ أُولِى الْأَمْرِ مِنْهُمْ لَعَلِمَهُ الَّذِينَ يَسْتَنۢبِطُونَهُ مِنْهُمْ ۗ وَلَوْلَا فَضْلُ اللَّهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهُ لَاتَّبَعْتُمُ الشَّيْطَٰنَ إِلَّا قَلِيلًا ﴿٨٣﴾

83. இன்னும், வெற்றியிலிருந்து அல்லது தோல்வியிலிருந்து ஒரு விஷயம் அவர்களிடம் வந்துவிட்டால் அதைப் பரப்பி விடுகின்றனர்: ஆனால், (அல்லாஹ்வின்) தூதரிடத்திலும், அவர்களில் அதிகாரமுடைய (தலை)வரிடத்திலும் அதை அறிவிப்பார்களாயின், இவர்களிலிருந்து அதை விரித்துத் தெரிந்து கொள்ளத் தேடுகிறவர்கள் அ(தைப் பற்றியுள்ள நன்மை தீமையை)த் தெரிந்து கொள்வார்கள். மேலும், உங்களின் மீது அல்லாஹ்வின் அருளும் அவனது கிருபையும் இல்லையானால் நிச்சயமாக (உங்களில்) சிலரைத் தவிர ஷைத்தானை நீங்கள் பின்பற்றியிருப்பீர்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுப்புகிற படைகள் சென்ற இடத்தில் கஷ்ட நஷ்டத்தையும், ஆபத்துகளையும் அடைவதைப் பற்றியோ அல்லது வெற்றி யடைவதைப் பற்றியோ செய்திகள் வந்தால் அவ்விஷயத்தை ஊரெங்கும் பரப்பி விடுகின்றனர். இப்படிச் செய்யாமல் அச்செய்தியை வெளிக்குப் பரப்புவது உசிதமா அல்லவா என்பதை நிதானித்து உசிதம்போல் செய்யட்டும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், குலஃபாயே ராஷிதீன்கள் போன்ற முக்கிய ஸஹாபிகளுக்கும் விட்டு விட்டால், அதனைப் பற்றி நிதானித்து

அச்செய்தியை பரப்புவதா இல்லையா என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்து. முனாஃபிக்குகள் இச்செய்தியை இவ்வாறு பரப்பிக் கொண்டிருந்தது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மன வருத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

وَلَوْلَا فَضْلُ اللَّهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهُ **அல்லாஹ்வின் அருளும் அவனது கிருபையும்** என்றது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நுபுவ்வத்து வந்ததையும், திருக்குர்ஆன் அருளப் பட்டதையும் குறிக்கிறது. இவ்விரண்டுமில்லையானால் ஜைதுப்னு அம்ரிப்னி துபைல் ரலியல்லாஹுதஆலா அன்ஹு, வரக்கத்துப்னு நவ்ஃபல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு போன்ற சிலரைத் தவிர மற்றவர்கள் குஃப்ரு வழிகேடு ஆகியவற்றைப் பின்பற்றி இருப்பார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நுபுவ்வத்து வருவதற்கு முன்னதாகவே ஜைது ரலியல்லாஹுதஆலா அன்ஹு, வரக்கத்துப்னு நவ்ஃபல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு போன்றவர்கள் இணைவைப்பதை விட்டு விலகி நேரான மார்க்கத்தை கடைப்பிடிக்க வேண்டுமென்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு முவஹ்ஹிதீன்களாக அதாவது ஏக தெய்வ வணக்கஸ்தர்களாக இருந்தார்கள்.

إِلَّا قَلِيلًا **"சிலரைத் தவிர"** என்று சொல்லப்பட்ட வார்த்தைகள் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைக் குறித்து சொல்லப்பட்டதென்றும், நுபுவ்வத்து வருவதற்கு முன்பே அவர்கள் சத்திய மார்க்கத்தைத் தேடிக் கொண்டிருந்தார்கள் என்றும் ஷெய்கு நஜ்முத்தீன் குத்திஸ ஸிர்ருஹு அவர்கள் தமது **தாவீலாத்துன்னஜ்மியா** என்ற கிரந்தத்தில் எழுதி இருக்கிறார்கள்.

رُوِىَ عَنِ النَّبِي صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ كُنْتُ وَأَبُوبَكْرٍ كَفَرَسَىْ

رِهَانٍ سَبَقْتُهُ فَتَبِعَنِى وَلَوْ سَبَقَنِى لَتَبِعْتُهُ

ரிவாயத்து:- "நானும் அபூபக்கரும் பந்தயத்தில் விடப்படும் இரண்டு குதிரைகளைப் போலிருந்தோம். நான் அவரை முந்தினேன் அவர் என்னைத் தொடர்ந்தார். என்னை அவர் முந்தி இருந்தால் நான்

அவரைத் தொடர்வேன்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

فَقَاتِلْ فِي سَبِيلِ اللَّهِ ۚ لَا تُكَلَّفُ إِلَّا نَفْسَكَ وَحَرِّضِ
الْمُؤْمِنِينَ ۖ عَسَى اللَّهُ أَن يَكُفَّ بَأْسَ الَّذِينَ كَفَرُوا ۚ
وَاللَّهُ أَشَدُّ بَأْسًا وَأَشَدُّ تَنكِيلًا ۝

84. ஆதலின், (நபியே) நீர் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிவீராக; உம்மைத் தவிர (வேறு) யாரையும் யுத்தம் செய்யும்படி ஏவப்படவில்லை. இன்னும், விசுவாசிகளை (யுத்தத்திற்குச் செல்லும்படி) தூண்டுவீராக! நிராகரிப்பவர்களின் யுத்தத்தைத் தடுப்பதற்கு அல்லாஹ் போதுமானவன். மேலும் யுத்தத்தில் அல்லாஹ் மிகக் கடுமையானவன்; இன்னும், தண்டிப்பதிலும் மிகக் கடுமையானவன்.

''முனாஃபிக்குகள் உமக்கு உதவி செய்ய வராமல் நின்று கொண்டாலும் அதனை அலட்சியம் செய்துவிட்டு, நீர் மட்டும் தன்னந்தனியே வாயினும் சன்மார்க்கத்தை ஓங்கச் செய்வதற்காக யுத்தஞ் செய்யவேண்டும். அவர்களது எதிர்ப்பும், அவர்களது பிரிவும் உமக்குத் தீங்கு செய்யாது. அல்லாஹு தஆலாதான் உமக்கு உதவி புரிபவன். படைகளை அதிகமாக வைத்துக் கொண்டிருப்பது உதவி புரிந்து விடாது. ஆனால், மார்க்கத்தை நிலை நிறுத்துவதற்காகவும், அதனை ஓங்கச் செய்வதற்காகவும் யுத்தம் செய்வதால் கிடைக்கக் கூடிய இம்மை மறுமைப் பேறுகளைக் குறித்து உண்மை மூமின்களுக்கு விஷயத்தை அறிவித்து அவர்களை யுத்தத்திற்குச் செல்லும்படி தூண்டும். அவர்களை நிர்ப்பந்தம் செய்ய வேண்டாம். காஃபிர்களது யுத்தத்தை அல்லாஹு தஆலா தடுத்துக் கொள்ள முடியும்'' என்பது இந்த ஆயத்தின் கருத்து.

ரிவாயத்து:- உஹதுப் போர் நிகழ்ந்த பிறகு மக்கத்துக் குறைஷியருக்குத் தலைவராக இருந்த அபூசுஃப்யான் ''மறுவருடம் பத்ரு ஸுக்ராவில் யுத்தம் செய்ய வரவேண்டும்'' என்று கூறினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''அப்படியே ஆகட்டும்'' என்று சம்மதித்திருந்தார்கள். இவ்வாக்குறுதியின்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'பத்ரு ஸுக்ராவுக்கு யுத்தம் செய்வதற்காகச் செல்ல வேண்டும்' என்று கூறியபோது, சிலர் யுத்தத்திற்கு வரவில்லை. அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது. எனவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுபது குதிரை வீரர்களுடன் குறிப்பிட்ட இடத்தை நோக்கி வந்தார்கள். என்றாலும், அபூசுஃப்யான் பீதியடைந்து அந்த இடத்திற்கு வராமலே இருந்து விட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் யுத்தத்திற்குச் சென்ற வீரர்கள் அங்கு வியாபாரம் செய்து தக்க லாபத்துடன் திரும்பினார்கள். இதன் முழு விபரமும் சூரத்து ஆலஇம்ரான் 172,173 வது ஆயத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

مَّن يَشْفَعْ شَفَاعَةً حَسَنَةً يَكُن لَّهُ نَصِيبٌ مِّنْهَا ۖ
وَمَن يَشْفَعْ شَفَاعَةً سَيِّئَةً يَكُن لَّهُ كِفْلٌ مِّنْهَا ۗ
وَكَانَ اللَّهُ عَلَىٰ كُلِّ شَيْءٍ مُّقِيتًا ۝

85. எவன் ஒரு நன்மைக்குப் பரிந்துரை செய்கிறாரோ அவருக்கு அதிலிருந்து பங்கு உண்டு. இன்னும், எவன் தீமைக்குப் பரிந்துரை செய்கின்றாரோ அவருக்கு அதிலிருந்து பங்கு உண்டு. மேலும், அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் சக்தி மிக்கவன்.

முஸ்லிம்களது உரிமையைப் பாதுகாத்தல், அவர்களுக்குத் தீங்கு வருவதை நிவர்த்தித்தல், அவர்களுக்கு நன்மை செய்தல் முதலியவற்றில் லஞ்சம் வாங்காமல் இருந்து கொள்வது போன்ற காரியங்கள் ''நன்மை''களாகும். சன்மார்க்கத்திற்கு ஆகாத காரியங்களைச் செய்த குற்றத்திற்காக விதிக்கப்படும் தண்டனை களைக் குறைக்கும்படியோ, தண்டிக்காமல் விட்டு விடும்படியோ கூறப்படும் சிபாரிஷ்கள் முதலியவற்றிற்கு ''தீமை'' என்று பெயர்.

மஸ்ரூக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் ஒருவருக்கு சிபாரிஷ் செய்தார்கள். சிபாரிஷ் செய்யப்பட்டவர் மஸ்ரூக் ரலியல்லாஹுத்ஆலா அன்ஹு அவர்களுக்கு ஒரு அடிமைப் பெண்ணை அன்பளிப்பாக அளித்தார். அதனை அப்பெரியார் அங்கீகரிக்க மறுத்து விட்டதுடன் கோபமடைந்து "உமது இருதயத்தில் இருப்பதை நான் முன்னதாகவே அறிந்திருந்தால் உமது தேவையைக் குறித்து நான் பேசியே இருக்க மாட்டேன். இனி எஞ்சியுள்ளதில் நான் பேசமாட்டேன்" என்று கூறிவிட்டார்கள்.

وَإِذَا حُيِّيتُم بِتَحِيَّةٍ فَحَيُّوا بِأَحْسَنَ مِنْهَا أَوْ رُدُّوهَا

إِنَّ اللَّهَ كَانَ عَلَىٰ كُلِّ شَيْءٍ حَسِيبًا ۝

86. இன்னும், (மூமின்களே ஸலாம் சொல்வதன் மூலம்) நீங்கள் ஒரு காணிக்கை வைக்கப் பெற்றால் அதனைப் பார்க்கினும் மிக அழகானதைக் கொண்டு நீங்கள் காணிக்கை வையுங்கள் அல்லது அதனை நீங்கள் மீட்டுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் கணக்குப் பார்ப்பவனாக இருக்கிறான்.

அத்தஹிய்யத்து, என்பதற்குக் காணிக்கை என்று பொருள் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும், நீண்ட ஆயுளைக் கொடுக்க வேண்டும் என்றும், ஜீவித்திருக்கட்டும் என்றும் பிரார்த்திப்பதற்கு இந்த பெயர் ஆதியில் ஏற்பட்டது. அப்புறம் பொதுவாக எல்லா பிரார்த்தனை களுக்கும் இந்தப் பெயர் சொல்லப்பட்டது. அறபியர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது "அல்லாஹுதஆலா உனக்கு ஆயுளை அளிப்பானாக, உனது ஆயுளை அதிகப்படுத்துவானாக, ஆயிரம் வயதுக்கு வாழ்வாயாக" என்று கூறி வாழ்த்துவது வழக்கம். அப்புறம் இஸ்லாம் மார்க்கம் வந்தபிறகு "அஸ்ஸலாமு அலைக்கும்" (உங்களுக்கு ஈடேற்ற முண்டாகட்டும்) என்று ஸலாம் சொல்லுவதற்கு இந்த பெயர் வந்தது. ஆகவே, இந்த ஆயத்தில் மூமின்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது ஸலாம் சொல்லிக் கொள்வதைக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

எனவே, மூமின்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறினால், அதற்குப் பதிலாக "வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு" என்று சொல்ல வேண்டும் குறைந்த பட்சம் "வஅலைக்குமுஸ்ஸலாம்" என்றாவது சொல்ல வேண்டும். இந்த அளவிற்கு பதிற் செல்வது வாஜிபு. இதற்கு அதிகமாகச் சொல்வது நல்லது.

رُوِيَ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ قَالَ السَّلَامُ عَلَيْكُمْ

كُتِبَ لَهُ عَشْرُ حَسَنَاتٍ وَمَنْ قَالَ السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ

كُتِبَ لَهُ عِشْرُوْنَ حَسَنَةً وَمَنْ قَالَ السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ

وَبَرَكَاتُهُ كُتِبَ لَهُ ثَلَاثُوْنَ حَسَنَةً

ரிவாயத்து:- "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறுபவருக்குப் பத்து நன்மைகள் எழுதப்படும் "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி" என்று கூறுபவருக்கு இருபது நன்மைகள் எழுதப்படும். "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத் துல்லாஹி வபரகாத்துஹு" என்று கூறுபவருக்கு முப்பது நன்மைகள் எழுதப்படும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

அஸ்ஸலாமு அலைக்கும் என்றும், ஸலாமுன் அலைக்கும் என்றும் ஸலாம் சொல்லலாம். ஸலாம் சொல்லப்படுபவர் ஒருவராக இருந்தாலும் ஸலாமுக்குரிய வாக்கியத்தில் பன்மைப் பதம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவெனில் அந்த மனிதருக்குக் காவலாக நியமிக்கப்பட்டுள்ள இரண்டு மலக்குகளுக்கும் சேர்த்தே இந்த வாக்கியமிருக்கிறது. இம்மலக்குகள் எவருக்கு ஸலாம் சொல்கிறார் களோ அவர் அல்லாஹு தஆலாவின் வேதனையை விட்டு விடுதலை யடைந்து விடுவார்.

ரிவாயத்து:- "இரண்டு முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து, ஸலாம் சொல்லி, கை கொடுத்துக் கொள்வார்களாயின்

அவர்களுக்கிடையில் ரஹ்மத் என்னும் கருணை நூறு இறங்கும். அதில் முதலாவதாக ஸலாம் சொன்னவருக்குத் தொண்ணூறும், அதற்கு பதில் சொன்னவருக்குப் பத்தும் கிடைக்கும்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. மற்றொரு ரிவாயத்தில் (மக்பிறத்தென்னும்) பிழை பொறுக்குதல் எழுபது உண்டாகின்றன. அவற்றில் அறுபத் தொன்பது மலர்ந்த முகத்துடன் ஸலாம் சொன்னவருக்குச் சேருகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வாகனத்திற் செல்பவர் கால் நடையாகச் செல்பவருக்கும் குதிரையின் மீது ஏறிச் செல்பவர் கழுதையின் மீது ஏறிச் செல்பவருக்கும், சிறுவர் பெரியவருக்கும், சொற்ப மக்கட் தொகை பெருங்கூட்டத்திற்கும் முதலாவதாக ஸலாம் சொல்வது சுன்னத்து.

اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ ؕ لَيَجْمَعَنَّكُمْ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ
لَا رَيْبَ فِيْهِ ؕ وَمَنْ اَصْدَقُ مِنَ اللّٰهِ حَدِيْثًا ۝

87. அல்லாஹ்: அவனைத்தவிர வணங்குதற்குரிய தெய்வம் (வேறு) இல்லை; உங்களை இறுதி நாளில் நிச்சயமாக அவன் ஒன்று சேர்ப்பான்; இந்த நாள் வருவ(தி)ல் சந்தேகமேயில்லை. மேலும், அல்லாஹ்வைப் பார்க்கினும் வார்த்தையில் அதிக உண்மையாளன் யார்?

“அல்லாஹு தஆலாவைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறு யாருமில்லை; அவனைப் பார்க்கினும் அதிக உண்மையுள்ளவர் ஒருவருமில்லை. நீங்கள் செய்துள்ள நன்மை தீமைகளைக் குறித்து உங்களை விசாரிப்பதற்காக உங்கள் கப்ருகளிலிருந்து உங்களை எழுப்பி ஒன்று சேர்ப்பான்” என்பது இந்த ஆயத்தின் கருத்து.

فَمَا لَكُمْ فِى الْمُنٰفِقِيْنَ فِئَتَيْنِ وَاللّٰهُ اَرْكَسَهُمْ
بِمَا كَسَبُوْا ؕ اَتُرِيْدُوْنَ اَنْ تَهْدُوْا مَنْ اَضَلَّ اللّٰهُ ؕ وَمَنْ

يُّضْلِلِ اللّٰهُ فَلَنْ تَجِدَ لَهٗ سَبِيْلًا ۝

88. ஆகவே, நயவஞ்சகர்கள் விஷயத்தில் இரு கூட்டங்களாகப் (பிரிய) உங்களுக்கு நேர்ந்ததென்ன? ஆனால், அல்லாஹ்வோ (நயவஞ்சகர்களாகிய) அவர்கள் சம்பாதித்ததைக் கொண்டு அவர்களை (இஸ்லாமாகிய சன்மார்க்கத்தை விட்டு) மாற்றிவிட்டான்; அல்லாஹ் வழி கெடுத்திருக்கின்ற (நயவஞ்சகமுள்ள) வர்களை நீங்கள் நேர் வழியிற் சேர்க்க விரும்புகின்றீர்களோ? மேலும், அல்லாஹ் எவனை (அவன் தீயசெயலால்) வழிகெடுத்து விடுகின்றானோ (அவனை நேர் வழியிற் சேர்க்க) அவனுக்காக எந்த வழியையும் நீர் பெற்றுக் கொள்ள மாட்டீர்.

முனாஃபிக்குகளிற் சிலர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கிராமப்புறத்திற்குச் செல்ல அனுமதி பெற்றுக் கொண்டு மதீனாவை விட்டுப் புறப்பட்டு ஒவ்வொரு மன்ஜிலாகச் சென்று மக்கமா நகரில் வந்து முஷ்ரிக்குகளுடன் சேர்ந்து கொண்டனர். ஆதலின், இவர்களைக் குறித்து இவர்கள் முஷ்ரிக்குகள்தான் என்றும் முஸ்லிம்கள்தான் என்றும் முஸ்லிம்கள் கூறி அபிப்பிராய பேத மடைந்து இரண்டு கூட்டமாகப் பிரிந்து விட்டனர். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது. “முனாஃபிக்குகள் விஷயத்தில் நீங்கள் இரண்டு கூட்டமாகப் பிரிந்ததற்குக் காரணம் ஒன்றுமில்லை. அவர்களது செய்கைகளின் காரணமாக அவர்களை அல்லாஹ் குஃப்ரின் பால் மாற்றி விட்டான். அல்லாஹு தஆலாவால் வழி கெடுக்கப்பட்டவரை நேர்வழியிற் சேர்த்துவிட நீங்கள் விரும்புகிறீர்களா? அவ்வாறு சேர்க்க உங்களால் முடியாது” என்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَدُّوْا لَوْ تَكْفُرُوْنَ كَمَا كَفَرُوْا فَتَكُوْنُوْنَ سَوَآءً فَلَا
تَتَّخِذُوْا مِنْهُمْ اَوْلِيَآءَ حَتّٰى يُهَاجِرُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِ ؕ